# Conservation from the AGAMAS / SIRPA SASTRAMS view point.

Conservation and Preservation of Agamas and Sirpa Sastrams are a paramount importance in these times. We, every devotees are pained to see lot of dilutions and compromises taking places in these days, leading to unhealthy arguments and litigations. Consequently any Conservation and Preservation works are delayed indefinitely resulting in the deterioration of temple structures. Because of such situations many prospective donors are unwilling / hesitating to undertake any renovation works in the HR&CE Temples.

It is also equally more important to organize more Vedic schools and enhance the existing ones to bring awareness to the devotees and to give an opportunity for willing devotees to learn the Temple rituals and Agamas.

Our Authors / Contributors in this manual are engaged in organizing Sammelanams (Congresses) and Training programmes.



DRAFT
V.S Jayabal

## Pancharatra Agamam

**Therazhandur Shri U Ve K Sriraman Bhattacharyar Swamy** – An expert in Pancharatra Agamam has organized three such sammelanams in SriRangam and Bangalore over a period of 3 years since 2017.

Speakers from all over the country participated and well attended by the devotees and Vedic school students who are learning Pancharatra Agamam.

The sammelanam conducted in Srirangam on 11,12 &13 October 2017, was mainly sponsored by Shri VS Jayabal, the Author of this manual and Dr S Velumani his brother.

அகில பாரத ஸ்ரீ பாஞ்சராத்ர ஆகம வித்வத் ஸம்மேளநம் - ஸ்ரீரங்கம் 11,12,13 OCT 2017






# அகில பாரத ஸ்ரீ பாஞ்சராத்ர ஆகம வித்வத் ஸம்மேளநம் - ஸ்ரீரங்கம் 11,12,13 OCT 2017

Sri:
Srimathe Ramanujaya Namaha

## National Conference on Sri Pancharatra Agama

**October 11,12,13 2017**
**Wednesday, Thursday & Friday**

**Venue: V.S. Mahal,**
East Adayavalanjan Street, Srirangam, Thiruchirappalli District,
Tamil Nadu, Pin : 620 006.

Sri Pancharatra Agama is the only Sastra delivered in Sri Vaikuntam by Lord Sriman Narayana.

It's main aim is to remove the illusion (darkness) and distribute the luminance (light) to the people.

In this greatest Sastra several other Sastras were used.

**āgamaṃ bharataṃ śilpaṃ vaidyaṃ jyotiSameva ca |**
**pañcaśāstrāni saṃyogāt pāñcarātram pracasyate ||**

They are Agamā Sastra, Bharata Sastra, Shilpa Sastra, Vaidhya Sastra and Jyotisha Sastra.

Even many other Sastras convey the importance of this Bagavath Sastra (SriPancharatra Agama).

In this National conference significance of this Bagavath Sastra with reference to various other Sastras will be discussed and lectures will be delivered by eminent scholars.

There will also be a question and answer session during which audience can clarify their doubts regarding Sri Pancharatra Agama. Along with this many Sri Pancharatra Agama Archakas and Kainkaryaparas, who are doing kainkaryams without any expectations for the past 3 decades will be honored.

## Mission

**Mission of this conference is to:**

1. To express that **Sri Pancharatra Agama** is not an agama which only tells about temple worship, but more than that its main aim is to enlighten all the people for their betterment.
2. To educate the future generations that in the past many centuries, numerous archakas and acharyas fought and sacrificed their wealth and lives to safeguard this Agama.
3. In future, for any kind of doubts arising regarding temple construction or renovation or re-consecration in Indian temples, this Agama can be referred for the clarification.
4. This is the only Agama that the majority of the Acharyas has used in their writings.

**All are invited to attend the conference !**
**Get the blessings of Agamaaryan !!**



## Programs

**Day - 1**

| நாள் | நேரம் | தலைப்பு | வித்வான்கள் |
|---|---|---|---|
| 11.10.2017 (Wednesday) புரட்டாசி மாஸம் 25 புதன்கிழமை | 9:00 am | தீபாரோபணம் | திரு. P.ஜெயராமன் B.Sc., B.L., Joint Commissioner / Executive Officer, ஸ்ரீரங்கம் கோயில் ஸ்ரீரங்கம் & Later ஸ்ரீ.உ.வே முரளி பட்டர் ஸ்வாமி, ஸ்ரீரங்கம் |
| | | Deepaaropanam | Thiru. P.Jayaraman B.Sc., B.L., Joint Commissioner / Executive Officer, Sri Ranganatha Swamy Temple, Srirangam & Later Sri U.Ve. Murali Battar Swamy, Srirangm. |
| | | ஜிதந்தா ஸ்தோத்ரம் | ஸ்ரீ பாஞ்சராத்ர ஆகம வித்வான்கள் |
| | | Jithanatha Sthothram | Sri Pancharatra Agama Scholars |
| | 9:15 a.m | வரவேற்புரை / அறிமுக உரை | தேரழுந்தூர் ஸ்ரீ. உ. வே. க. ஸ்ரீராமன் பட்டாச்சார்யார் ஸ்வாமி, ஸ்ரீரங்கம். |
| | | Welcome address | Therazhandur Sri U.Ve. K.Sriraman Battacharyar Swamy, Srirangam. |
| | 10:10 a.m | ரஹஸ்யத்ரய ஸாரத்தில் ஸ்ரீபாஞ்சராத்ரம் | ஸ்ரீ. உ.வே ஆதூர் ஆஸுரி மாதவாச்சார் ஸ்வாமி, ஸ்ரீரங்கம் |
| | | Rahasyatrayam in Sri Pancharatra Agama | Sri. U.Ve. Aadur Aasuri Madavachar Swamy Srirangam |
| | 11:00 a.m | சிற்பக்கலையும் ஸ்ரீபாஞ்சராத்ரமும் | Dr.தக்ஷிணாமூர்த்தி ஸ்தபதி அவர்கள், சென்னை |
| | | Temple Sculpture & Sri Pancharatra Agama | Dr. Dakshinamurthy Sthapathi Avl. Chennai |
| | 12:00 Noon | ஸ்ரீ பாஷ்யமும் ஸ்ரீ பாஞ்சராத்ரமும் | ஸ்ரீ உ.வே.மணிவண்ணன் ஸ்வாமி, திருக்கோவலூர் |
| | | Sri Bhashyam and Sri Pancharatra Agama | Sri. U.Ve. Manivannan Swamy, Thirukkovaloor. |

| நாள் | நேரம் | தலைப்பு | வித்வான்கள் |
|---|---|---|---|
| 11.10.2017 (Wednesday) புரட்டாசி மாஸம் 25 புதன்கிழமை | 3:00 pm | ஸ்ரீமத் பகவத் கீதையும் ஸ்ரீ பாஞ்சராத்ரமும் | ஸ்ரீ.உ.வே.ராமப்ரியன் ஸ்வாமி, மேல்கோட்டை திருநாராயணபுரம். |
| | | Srimad Bagavad Gita and Sri Pancharatra Agama | Sri. U.Ve.Ramapriyan Swamy Melkote, Thirunarayanapuram |
| | 4:00 pm | சரித்ரப் புகழ் வாய்ந்த ஸ்ரீ பாஞ்சராத்ரம் | ஸ்ரீ.உ.வே. ஆழ்வார் தாததாச்சாரியார் ஸ்வாமி, மேல்கோட்டை திருநாராயணபுரம். |
| | | | Sri. U. Ve Aazhvar Thathaacharyar Swamy, Melkote, Thirunarayanapuram. |
| | 5:00 pm | | ஸ்ரீ.உ.வே. கிருஷ்ணமாச்சாரியார் ஸ்வாமி, ஸ்ரீ வைஷ்ணவ ஸ்ரீ, ஸ்ரீரங்கம். |
| | | | Sri. U.Ve. Sri Krishnamachar Swamy, Sri Vaishnava Sri, Srirangam. |
| | 6:00 pm | Sri Pancharatra Agama and History | தேரழுந்தூர் ஸ்ரீ.உ.வே.ஸ்ரீநிகேதன் பட்டாச்சாரியார் ஸ்வாமி புதுச்சேரி. |
| | | | Therazhundur Sri. U. Ve. Srinikethan Battacharyar Swamy, Pondichery. |
| | 7:00 pm | ஸ்ரீ பாஞ்சராத்ரமும் ஆலய நிர்வாகமும் | ஸ்ரீ.உ.வே. லக்ஷ்மி தாததாச்சாரியார் ஸ்வாமி, மேல்கோட்டை, திருநாராயணபுரம். |
| | | Temple administration and Sri Pancharatra Agama | Sri. U. Ve. Lakshmi Thathaacharyar Swamy, Melkote Thirunarayanapuram. |

**Book to be Released : "Sri Prashna Samhithokta Kriya Paddathi"**
**Released by : Sri U. Ve. Chakrapani Battacharyar Swamy, Kumbakonam**
**First copy will be received by : Sri U. Ve Sheshadri Battacharyar Swamy, Kumbakonam**

**Vote of Thanks:** Sri. U. Ve. S. Ramesh Battar Swamy, Thiruvellarai

# அகில பாரத ஸ்ரீ பாஞ்சராத்ர ஆகம வித்வத் ஸம்மேளநம் - ஸ்ரீரங்கம் 11,12,13 OCT 2017

**Programs**
**Day - 2**

| நாள் | நேரம் | தலைப்பு | வித்வான்கள் |
|---|---|---|---|
| 12.10.2017 (Thursday) புரட்டாசி மாஸம் 26 வியாழக் கிழமை | 8:30 am | தீபாரோபணம் | ஸ்ரீ பொறியாளர் ஜெயபால் M.Tech., கோவை<br>ஸ்ரீ உ.வே. சுந்தர பட்டர் ஸ்வாமி |
| | | Deepaaropanam | Sri. Er. Jayabal, M.Tech., Coimbatore<br>Sri. U. Ve. Sundar Bhattar Swamy, Srirangam. |
| | | ஜிதந்தா ஸ்தோத்ரம் | ஸ்ரீ பாஞ்சராத்ர ஆகம வித்வான்கள் |
| | | Jithanatha Sthothram | Sri Pancharatra Agama Scholars |
| | 8:45 a.m | வரவேற்புரை / அறிமுக உரை | ஸ்ரீவிஷ்ணுதாஸ நாகேந்த்ராசார் ஸ்வாமி, மைசூர் |
| | | Welcome Address | Sri. Vishnudasa Nagendrachar Mysore |
| | 9:00 a.m | தமிழ் இலக்கியங்களில் ஸ்ரீ பாஞ்சராத்ர ஆகமத்தின் வைலக்ஷண்யம் | தேரழுந்தூர் ஸ்ரீ. உ. வே. கோஸகன் பட்டாச்சார்யார் ஸ்வாமி, புதுச்சேரி. |
| | | Tamil Literature and Sri Pancharatra Agama | Therazhundur Sri. U.Ve. Gosakan Battaacharyar Swamy, Pondichery |
| | 10:00 a.m | ஸ்ரீமத் ராமாயணத்தில் ஸ்ரீ பாஞ்சராத்ரம் | ஸ்ரீ. உ.வே. வீரராகவாச்சார் ஸ்வாமி, மைஸூர் |
| | | Srimad Ramayanam in Sri Pancharatra Agama | Sri. U. Ve Veeraragavachar Swamy, Mysore. |
| | 11:00 a.m | ஸ்ரீ பாஞ்சராத்ர ரக்ஷா ஸாரம் | ஸ்ரீ உ.வே. T. ராஜேஷ் ஸ்வாமி திருப்பதி. |
| | | Sri Pancaratraraksha Saram | Sri. U. Ve. T.Rajesh Swamy, Tirupati. |
| | 12:00 Noon | வைத்ய சாஸ்த்ரமும் ஸ்ரீ பாஞ்சராத்ரமும் | டாக்டர் ஸ்ரீ வேலுமணி அவர்கள் கோயம்புத்தூர் |
| | 01:00 p.m | Vaidhya Sastra and Sri Pancharatra Agama | Dr. Sri Velumani Avl., Coimbatore |
| | | | ஸ்ரீ ஸ்ரீநிவாஸராவ் அவர்கள் ஹைதராபாத் |
| | | | Sri. Srinivasa Rao Garu, Hyderabad. |

| நாள் | நேரம் | தலைப்பு | வித்வான்கள் |
|---|---|---|---|
| 12.10.2017 (Thursday) புரட்டாசி மாஸம் 26 வியாழக் கிழமை | 3:00 pm | ஸ்ரீ பாஞ்சராத்ரத்தில் பரத வைபவம் | ஸ்ரீ உ.வே. ஸ்தலசாயி ஸ்வாமி, பத்ராசலம் |
| | | Bharatha Shastram in Sripancharatra Agama | Sri. U.Ve. Sthalasayi Swamy, Bhadrachalam. |
| | 4:00 pm | ஸ்ரீ பாஞ்சராத்ர ஆகமமும் ஸ்ரீபாகவதோத்தமர்களும் | ஸ்ரீ ஸாது சின்மயதாஸ் ஸ்வாமி, அக்ஷர்தாம், குஜராத் |
| | | Sri Pancaratra Agamam and Sri Bagavatpttams | Sri Sadhu Chinmaydas Swamy, Akshardham, Gujarat. |
| | 5:00 pm | சில்லறை ரஹஸ்யத்தில் ஸ்ரீ பாஞ்சராத்ர ஆகமம் | ஸ்ரீ.உ.வே. கருணாகராச்சார் ஸ்வாமி, சென்னை |
| | | Sri Pancaratra agamam in Sillarai Rahasyam | Sri. U.Ve. Karunakarachar Swamy, Chennai. |
| | 6:00 pm | ஸ்ரீ பாஞ்சராத்ர ஆகம ஸித்தாந்த ஸாரம் | ஸ்ரீ.உ.வே. அரையர் ஸ்ரீராம ஶர்மா ஸ்வாமி, மேல்கோட்டை திருநாராயணபுரம் |
| | | Sri Pancaratra agamam Siddanthasaram | Sri. U.Ve. Arayar Srirama Sharma Swamy, Melkote Thirunarayanapuram |
| | 7:00 pm | நீதிசாஸ்த்ரமும் ஸ்ரீபாஞ்சராத்ரமும் | டாக்டர். ஸ்ரீ ஸ்வாமி ஸத்யப்ரஸாத் ஸ்வாமி, வேதாந்தாசார்ய, புஜ்கட்ச், குஜராத் |
| | | Neethishastra in Sri Pancaratra Agama | Dr. Swami Satyaprasad Swamy, Vedantacharya, Bhuj, Kutch, Gujarat |
| | 8:00 pm | ஸங்கீதமும் ஸ்ரீ பாஞ்சராத்ரமும் | ஸ்ரீ. உ.வே. சேஷாத்ரி ஸ்வாமி, சென்னை |
| | | Sangeetham and Sri Pancharatra Agama | Sri. U.Ve. Sheshadri Swamy, Chennai |

Book to be Released : "Sri Ishwara Samhitha" of Sri Pancharatra Agama
Released by : Sri U. Ve. Arayar Srirama Sharma Swamy, Melkote, Thirunarayanapuram.
First copy will be received by : Sri U. Ve Ramapriyan Battar Swamy, Melkote, Thirunarayanapuram.
Vote of Thanks : Thiruvellarai. Sri. U. Ve.T.V. Narayana Battar Swamy Srirangam


**Programs**
**Day - 3**

| நாள் | நேரம் | தலைப்பு | வித்வான்கள் |
|---|---|---|---|
| 13.10.2017 (Friday) புரட்டாசி மாஸம் 27 வெள்ளிக் கிழமை | 9:00 am | தீபாரோபணம் | ஸ்ரீ உ.வே.ரா. நந்தகுமார் பட்டர் ஸ்வாமி, ஸ்ரீரங்கம்<br>ஸ்ரீ. உ.வே. ஸ்ரீராம் ஸ்வாமி, மைசூர் |
| | | Deepaaropanam | Sri. U.Ve. Nandakumar Battar Swamy, Srirangam.<br>Sri. U. Ve. Sriram Swamy, Mysore. |
| | | ஜிதந்தா ஸ்தோத்ரம் | ஸ்ரீ பாஞ்சராத்ர ஆகம வித்வான்கள் |
| | | Jithanatha Sthothram | Sri Pancharatra Agama Scholars |
| | 9:15 a.m | வரவேற்புரை / அறிமுக உரை | ஸ்ரீ. உ.. வே. R.ரங்கராஜ பட்டர் ஸ்வாமி, நாகப்பட்டிணம். |
| | | Welcome address | Sri. U.Ve. R.Rangaraja Battar Swamy, Nagapattinam |
| | 9:30 a.m | ஸ்ரீ பாஞ்சராத்ரமும் ஞான வைபவமும் | ஸ்ரீ. உ.வே. ஸ்ரீ மணிவண்ணன் பட்டர் ஸ்வாமி, திருச்சானூர் |
| | | Sri Pancharatra Agama and GNyana Vaibhavam | Sri. U. Ve. Sri Manivannan Battar Swamy, Thiruchanur |
| | 11:00 a.m | ஆகமப்ராமாண்யம் | ஸ்ரீ உ.வே. லக்ஷ்மீ குமார தாத்தாசார் ஸ்வாமி ஸ்ரீரங்கம் |
| | | Agamapramanyam | Sri. U. Ve. Lakshmi Kumara Thathachar Swamy, Srirangam |
| | 12:00 Noon | ஸ்ரீ பாஞ்சராத்ரமும் ஜ்யோதிஷமும் | ஸ்ரீ உ.வே. கிரிதரன் ஸ்வாமி,<br>ஸ்ரீ உ.வே. முரளி ஸ்வாமி, பெங்களூர் |
| | | Sri pancharatra Agamam and Jyothisham | Sri U.Ve. Giridaran Swamy,<br>Sri U. Ve. Murali Swamy, Bangalore |

| நாள் | நேரம் | தலைப்பு | வித்வான்கள் |
|---|---|---|---|
| 13.10.2017 (Friday) புரட்டாசி மாஸம் 27 வெள்ளிக் கிழமை | 03:00 p.m | ஸ்ரீ பாஞ்சராத்ரமும் அஷ்டாதச ரஹஸ்யமும் | ஸ்ரீ.உ.வே. A.V.ரங்காச்சார் ஸ்வாமி, சிதம்பரம். |
| | | Sri Pancaratra Agamam and Astadasa Rahasyams | Sri.U.Ve.A.V. Rangachar Swamy, Chidambaram. |
| | 4:00 pm | வேதாந்தங்களும் ஸ்ரீ பாஞ்சரத்ரமும் | காணிபாக்கம் ஸ்ரீ உ.வே. ஸ்ரீ தேவநாதாச்சார் ஸ்வாமி, Vice Chancelor at Vedic University, Tirupati |
| | | Sri Pancaratra Agamam and Vedantas | Kanipakkam Sri K.R. DevanathacharSwamy, Vice Chancelor at VedicUniversity, Tirupati |
| | 5:00 pm | ஏகாயன வேதமும் வேதங்களும் | ஸ்ரீ உ.வே. லக்ஷ்மீ நரஸிம்ஹாச்சார் ஸ்வாமி, ஒரகடம் |
| | | Ekayana Vedam and other Vedas | Sri U.Ve. Lakshmi Narasimhachar Swamy, Oragadam. |
| | 6:00 pm | ஆகமமும் ஆழ்வார்களும் | திருவெள்ளறை ஸ்ரீ.உ.வே. அம்மாள் ஆசார்யன் விஷ்ணுசித்தன் ஸ்வாமி, ஸ்ரீரங்கம். |
| | | Alwars and Sri Pancaratra Agamam | Thiruvellarai Sri. U.Ve. Ammal Acharyan Vishnuchiththan Swamy, Srirangam. |
| | 7:00 pm | ஸ்ரீ பாஞ்சராத்ரமும் பகவத்விஷயமும் | ஸ்ரீ.உ.வே. M.A.வேங்கட க்ருஷ்ணன் ஸ்வாமி, திருவல்லிக்கேணி |
| | | Sri Pancaratra Agamam and Bagavadvishyam | Sri. U.Ve. M.A. Venkata Krishnan Swamy, Thiruvallikeni |

Book to be Released : "Sri Parameshwara Samhitha"
Released by : Sri U. Ve. Parasara Badri Narayana Battar Swamy, Sriranam.
First copy will be received by : Sri U. Ve S.K. Rangaraja Battar Swamy, Srirangam
Vote of Thanks : Thiruvellarai. Sri. U. Ve.T.V. Ramaswamy Battar Srirangam

## அகில பாரத ஸ்ரீ பாஞ்சராத்ர ஆகம வித்வத் ஸம்மேளநம் - ஸ்ரீரங்கம் 11,12,13 OCT 2017







## National Conference on SRI PANCHARATRA AGAMA - II Bengaluru - 30 NOV & 01 DEC 2018






Nationa1 Conference on SRI PANCHARATRA AGAMA - II

Bengaluru - 30 NOV & 01 DEC 2018


Sri:

Srimathe Ramanujaya nama:

National Conference on SRI PANCHARATRA AGAMA – II Bengaluru

Mission

Mission of this conference is to:

1. To express that Sri Pancharatra Agama is not an agama which only tells about temple worship, more than that its main aim is to up-grade all people for their betterment.

2. To educate the next generation that during many centuries, numerous archakas and acharyas fought and sacrificed their wealth and lives to safeguard this Agama.

3. For any kind of doubts arising regarding temple construction or renovation or re-consecration in Indian temples, this Agama can be approached for the clarification.

4. This is the only Agama that the majority of the Acharyas has used in their works.

All are invited to attend the conference !
Get the blessings of Agamaaryan !!



Sri:

Srimathe Ramanujaya nama:

National Conference on SRI PANCHARATRA AGAMA – II Bengaluru

Day 1 - November 30 (Friday)

| | |
|---|---|
| 7 am | All Vidvans and Vidyarthis assemble at H.H Sri Yadugiri Yathiraja Jiyar Mutt,Bengaluru |
| 9:30 am | Sri Yadugiri Narasimhar Sannathi Mangalasasanam at Melkote |
| 10:30 am | Thiru Veedhi pradakshinam Sri Sampathkumarasvami mangalaasasanam |
| 11 am | Sri Satvatamrutam, Sri Satvatamruta saram Pustaka samarpana to Sri Sampathkumara swamy |
| 5:30 pm | Sri Vishnu sahasranama Parayanam at H.H. Yatdugiri yathiraja Jiyar Mutt, Bengaluru. |
| 6 :30 pm | Jitante Stotra Parayanam |
| 7 pm | Upanyasam by Various vidwans on Sri Pancharatra Agama |


Sri:

Srimathe Ramanujaya nama:

Day 2 - December 1 (Saturday)

| | |
|---|---|
| 7 am | Vidwans Ahvanam and Poorna kumba mariyada at SriVenugopalan sannadhi, Bengaluru Thiruveedhi Pradakshinam. |
| 8:30 am | Deepaaropanam by H.H Jiyarswaami & Vidvans SRI PANCARAATRA AGAMA PRAARTHANAI |
| 9 am | Welcome address by Sri Pancharatra Agama Vidwan, Therazhundur, Sri.U.Ve K. Sriraman Battacaryar Swamy, Srirangam. |
| 9:30 am | Paper presentation on Sri Pancharatra Agama topics by various scholars and students & Question hour |
| 11:30 am | Sri Satvatamrutam, Sri Satvatamruta saram Pustaka avishkaranam (Book release) |
| 12 noon | H.H.Sri Yadugiri Yathiraja Jeeyar swamy mangalasasanam |
| 12:30pm | Felicitation address by Sri. U. Ve. Ramu Swamy |
| 1:30 pm | Video presentation on Sri Pancharatra Agama topics by various scholars and students |
| 3 pm | Honoring H.H.Jeeyar Swamy, Sri Pancharatra Agama Vidwans and Students |

All are invited
Shubham





PARJANYA SHANTHI AND VISHWAKSHEMA MAHA SUDARSHANA YAGNYAM

**National Conference on Sri Pancharatra Agama – III**

with the blessings of

**Sri Sri Yadugiri Yathiraja Jeeyar Swamigal,** Melkote, Karnataka

From 19-10-19 (Saturday) to 21-10-19 (Monday)

**MAHA SUDARSHANA YAGNYAM** – Near Goratham, SRIRANGAM

Vidvat Sammelanam (Conference) - **V.S. MAHAL,** East Adaiyavalainjan St, SRIRANGAM

For Vishvakshema, Parjanya Shanti for benevolent rains, Maha Sudarshan Yagnyam and Akila Bharata Sri Pancharatra Agama Vidvat Sammelanam-III continued by Sri Bhagavad Ramanujacharya Sahasrabdi (1000 years continuation programme) will be held.

Various research scholars, vedic pandits and many more are assembled to perform the Vishwakshema Maha Sudarshana Yagnyam. This event will be a life time event and it will be a great opportunity to meet all these scholars at one place and to get prosperity, health and many more with the blessings of Maha Sudarshana.

As part of this event, an exhibition describing the greatness of Sri Pancharatra Agama and other Sastras will be displayed, such that audience can enhance their knowledge on this Agama.

The great Sri Pancharatra Agama book, "Sri Sriprashna Samhita" which describes the greatness of Sri Sudarshana Bhagavan and many more for the welfare of the society, will be released on the last day of the event. The contents of this book were narrated by Sriman Narayana in Kshirabdi to Maha Lakshmi.

Agama researchers and scholars, Vedic pandits from various places are going to participate in this event. Hence, we request you all to participate in this splendid event and get the blessings of Agamaacharyan (Sriman Narayana).

+++++++++++++++

V.S.

19 October 2019 21 October 2019



(19-10-2019)

| | |
|---|---|
| 06.00 | Suprabatham & Chathusthana Pooja, Veethi Pradhakshinam |
| 06.30 | Veda / Prabandha Parayanam followed by Sudarshana Homama |
| 09.30 | Poornahuthi |
| 10.30 – 12.00 | "Azahi Mazhaikanna" & Parjanya Sukta Parayanam at **VS Mahal** Presided by Sri. **U.Ve. Orugadam Lakshmi Narasimhachar swamy** |

**Sri Pancharatra Sabha**

| | |
|---|---|
| 3.30 | Deeparopanam - Sri **Jayapal** Avl. & Dr. **Velumani** Avl. |
| 4.00 | Introductory Address - Therazhundur Sri **U.Ve. Gosakan Bhattacharyar Swamy** |
| 4.30 | Sri Pancharatra Agama in the view of Alwars by Sri **U. Ve. Parasara Badri Narayana Battar swamy,** Srirangam |
| 5.30 | Parjanya Suktam meaning by **Sri. U. Ve. Karunakarachar swamy** |
| 6.00 | Facets of Sri Pancharatra Agama - Therazhundur Sri **Balaji Bhattachar swamy** & other distinguished Sri Pancharatra Agama budding scholars |
| 8.00 | "Sri Sriprashna Samhita Saram" in Tamil - Book release<br>Vote of Thanks - Sri **U.Ve. Sriniketan Bhattachar swamy** |



(20-10-2019)

| | |
|---|---|
| 6.00 | Suprabatham & Chathusthana Pooja, Veethi Pradhakshinam |
| 6.30 | Veda / Prabandha Parayanam followed by Sudarshana Homama |
| 9.30 | Poornahuthi |
| 10.30 – 12.00 | "Azahi Mazhaikanna" & Parjanya Sukta Parayanam at **VS Mahal** Presided by Sri. **U.Ve. Nagai Veeraragavachar Swamy,** Mysore |

**Sri Pancharatra Sabha**

| | |
|---|---|
| 3.30 | Deeparopanam - Sri **U. Ve. S.K. Rangaraja Bhattar Swamy,** Srirangam<br>Sri **Jayaraman** Avl., J.C., Srirangam Temple &<br>Sri **U.Ve. Madavan Battar,** Annan Koil |
| 4.00 | Introductory Address - Therazhundur Sri **U.Ve. Srinivasa Bhattachar Swamy** |
| 4.30 | Sri Pancharatra Agama and Chatur Vedas by Sri. **U.Ve. Sthlasayi swamy,** Badrachalam, Telangana |
| 5.00 | Sri Pancharatra Agama and Nambillai - Sri **U.Ve. P.T. Sheshadri Swamy,** Chennai |
| 5.30 | Sri Pancharatra Agama and Yajur veda - Sri **U.Ve. Ramanuja Paatrachar Swamy,** Kumbakonam |
| 6.00 | Sri Pancharatra Agama in Sama Veda - Dr. Sri. **U.Ve. Venkatesh swamy,** Kumbakonam |
| 6.30 | Facets of Sri Pancharatra Agama - Thirukoshtiyur Vasu Swamigal & other distinguished Sri Panchratra Agama budding scholars |
| 8.00 | "Sri Pancharatra Agamoktha Sri Purushothama Samhita" in five languages - Book release<br>Vote of Thanks - Therazhundur Sri **U.Ve. Harisundar Bhattachar Swamy** |



(21-10-2019)

| | |
|---|---|
| 6.00 | Suprabatham & Chathusthana Pooja, Veethi Pradhakshinam |
| 6.30 – 9.30 | Veda / Prabandha Parayanam followed by Sudarshana Homam<br>Vasodhara Maha Poornahuthi in the presence of **Sri Sri Yadugiri Yathiraja Jeeyar Swamigal,** Melkote, Thirunarayanapuram |
| 10.30 – 12.00 | Azahi Mazhaikanna" & Parjanya Sukta Parayanam at **VS Mahal** Presided by Sri. **U.Ve. A.V. Rangachar swamy** |

**Sri Pancharatra Sabha**

| | |
|---|---|
| 3.30 | Deeparopanam - Sri **U. Ve. Chakrapani Bhattacharyar Swamy,** Kumbakonam & Sri **U.Ve. Murali Bhattar Swamy,** Srirangam |
| 4.00 | Sri Pancharataram in the view of Vishistadvaitam - **Sri Sri Yadugiri Yaythiraja Jeeyar swamigal,** Melkote, (Thirunarayanapuram) |
| 4.30 | Sri Archaka Vibhavam in the view of Alwars - Sri **U.Ve. A.V. Rangacharyar Swamy** |
| 5.00 | Sri Pancharatram as served by Arayars - Sri **U.Ve. Gomadam Balamukundachar Swamy** |
| 5.30 | Yoga thathvas in Sri Panchratra Agama - Srimathi Haripriya Devanathan, Chidambaram |
| 6.30 | Honoring Sri Pancharatara Agama Scholars and Vidhyarthies |
| 7.00 | Vote of Thanks - Therazhundur Sri **U.Ve. SriRaman Bhattachar Swami** |

HONARARY INVITEES

For More Details Please Contact :

**Therazhundur K. Sriraman Battacharyar - 9791 702 035**

**Therazhundur S. Balaji Battacharyar - 860 87 940 34**

## South Indian Temple Architecture.

**The Indian Institute of Technology – Madras (IIT-M)** and **National Centre for Safety of Heritage Structures (NCSHS)** also headquartered in Madras requested our assistance to deliver a series of lectures on the South Indian Temple Architecture to enhance their knowledge and understanding of South Indian Temple Architecture.

After discussions in our **Shri Punderikatcha Perumal RajaGopuram Thiruppani Committee** our Sthapathi Shri. Kumaragurubharan, one of the contributors of this manual agreed to this proposal and he had delivered a series of 24 lectures in Tamil language over a period June 2017 to November 2019 at **IIT-M** campus.

DRAFT
V.S.Jayabal

These programmes were well attended by the faculty of **IIT-M** Civil and Structural Engineering Department, faculty from **NCSHS** and the persons interested in such programmes from the public also participated and there was a healthy interaction.




HR&CE Department in association with **IIT-Madras** is

working since October 2019 to bring out the English version of these 24 lectures in the form of a booklet for the benefit of all the devotees and the students of the **Government College of Architecture and Sculpture, Mamallapuram** and similar such colleges. These copies will also be made available at major temples as well as at HR&CE Headquarters and the Educational Institutions teaching the Temple Architecture.


DRAFT
V.S Jayabal

## Sarva Veda Parayanam.

Shri VS Jayabal, the Author of this manual and Dr S Velumani his brother and their families organized a 5 days Sarva Veda Parayanam in Shree Punderikatcha Perumal Temple, Thiruvellarai between 1 to 5 November 2015.

About 80 students from Tirupathi Veda padasalai learning Rig Vedam, Yajur Vedam, Sama Vedam and Adharvana Vedam and





experts from other part of the Country also participated.

A group of about 300 devotees from Coimbatore also joined and were chanting Naalayira Divya Prabhandham. In addition Scholars in Sreemath Ramayana Parayanam, Viraada Parva

Parayanam, Sreemath Bhagavatham and Bhagavad Gita also participated.

The devotees participated in this Sarva Veda Parayanam mentioned to us that such an event was not held in recent times as far as their memory goes.

Such training and Vedic chanting programmes will enhance the cultural / spiritual values and significance of our Temples and Hindu religion.

This is one of the primary ways of conservation, preservation and maintenance of our Agamas and Sirpa sastrams.

The Part 2, 3, 4 & 5 of this manual will be dealing more specifically on their respective subjects as briefed in the scope of the corresponding manuals.

DRAFT
V.S.Jayabal





Rangoli Art - Narasimha Avataram
by the Vedic experts

## மந்த்ர ராஜ பத ஸ்தோத்ரம்

ஸ்ரீமன் நாராயணனிடம் ப்ரம்மா, சிவன், விஷ்வக் சேனர், கருடன், ஆதிஷேசன் ஆகியோர் ஐந்து இரவுகளில் பாஞ்சராத்ர ஆகமத்தை கற்று கொள்கிறார்கள்.

பகவானை எளிமையாக உபாசிக்கும் முறையை நாரதர் கேட்க பரமசிவனால் சொல்லப்பட்டது. அஹிர்புத்ந்ய ஸம்ஹிதை.

இதில் நரஸிம்ஹனை உபாசிக்கும் மந்திரத்திற்கு மந்த்ர ராஜம் என்று பெயர். இது மந்திரங்களுக்கு எல்லாம் ராஜா.



Rangoli Art - Varaha Avataram
by the Vedic experts

இந்த மந்த்திரத்தில் உள்ள பதங்களை (வார்த்தைகள்) கொண்டு எல்லோரும் வழிபட சொல்லப்பட்டது மந்த்ர ராஜ பத ஸ்தோத்திரம்.

DRAFT
V.S.Jayabal


## Sri Lakshmi Narasimha Homam




About 40 Vedic experts from Uduppi performed the above Homam in August 2019. We understand from them and the Archagars, that this kind of an elaborate Homam is being conducted after almost 80-100 years



DRAFT
V.S.Jayabal



Aulmighu Varadharaja Perumal Temple - Kanchipuram



# 2

## Part 2



Shri. Mahesh


# PANCHARATRA & VAIKANASA AGAMAM

DRAFT


### Scope of this manual

This manual describes the key aspects of CONSERVATION and PRESERVATION of temples from Agama point of view.

1. The manual explains the salient features of both Pancharatra / Vaikanasa Agamam.
2. The conservation practices for the Panchaloga Moorthies / Vigraghams and the Uthchavar (the main deity in sanctum sanctorum).
3. The role of the temple priests including Sthalathars / Theerthakaararkal and Archagars in the conservation process.
4. Also explains the different rituals in the Temple by the various people holding different titles performing the Poojas to the Deitees and Temple festivals.
5. The different types of musical instruments used in the temples



Shree Garuda Statue - Chennakeshava Temple Main Entrance - Belur, Karnataka



# Contents


2.1 கோவில் முக்யத்வம் 129

2.2 கோவில்களால் பயன் 137

2.3 வடகலை, தென்கலை விளக்கம் 142

2.4 கோவிலும் அரசர்களும் 146

2.5 ஆகம சாஸ்த்ரம் 152

2.6 ஆகமம் 154

2.7 Roles of Archagars 165

2.8 திருவாராதனம் 179

2.9 பிரம்மோத்ஸவம் 187

2.10 ஸ்ரீ வைகானஸ பகவத் சாஸ்திரத்தின் மாஹாத்ம்யம் 197

2.11 ஸ்ரீ பாஞ்சராத்ரமும் ஸ்ரீ ராமாநுஜரும் & Role of Sthalathars 230

2.12 Conclusions 252

2.13 Bibliography 259

2.14 வைஷ்ணவ ஜீயர் மற்றும் மடாதிபதிகளின் பரிந்துரைகள் 260


DRAFT
V.S.Jayabal

## 2.1 கோவில் முக்யத்வம்

அரிது அரிது மானிடராகப் பிறத்தல் அரிது என்ற மூதுரைக்கு ஏற்ப பல பல பிறவிகளுக்குப் பிறகு நம்முடைய புண்ய விசேஷத்தினால் மானிடப் பிறவியை அடைகிறோம். மானிடப் பிறவியின் பயனே பகவானை அறிந்து உணர்ந்து அவனை அடைவதற்காகத்தான், அவனை அடைவதற்கான வழிகளையும், விதிமுறைகளையும் மஹரிஷிகள் நமக்கு காட்டியுள்ளார்கள். மனிதனுக்கு மட்டும் தான் தன்னை உணரும் புத்தியைக் கொடுத்துள்ளான். மற்ற விலங்குகளுக்கு மனிதர்களைப் போல் கை, கால்கள், உடம்பு முதலியவைகள் இருந்தாலும் பகவானை உணர முடியாது. மிருகங்களைப் போல் நாமும் உணவும், உறக்கமும் ஈனவிருத்தியும் மட்டும் செய்து கொண்டு லட்சியம் இல்லாமல் அலைந்து திரிந்தால் நம் பிறவி வீணே. நமக்கு பகவான் கொடுத்துள்ள பகுத்தறிவைக் கொண்டு நம் வாழ்வை பயனுள்ளதாகச் செய்ய வேண்டும்.

DRAFT V.S. Jayabal

யுகங்கள் நான்கு - கிரேத, திரேத, துவாபர, கலி என்று, ஒவ்வொரு யுகத்திலும் பகவானை அடையும் வழிகளை வெவ்வேறாக வகுத்துள்ளார்கள். கிரேத யுகத்தில் "தியானம்" நம் இந்திரியங்களையும் மனதையும்

அடக்கி யோக சாஸ்த்ரப்படி தியானித்து பகவானை அடைய வேண்டும். இப்படிச் செய்வது அனைவருக்கும் முடிந்த காரியமல்ல.

திரேதா யுகத்தில் "யாகம்" "தேவதா உத்தேஸ்ய த்ரவ்ய த்யாகோ யாக:" என்கிறார்கள் மீமாம்சகர்கள். நாம் விரும்பும் தேவதைகளை முன்னிட்டு நெய் முதலிய திரவியங்களை பகவத் ப்ரீதிக்காக அக்நியில் சேர்க்க வேண்டும். மேலும் செய்து வைக்கும் ரித்விக்குகளுக்கு நிறைய ஸம்பாவனையும் செய்ய வேண்டும். இது எல்லோராலும் முடியாத காரியம், அரசர்களே செய்தார்கள் என்று அறிய முடிகிறது.

தம்புரா



கி.பி. 16-ஆம் நூற்றாண்டு

துவாபரயுகம் - "பூஜை" நம் மனதிற்கு வசமாகும் ரூபத்தை நம்மால் முடிந்த உலோகத்தில் (தங்கம், வெள்ளி, தாமிரம்) முதலியவற்றில் அழகாகச் செய்து, அந்த மூர்த்திகளை விதிப்படி பிரதிஷ்டை முதலியவற்றைச் செய்து பூஜிக்க வேண்டும். சாதாரண மனிதர்களால் முடியாத காரியம்.

கலியுகம் - "நாமகீர்த்தனம்" பகவானுடைய திவ்ய நாமங்களை பாடிடுவது, இதுவும் புண்யம் செய்தவர்களால் மட்டும் செய்யக் கூடியது.

DRAFT
K.S.Jayabal

ஒவ்வொரு யுகத்திலும் மனிதர்களுடைய மனம் பலத்தை இழந்து வருவதினால் விதிகளை மாறி மாறி விதித்துள்ளார்கள். தியானம் செய்ய அமைதியான மனதும் சுத்தமான இடமும் தேவை. அப்படிச் சாத்தியமில்லாது போகவே, யாகத்தில் பகவானை ஆராதித்தார்கள். சுத்த திரவியங்களும் நீண்ட நாட்கள் செய்வதற்கான சக்தி இல்லாது போகவே பகவானை திருமேனிகளாகச் செய்து வணங்கினார்கள். இதற்கும் சௌகர்யங்கள் வேண்டும். சாதாரண மனிதர்களுக்கு மனதை அடக்கி தியானம் செய்து அகக்கண்களால் பகவானைக் காண முடியவில்லை. பெரிய பொருட் செலவில் நிறை தக்ஷிணைகளுடன் யாகங்களையும் செய்ய முடியவில்லை. விக்ரஹ ஆராதனமும் வசதி உள்ளவர்களுக்கு மட்டுமே செய்ய முடிந்தது. இப்படி எந்த வகையிலும் முடியாதவர்களுக்கு சுலபமாக பகவானைக் காண ரிஷிகள் தங்கள் தபோ பலத்தினால் பொதுவான இடங்களில் கோவில்களை நிர்மாணம் செய்து அதில் பகவானை பிரதிஷ்டை செய்து சாதாரண மக்கள் தங்கள் ஊனக் கண்களால் காணச் செய்தார்கள். நாம் நினைத்த போது சுலபமாகச் சென்று தரிசிக்க மிகச் சிறந்தது கோவில் வழிபாடு தான்.

சாதாரண மனிதர்களுக்காக பல மஹரிஷிகள் பல

DRAFT
V.S.Jayabal

காலம் தபஸ் செய்து, தங்களுக்கு காட்சியளித்த பகவானை அப்படியே அர்ச்சா திருமேனிகளாக உலகம் உள்ளவரை இருந்து "பின்னானார் வணங்கும் சோதி" என்று பிற்காலத்தில் வரும் பக்தர்களுக்கு அருள் புரியச் செய்தார்கள். இப்படி ரிஷிகளுடைய தபஸ்ஸுக்காக காட்சி அளித்த பகவானின் எளிமையைக் கண்டு அந்த ரிஷிகள் பிரார்த்தனைக்கிணங்க நிலையாக நின்ற எம்பெருமானை அந்தந்த ஷேத்ரங்களில் மங்களாசாசனம் செய்து அந்த ஷேத்ரங்களை திவ்ய தேசங்களாகச் செய்தார்கள் ஆழ்வார்கள். அநேக திவ்ய தேசங்களில் எம்பெருமானுடன் ரிஷிகளையும் கர்ப்ப க்ருஹத்தில் இன்றும் காணலாம்.

ஸ்ரீ வைகுண்டத்திலும், திருப்பாற்கடலிலும் மற்றும் ராம கிருஷ்ணாதி அவதாரங்களைச் செய்த பகவானை திவ்ய தேசங்களில் கண்டார்கள் ஆழ்வார்கள். "பரன் சென்று சேர் திருவேங்கடமாலை" என்றும் "பார்த்தன் தன் தேர் முன் நின்றானை திருவல்லிக்கேணி கண்டேனே" என்றும் "இன்னார் தூதன் என நின்றான் எவ்வுள் கிடந்தானே" என்றும் "ஆனாயன் ஆனானைக் கண்டது தென்னரங்கத்தே” என்றும், “பெருநிலம் ஈரடி நீட்டிப் பண்டொரு நாள் அளந்தவனை யான் கண்டது அணிநீர் தென்னரங்கத்தே” என்றும் இப்படி ஸ்ரீ வைகுண்டத்தில் உள்ள எம்பெருமான் திருவேங்கடமலை மேல் நமக்காக

DRAFT V.S.Jayabal

நிற்கிறார் என்றும், வராஹ, ராம, கிருஷ்ணாதி அவதாரங்களைச் செய்த எம்பெருமானை திருவரங்கம் முதலிய திவ்ய தேசங்களிலே கண்டேனே என்றும் பாடுகிறார்கள் ஆழ்வார்கள். நமக்கும் இப்படித் தான் திருக்கோவில்களில் உள்ள எம்பெருமானைக் காண வேண்டும் என்றும் வழி காட்டுகிறார்கள்.

த்யாயன் க்ருதை: யஜன் யக்ஞை: த்ரேதாயாம்
த்வாபரே அர்ச்சயந் !
யதாப்னோதி ததாப்னோதி கலௌ சங்கீர்த்ய
கேசவம்

- ஸ்ரீவிஷ்ணு புராணம்

கிரதயுகத்தில் தியானத்தாலும், திரேதா யுகத்தில் யக்ஞங்களாலும், துவார யுகத்தில் பூஜை செய்வதாலும் கிடைக்கும் அனைத்து பலன்களும் கலியில் பகவானைப் பாடினாலே கிடைக்கும். இதைத் தான் நமக்கு ஆழ்வார்கள் காட்டினார்கள். நம் ஊரில் உள்ள திருக்கோவில்களில் எழுந்தருளியுள்ள எம்பெருமானை ஆழ்வார்கள் அருளிய திவ்யபிரபந்தங்களைப் பாடினாலே பிறவிப் பயனை சுலபமாக அடைந்து விடலாம். நாம் இதற்கு முயற்சி செய்வோம். கலி தர்மமான திருநாம கீர்த்தனம் செய்த பலனும் சுலபமாக கிடைக்கும், ரிஷிகளுடையவும்

ஆழ்வார்களுடையவும் திவ்ய சூக்திகளைப் பாடினாலேயே பகவான் மிகவும் சந்தோஷப்பட்டு நம்மை அநுக்ரஹிப்பான்.

| | | | |
|---|---|---|---|
| 1) | கிருதயுகம் | - | 17,28,000 வருடங்கள் |
| 2) | திரேதாயுகம் | - | 12,96,000 வருடங்கள் |
| 3) | துவாபரயுகம் | - | 8,64,000 வருடங்கள் |
| 4) | கலியுகம் | - | 4,32,000 வருடங்கள் |

4 யுகங்கள் சேர்ந்தது மகாயுகம் அல்லது சதுர்யுகம். சதுர்யுகம் 43,20,000 வருடங்கள்.

12 சதுர்யுகங்கள் சேர்ந்தது ஒரு மன்வந்தரம்
மன்வந்தரம் 1,72,80,000 வருடங்கள்

14 மன்வந்தரங்கள் சேர்ந்தது ஒரு கல்பம்.
ஒரு கல்பம் 290,30,40,000 வருடங்கள்

கல்பங்கள் மொத்தம் 30, முதல் கல்பமான வாமதேவ கல்பத்தில் 290,30,40,000 ஆண்டுகள் முடிந்து இரண்டாவது கல்பமான ஸ்வேத வராஹ கல்பத்தில் சுவாயம்புவ, சுவாரோசிக்ஷ, ஔத்தம, தாமச, ரைவத, சாக்ஷிஷ என்று 6 மன்வந்த்ரங்கள் முடிந்து 7வது மன்வந்த்ரமான வைவஸ்த மன்வந்த்ரத்தில் 27,

DRAFT v.s.Jayabal

சதுர்யுகங்கள் முடிந்து 28 சதுர்யுகத்தில் கிருத, திரோத, துவாபரயுகங்கள் முடிந்து கலியுகம் தொடங்கி 5122 வருடத்தில் தற்போது நாம் உள்ளோம்.

நாம் சுலபமாக பகவானை சேவிக்க பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே திருக்கோயில்களை நிர்மாணித்து நம்முடைய கலாச்சாரத்தையும் பாரம்பரியத்தையும் மற்றும் கட்டிடக் கலையையும் நமக்கு விட்டுச் சென்றுள்ளார்கள். முன்னோர்களுடைய பாரம்பரிய முறைகளை (சாந்து காரை மற்றும் கருங்கற்களால்) மாற்றாமல் தற்போதும் நாம் பாதுகாக்க வேண்டும். ஏனெனில் நாகரீகமான முறையில் சீக்கிரமாக வேலைகள் முடிய வேண்டுமென சிமெண்ட் மற்றும் பிளாஸ்டிக் முதலியவற்றால் நாம் செய்யும் கட்டிடங்கள் மற்றும் பாலங்கள் நம் வாழ்நாளிலே சரிந்து விழுவதையும் பார்த்துள்ளோம். ஆனால் ஆயிரக்கணக்கான வருடங்களாக நிமிர்ந்து நிற்கும் நம் முன்னோர்களுடைய கட்டிடக்கலை எத்தனை இடி மின்னல்கள், மற்றும் பூகம்பம், வெள்ளம் முதலியவற்றால் எந்தச் சேதமும் அடையாமல் நிற்கின்றன. எனவே நாமும் திருக்கோவில்களை பெரியோர்கள் வழியிலே பராமரித்து இன்னும் ஆயிரம் ஆண்டுகள் விளங்கச் செய்வோம்.




நம்மிடம் பராமரிக்கும் மார்க்கமோ, அதற்கு வேண்டிய

DRAFT
V.S.Jeyabal

திரவியங்களோ, (சாமான்களோ) அல்லது ஸ்தபதிகளோ இல்லாவிட்டால் தான் நாம் அயல்நாட்டு முறைகளை பின்பற்ற வேண்டும். வழி இல்லாவிட்டால் தான் மாற்று வழிகளைக் காண வேண்டும். நம்முடைய பாரம்பரிய நடைமுறைகளைக் கொண்டு திருப்பணிகளை மேற்கொண்டால் நமக்கு இரண்டு லாபங்கள் உண்டு.

1) பாரம்பரிய வேலை தெரிந்தவர்களை ஊக்குவிப்பதின் மூலம் அவர்களையும் அந்த வேலை முறைகளையும் அழியாது பாதுகாக்கலாம். நம் கட்டிடக் கலையையும் இன்னும் பல நூற்றாண்டுகள் விளங்கச் செய்யலாம்.

2) மேலும் பல ஆயிரம் ஆண்டுகள் நாம் பாரம்பரியச் சின்னங்களை பழைமை மாறாமல் காப்பாற்றலாம். காலத்தினால் அழியாமல் செய்து நம் முன்னோர்களுடைய பெருமையை உலகறியச் செய்யலாம்.

எனவே நவீன தொழில் நுட்பங்களை நம் கோவில் திருப்பணிகளில் புகுத்தாமல் இருப்பதே நம் திருக்கோயில்களுக்கு நாம் செய்யும் மிகச் சிறந்த பாதுகாப்பாகும். இதில் வெற்றி கண்ட நம் முன்னோர்களுடைய ஆசியையும் பெறலாம்.

DRAFT V.S.Jayabal

## 2.2 கோவில்களால் பயன்

ஸந்தர்சநாதகஸ்மாச்ச பும்ஸாம் ஸம்பூட சேதஸாம்
குவாஸநா குபுத்திச்ச குதர்க்க நிசயச்சய:
குஹேதுச்ச குபாவச்ச நாஸ்திகத்வம் லயம் வ்ரஜேத்

பலவித பாபங்களால் மதிமயக்கம் கொண்டவர்கள் அர்ச்சா திருமேனி கொண்டு நிற்கும் எம்பெருமானின் ரூபத்தை தற்செயலாக வணங்கினாலும் அவர்களுடைய தீய வாசனை வஞ்சனைகளின் தொகுப்பு, தீய காரணங்கள், தீய எண்ணங்கள் மற்றும் நாஸ்திகத் தன்மை அழிந்துவிடும்.

அகஸ்மாத்தாக கண்டவர்களுக்கே பகவான் பேரருள் புரிகிறான். சிரத்தையாக வணங்கினால் அதன் அருமையைச் சொல்லவும் வேண்டுமோ? அறிவு தடுமாற்றம் என்னும் நோய்க்கு ஏற்ற மருந்தாக அர்ச்சாரூபம் உள்ளது.

"யே யதா மாம் ப்ரபத்யந்தே தாம்ஸ் ததைவ பஜாம் யஹம் "

எந்த பாவத்தில் (bhavathil) நீங்கள் என்னை எந்த வழியில் வணங்குகிறீர்களோ அப்படியே நான் உங்களுக்கு

DRAFT
V.S Jayabal

காட்சி அளிக்கிறேன். "தமருகந்தது எவ்வுருவம் அவ்வுருவம் தானே" என்று மனதிற்கும் வாக்கிற்கும் எட்டாதவன் தன்னை ஆஸ்ரயித்தவர்களுக்காக எளிய வடிவு கொள்கிறான்.

ஆபீடாந் மௌலி பர்யந்தம் பச்யத: புருஷோத்தமம் !
பாதகாந்யாசு நஸ்யந்தி கிம்புநஸ் தூப பாதகம் !!
- சாண்டில்ய ஸம்ஹிதை




பகவானை திருவடிப்பீடம் முதல் திருமுடி வரை சேவிப்பவர்களுக்கு மிகப் பெரிய பாபங்களே நசிந்து விடுகிறது, சிறிய பாபங்களைப் பற்றி கேட்பானேன். இப்படி நமக்கு பகவானை ஆழ்ந்து அனுபவிக்க "அமலனாதிபிரான்" என்று தொடங்கும் பாசுரங்களை திருப்பாணாழ்வார் அருளிச் செய்கிறார். திருவடி தொடங்கி திருமுடி வரை அனுபவிக்கிறார். இதே கிரமத்தில் ஸ்வாமி தேசிகனும் "பகவத்தியான ஸோபனம்" என்ற ஸ்தோத்ரத்தையும் அருளிச் செய்கிறார். இதில் நம்மால் முடிந்த வரை அனுபவித்தால் "கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணவே" என்று நம்மை ஆட்கொள்வான் எம்பெருமான். இப்படி நம்மை வசீகரிக்கவே அர்ச்சை என்ற நிலையில் எழுந்தருளியுள்ளான். நம் க்ருஹத்தில் உள்ள எம்

பெருமானிடமும் இந்த அனுபவத்தைப் பெறலாம்.

இப்படி நம்மை ஆட்கொள்ளவே ஸ்ரீரங்கம் தொடங்கி நம் நகரங்கள் கிராமங்கள் மற்றும் க்ருஹங்களில் எழுந்தருளியுள்ளான். நம்மால் முடிந்த இடத்தில் முடிந்த போது சென்று வணங்கலாம். நம் கஷ்டங்கள் தீர பல வித பிரார்த்தனைகள் செய்ய கோவில்கள் நம் வாழ்வில் முக்ய அங்கமாகிறது. நம் பிரார்த்தனைகள் நிறைவேறியவுடன் நம் சௌகர்யப்படி தீபங்கள், அர்ச்சனைகள், நிவேதனங்கள், திருமஞ்ஜனங்கள் செய்து வழிபட நமக்கு திருக்கோயில்களே சுலபம்.

ஜன்மாந்த்ர க்ருதம் பாபம் வ்யாதி ரூபணே பாததே !
தச்சாந்தி: ஔஷதை: வ்ரத ஹோம தான
தேவார்சனாதிபி:

ஆயுர்வேதம்

நாம் பல பிறவிகளில் செய்த பாபங்களே நமக்கு வியாதிகளாக வருகிறது. அதற்கு பரிகாரமாக மருந்துகளும், ஹோமங்களும், விரதங்களும், தானங்களும், அர்ச்சனைகளும் ரிஷிகளால் வகுக்குக்கப்பட்டுள்ளன. மருந்துகளால் ஒரு பாகமும், ஹோமங்களால் ஒரு பாகமும், விரதங்களைச்

செய்வதினால் ஒரு பாகமும், தானங்களால் ஒரு பாகமும், அர்ச்சனைகளால் ஒரு பாகமும், என நம் பாபங்கள் நீங்கும் என்கிறார்கள். எனவே வியாதிகள் பூரணமாக நீங்க மேற்படி அனைத்தும் நம்மை காக்கும்.

ஸ்தவ்ய:- வாக்கினால் துதிக்கப்படுவதற்கு உரியவர்

ஸ்தவப்ரிய:- எவராலும் எந்த மொழியிலும், எவ்வகையிலும் செய்யப்படும் ஸ்துதிகளை சொற்பிழை, பொருட்பிழை இருந்தாலும் அன்புடன் அங்கீகரிக்கப்பவர் (ஸ்ரீ பராசர பட்டர் விஷ்ணு சஹஸ்ர நாம பாஷ்யம்). இதனாலேயே கோவில்களில் அர்ச்சனை முக்ய அங்கமாக நம் பெரியோர்கள் வகுத்துள்ளார்கள்.

பகவானுடைய ரூபம் கண்களுக்கும் மனதிற்கும் சாந்தியை கொடுக்கிறது. "புலன்கொள் வடிவு என் மனத்ததாய்" என்று ஸ்வாமீ நம்மாழ்வார் திருவாய் மொழியில் காட்டுகிறார். வேதம், பிரபந்தம், வாத்யங்கள் நம் காதுகளுக்கும், தூபம், புஷ்பம், துளசி நம் மூக்கிற்கும், பிரசாதங்கள் நம் நாவிற்கும் மகிழ்ச்சியைத் தருவதினால் திருக்கோயில்கள் நம் வாழ்வில் முக்ய அங்கமாகிறது.



கி.பி. 13-ஆம் நூற்றாண்டு

எனவே நாமும் கோவில்களுக்கு தினமும் செல்லும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டால் நமக்கு

DRAFT V.S.Jayabal

மனத்திருப்தியும் பகவானுடைய அருளும் கிடைக்கும். மேலும் கோயில் சிப்பந்திகளும் சரியான நேரத்தில் கோவிலைத் திறந்தும் சுத்தம் செய்தும் வைப்பார்கள், அர்ச்சகர்களும் நம் வருகைக்காக காத்திருந்து பூஜைகளையும் முறையாகவும் நேரம் தவறாமலும் செய்வார்கள். இப்படிச் செய்வதும் சிறந்த பாதுகாப்பாகும். மேலும் நாமும் அங்காங்கு குப்பைகளை போடாமலும், அவற்றிற்குறிய இடத்தில் சேர்த்தாலும், நம் கண்ணில் படும் <u>குப்பைகளை நாமே சுத்தம் செய்தாலும் திருக்கோயில் பாதுகாப்பாகும்.</u> நமக்கு முடிந்த விடுமுறை நாட்களில் திருக்கோயில் தீபங்கள், சுவாமி வஸ்த்ரங்களையும் சுத்தம் செய்து கொடுப்பதும் ஒட்டடை தூசில்லாமல் பெருக்கி அலம்பி விடுவதும் நம்மால் முடிந்த பாதுகாப்பாகும். திருவிழா காலங்களில் மாவிலை, வாழை மரம் முதலியவற்றை ஏற்படுத்துவதும், வாசலில் கோலம் முதலியவற்றால் அலங்கரிப்பதும், தீவெட்டி, வாத்யம் ஏற்படுத்தி புறப்பாடு காலங்களில் பகவானுடன் செல்வதும் பல வித நன்மைகளோடு திருமேனிகளுக்கு பாதுகாப்பும் ஆகும். நமக்கும் திருப்பணி செய்த புண்யம் சுலபமாக கிடைக்கும். நம் குழந்தைகளையும் கண்டிப்பாக இப்படிச் செய்ய பழக்க வேண்டும்.

DRAFT
V.S.Jayabal

## 2.3 வடகலை தென்கலை விளக்கம்

ஸ்ரீ ஹரி:

ஸ்ரீ மதே ராமாநுஜாய நம:

நம் ஸநாதன தர்மத்திற்கு மூலம் வேதம். இதற்கு அபௌருஷேயம் - மனிதர்களால் செய்யாதது என்ற பெயர் உண்டு. பகவானுடைய மூச்சாக வேதம் நம் பெரியவர்களால் மதிக்கப்படுகிறது. வேதங்களை கர்ம காண்டம், ஞான காண்டம் என்று பிரித்துள்ளார்கள்.

கர்ம காண்டத்தில் - யக்ஞ யாகாதி முறைகளும், ஞான காண்டத்தில் - பகவானை உபாசனை செய்யும் வித்யைகளையும் போதிக்கிறது. வேதங்களினுடைய சிரோபாகமாக உபநிஷத்துக்கள் கொண்டாடப்படுகிறது. வேதங்களை நான்காக (ரிக், யஜுர், ஸாமம், அதர்வணம்) பிரித்தார் ஸ்ரீவேத வ்யாசர். வேதங்களின் ஸாரமாக பிரம்மசூத்ரங்களை அருளிச்செய்தார். பிரம்ம சூத்திரங்களின் அர்த்தங்களை நிர்வஹிப்பதில் தான் அத்வைத, விசிஷ்டாத்வைத, துவைத மதங்கள் தோன்றின.

DRAFT

பிரம்ம சூத்ரங்களுக்கு ஸ்வாமீ நம்மாழ்வாரின் பாசுரங்கள் துணைகொண்டு ஸ்ரீராமாநுஜர் அமைத்த ஸித்தாந்தம் தான் வசிஷ்டாத்வைத சித்தாந்தம், விஷ்ணுவை உபாஸிக்கும் வைஷ்ணவர்களின் மேன்மையான மார்க்கம்.

காலப்போக்கில் மேற்படி வசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தில் ஏற்பட்ட அபிப்ராய பேதங்கள் தான் வடகலை, தென்கலை என்று இரண்டு பிரிவுகள். வேதம், உபநிஷத்துகள், பிரம்ம சூத்ரம், ஸ்ரீ பாஞ்சராத்ர ஆகமம், ஆழ்வார்களின் அருளிச்செயல்கள் மற்றும், ஸ்ரீ ராமாநுஜரின் நவக்ரந்தங்கள் இரண்டு பேருக்கும் பொதுவானவைகள். இவற்றின் அர்த்தங்களை நிர்வஹிப்பதில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் தான் மேற்படி இரண்டு பிரிவுகள்.

முக்யமாக 18 வேறுபாடுகளைக் காட்டுகிறார்கள். ஆனால் பதினெட்டாயிரம் ஒற்றுமைகள் உள்ளது. ஸர்வ சாஸ்த்ரங்களையும் வாசித்து உணர்ந்த பெரியவர்கள் காட்டும் வழிகளை நம்மால் சுலபமாக புரிந்து கொள்ள முடியாது. நாமும் அவர்களை போல் வாசித்திருந்தால் தான் புரிந்து கொள்ள முடியும். திருமண்காப்பிற்கும் வாழி திருநாமங்களுக்கும் சண்டை செய்து கோர்ட் வரை

செல்வது நம் அறியாமையே. நம்மாலே புரிந்து கொண்டு கடைபிடிக்க முடியாத கோட்பாடுகளை, சாமான்ய சட்டங்களைப் படித்த கோர்ட்டில் உள்ளவர்கள் எப்படி தீர்ப்பு வழங்க முடியும்? நாம் இப்படிச் செய்வது நம் பெரியவர்களுக்குச் செய்யும் துரோகமே ஆகும். நம்மால் புரிந்து கொள்ள முடியாவிட்டால் அமைதியாக நம் பெரியவர்கள் எதை கடைபிடித்தார்களோ அதை கடைபிடிப்பது தான் நம் பெரியவர்களுக்குச் செய்யும் உபகாரம். புரிந்து கொள்ள முடியாத, கண்டுபிடிக்காத விஷயங்களுக்கு சண்டை போடுவது அறியாமையே ஆகும். மனிதப் பண்புகள் இல்லாமல் செய்யும் ஆன்மீக வழிபாடுகள் நமக்கு முன்னேற்றம் தருமா? எல்லோரையும் சமமாக மதித்து நடப்பதுதான் சிறந்த பண்பு. நெறியில்லாத மனித வாழ்க்கை மிருக வாழ்க்கைக்கு சமமாகும்.

DRAFT
V.S.Jayabal

யதி ப்ரவர பாரதீ ரஸ பரணே நீதம் வய:
ப்ரபுல்ல பலிதம் சிர: பரமிஹ க்ஷமம் ப்ரார்த்தயே!
நிரஸ்த ரிபு ஸம்பவே க்வசந ரங்க முக்யே விபோ
பரஸ்பர ஹிதைக்ஷிணாம் பரிஸரேஷு மாம் வர்த்தய!!

அபீதி ஸ்தவம் 28

ஸ்ரீ ராமானுஜருடைய ஸ்ரீசூக்தி ரஸானுபவங்களால் என் காலம் சுகமாக கழிந்து விட்டது. தலை எங்கும் நரையும்

கண்டது, ஆயினும் திருவரங்கா உன்னை ஒன்று வேண்டுகிறேன். ஹே ப்ரபோ பகைவர்கள் எல்லோரும் ஓடிப்போய் திருவரங்கம் போன்ற திவ்ய தேசங்களில் ஏதேனும் ஒன்றில் ஒருவருக்கு ஒருவர் இதஞ் செய்து கொள்ளும் ஸ்ரீவைஷ்ணவர்களின் திரளிலே என்னை வைத்தருள வேண்டும் என்கிறார் ஸ்வாமீ தேசிகன்.

இந்த அர்த்தத்தை மனதிலே வைத்துக் கொண்டால் நமக்குள் பேதமில்லாமல், சாமான்ய ஜனங்களுடைய பரிஹாஸத்திற்கு ஆளாகாமல் உண்மையான வைஷ்ணவனாக வாழலாம்.



## 2.4 கோவிலும் அரசர்களும்

அயோத்தியை அரசாட்சி செய்த அம்பரீஷ மஹாராஜனை, ஸ்ரீமத் பாகவதம்

ஸ வை மன: க்ருஷ்ண பதாரவிந்தயோ: வசாம்ஸி
வைகுண்ட குணாநுவர்ணனே !
கரௌ ஹரேர் மந்திர மார்ஜநாதிஷீ ஸ்ருதிம்
சகாராச்யுத ஸத்கதோதயே !!
9 - 4 - 18

அம்பரீஷன் மனதை பகவானுடைய தாமரைப் போன்ற பாதங்களிலும், வாக்கை அவன் புகழ் பாடுவதிலேயும், கைகளை நாராயணனுடைய கோவிலை சுத்தி செய்வதிலேயும், காதை பகவத் கதைகளை கேட்பதிலேயும் செலுத்தினார்.

முகுந்தலிங்காலய தர்ஸனே த்ருஸௌ தத்ப்ருத்ய
காத்ர ஸ்பர்ஸே அங்க ஸங்கமம் !
க்ராணம் ச தத் பாத ஸரோஜ ஸௌரபே ஸ்ரீமத்
துளஸ்யா ரஸநாம் ததர்பிதே
9 - 4 - 19

கண்களால் பகவான் எழுந்தருளியுள்ள திருக்கோவில்களைப் பார்ப்பதிலும், தூய்மையான

மனதுடன் பகவானை த்யானம் செய்யும் பக்தர்களின் உடம்பை கட்டிக் கொள்வதால் உடம்பையும், மூக்கை மங்களமான துளசி தளத்தின் வாசனையை முகர்வதிலும், பகவத் பிரசாதங்களில் நாக்கையும் செலுத்தி இருந்தார்.

பெரிய சக்ரவர்த்தியாக இருந்த போதும் கோவில் திருப்பணிகளில் பெரிதும் ஈடுபட்டிருந்தார் சிறிதும் கர்வமில்லாமல்.

எல்லா அரசர்களும் தாங்கள் ஈட்டிய பொருளின் பயன் திருக்கோவில்களை நிர்மாணம் செய்வதே என்று நமக்கு வழி காட்டியுள்ளார்கள். பல போர்களில் வென்று ஸாம்ராஜ்யாதிபதிகளாக இருந்தாலும் பகவானுக்கு தாஸர்களாகவே தங்களைக் கருதினார்கள். சமீப காலத்திலிருந்த திருவனந்தபுர மஹாராஜாக்களும் தங்களை பத்மநாப தாஸர்களாகவே கருதி சேவை செய்து வந்தார்கள். "ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்று தாங்களும் பணிந்து மக்களையும் பகவானை பணியச் செய்தார்கள்.

நாக் கொண்டு மானிட பாடோம் என்ற கொள்கையில் இருந்த ஆழ்வார்களும் திருக்கோயில் நிர்மாணம் செய்த அரசர்களைப் பாடியுள்ளார்கள்.

DRAFT

"மண்ணு தண் பொழிலும் வாவியும் மதிளும் மாடமாளிகையும் மண்டபமும் தென்னன் தொண்டையர் கோன் செய்த நன்மயிலைத் திருவல்லிக்கேணி" என்றும்

பெ. தி. 2.3.10

"மன்னவன் தொண்டயர் கோன் வணங்கும் நீள்முடி மாலை வயிர மேகன் தன் வலி தன் புகழ் சூழ்ந்த கச்சி " என்றும்

பெ. தி. 2.8.10




பல்லவன் வில்லவன் என்று உலகில் பலராய்ப் பல வேந்தர் வணங்கு கழல் பல்லவன் மல்லையர் கோன் பணித்த பரமேச்சுர விண்ணகரம் அதுவே என்றும்

தேர்மன்னு தென்னவனை முனையில் செருவில் திறல் வாட்டிய திண் சிலையோன் பார்மன்னு பல்லவர்கோன் பணிந்த பரமேச்சுர விண்ணகரம் அதுவே என்றும்

பெ. தி. 2.9 - 1 - 2

“நந்தி பணி செய்த நகர் நந்திபுர விண்ணகரம் நன்னு மனமே" என்றும்

பெ. தி. 5.10.7

DRAFT
V.S.Jeyabal

இருக்கிலங்கு திருமொழிவாய் எண் தோள் ஈசற்கு எழில் மாடம் எழுபது செய்து உலகமாண்ட திருக்குலத்து வளச்சோழன் சேர்ந்த கோயில் திருநறையூர் மணிமாடம் சேர்மின்களே என்றும்

பாராளர் இவர் இவர் என்று அழுந்தை ஏற்ற படை மன்னர் உடல் துணியப் பரிமா உய்த்த தேராளன் கோச்சோழன் சேர்ந்த கோயில் திருநறையூர் மணிமாடம் சேர்மின்களே என்றும்

பெ. தி. 6.3.8-9

**திருப்பணிச் செய்த அரசர்களை புகழ்ந்துள்ளார்கள்.**

ஸ்வாமீ தேசிகன் "ஸங்கல்ப சூர்யோதயம்" என்ற நாடகத்தில் அரசபை கூடும் காட்சியை வர்ணிக்கிறார். அரசன் சபைக்கு வந்தவுடன் சபையோர்களின் வந்தனத்தை ஏற்று தன் சிம்மாசனத்தில் அமர்ந்தவுடன் மந்திரியைப் பார்த்து முதல் கேள்வியாக இன்று நம் தேசத்தில் உள்ள எல்லா கோவில்களிலும் சரியான நேரத்தில் சரியான முறையில் பூஜைகள் எந்த குறையுமில்லாமல் நடந்ததா? எனக் கேட்கிறார், என்று வர்ணிக்கிறார். இது எல்லா அரசபைகளிலும் நடந்த முறை. ஏதாவது குறைகள் இருப்பதாகச் சொன்னால் முதலில்

DRAFT V.S.Jayabal

அதற்கு நிவர்த்தி செய்து விட்டே மற்ற அலுவல்களை பார்த்தார்கள் என்று அறிய முடிகிறது.

"அமர்ந்த்ரமர்சனம் குர்யாத் அகாலே சாபி பூஜனம்
க்ராம நாஸஞ்ச துர்பிக்ஷம் ராஜ ராஷ்ட்ரோ
விநாஸ்யதி !"

(பரமஸம்ஹிதை)

**மந்த்ரம் தெரியாமல் பூஜை செய்வதினாலும் நேரம் தவறி பூஜை செய்தலும் அந்த பூஜையானது அந்த கிராமத்திற்கு நாசமும், ராஜாவுக்கும், ராஜ்யத்திற்கும் துர்பிக்ஷமும் ஏற்படும்.**

இதனாலேயே அரசர்கள் கோவில் பூஜைகளுக்கும் திருப்பணிகளுக்கும் முதன்மையளித்து பிற்காலத்தவர்களுக்காக பாதுகாத்தும் வந்தார்கள். திருக்கோவில்களை பாதுகாப்பதில் அதிக கவனம் செலுத்தி தூய்மை படுத்துபவர்களுக்கு மானியம் அளித்து தூய்மையை பாதுகாத்தார்கள். பகவானுடைய திருமேனிகளையும் தங்கத்தினால் கவசங்கள் சமர்பித்து எந்த தேய்மானம் வரக்கூடாதென்று பாதுகாத்தார்கள். அந்தணர்கள் வேதங்களை கற்பதற்காக பாடசாலைகளை நிறுவி வேதத்தையும் பாதுகாத்தார்கள். தங்கள் காலத்தில்

DRAFT
V.S.Jayabal

கல்வியில் சிறந்து விளங்கும் அறிஞர்களையும் கௌரவித்து பாதுகாத்தார்கள்.

கிராமக் கூத்துக்களிலும் ராஜா வேடம் தரிப்பவர் காட்சி ஆரம்பமானவுடன் விதூரக்ஷகனை (கோமாளியை) பார்த்து இன்று இந்த கிராமத்தில் எல்லா கோவில்களிலும் பூஜை முடிந்ததா? எல்லா தெய்வங்களும் சந்தோஷமாக உள்ளார்களா? என்று கேட்டு விட்டுத் தான் கூத்தை தொடங்குவார்கள். இது இன்று வரை கூத்துக்களில் காண முடிகிறது. அரசனின் முதல் கடமையே கோவில்களையும் பூஜைகளையும் பாதுகாப்பது தான் என்று நமக்கு காட்டியுள்ளார்கள்.



## 2.5 ஆகம சாஸ்த்ரம்

### ஸ்ரீ பாஞ்சராத்ரமும் ஸ்ரீ வைகானசமும்

ஆராதநாநாம் ஸர்வேஷாம் விஷ்ணோராராதனம் பரம்!
தஸ்மாத் பரதம் ப்ரோக்தம் ததீயாராதநம் பரம்!!
(பாத்மோத்தரம் 29 - 81)

ஆராதனம் பகவானுக்கு ப்ரீதியை ஏற்படுத்தச் செய்யும் உபசாரமாகும். எல்லா பூஜைகளிலும் மிக உயர்ந்தது விஷ்ணுவினுடைய பூஜையாகும். அதிலும் உயர்ந்தது அவருடைய பக்தர்களை பூஜிப்பதாகும்.

ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணனை பூஜை செய்ய ஸ்ரீ பாஞ்சராத்ரம், ஸ்ரீ வைகானசம் என்று இரண்டு பூஜை முறைகளை பெரியவர்கள் காட்டியுள்ளார்கள். எந்த ஆகம முறையில் ப்ரதிஷ்டை செய்துள்ளார்களோ அதன்படியே தான் நித்ய நைமிந்திக கார்யங்களைச் செய்து வரவேண்டும். புனருத்தாரணமும், ஜீர்ணோத்தாரணமும் அதன்படியே செய்ய வேண்டும். இரண்டு முறைகளையும் கலக்கக்கூடாது. இப்படிச் செய்வதினால் சுலபமாக பகவானுடைய கருணையைப்

DRAFT V.S.Jayabal

பெறலாம். நம் பெரியவர்கள் அங்கீகரித்த இந்த வழிமுறைகளை நாமும் நம் காலத்தில் மாற்றாமல் பெரியவர்கள் வழியிலேயே சென்று பெருமாளுடைய அநுக்ரஹத்தைப் பெற வேண்டும். முடிந்தவரை ஸம்ஹிதைகளையும் அதற்குரிய ப்ரயோகங்களையும் தற்காலத்திற்கேற்ப பதிப்பிட்டு காக்கவேண்டும். ஆகம பாடசாலைகள் மிக முக்யமாக நிறுவப்பட வேண்டும்.

> த்வாம் பாஞ்சராத்ரிக நயேந ப்ருதக் விதேந
> வைகாந ஸேந ச பதா நியதாதிகாரா:!
> ஸம்ஜ்ஞா விசேஷ நியமேந ஸமர்ச்சயந்த:
> ப்ரீத்யா நயந்தி பலவந்தி திநாநி தந்யா:!!
>
> - சரணாகதி தீபிகா 32

இங்கிருக்கும் நாளில் உன்னைப் ப[..]ிதப் பாஞ்சராத்ர ப்ரகாரங்களினாலும் வைகாநஸ ஆகம விதிகளினாலும் தந்தமது அதிகாரத்திற்கு அநுகுணமாக மாறாமல் நின்று ஆங்காங்குச் சொன்ன திருநாமங்களுடன் ப்ரீதி புரஸ்ஸரமாகப் பூஜித்துக் கொண்டு பழுதில்லாமல் பொழுதைக் க[..]னர் என்கிறார் ஸ்வாமி தேசிகன்.

இரண்டு ஆகமங்களும் எம்பெருமானுடைய இரண்டு கண்களைப் போன்று மிக உயர்ந்தது. இதில் குறை காணாமல் நாம் பாதுகாத்து வரவேண்டும்.

DRAFT V.S.Jayabal

## 2.6 ஆகமம்

ஆகமம் என்பது வெகுகாலமாக குரு சிஷ்ய பரம்பரையில் உபதேச மூலமாக வந்த ஒரு சாஸ்த்ரம். " தஸ்மாத் சாஸ்த்ரம் ப்ரமாணம் " என்றும் " சாசனாத் சாஸ்த்ரம் " என்றும் சொல்லுகிற படியாலே இதை மீறாமல் செயல் பட வேண்டுமென்பது முக்யம். நாம் செய்ய வேண்டியதையும், செய்யக் கூடாததையும் சாஸ்த்ரங்களின் படியே செய்ய வேண்டும் என்கிறார், கீதாசார்யன். சாஸ்த்ரங்கள் நமக்கு விதிக்கப்பட்ட சட்டங்கள். சட்டத்தை மீறினால் குற்றமாகும். மேலும் பகவத் ப்ரீதியைப் பெற சாஸ்த்ரப் படி நடப்பதே நமக்குச் சிறந்தது. " கோடி மாதா வத்ஸலதரம் சாஸ்த்ரம் " என்கிற படியாலே, உலகில் நம்மைப் பெற்ற ஒரு தாயாரே நமக்கு எப்படி ஹிதத்தையும் பாசத்தையும் காண்பிப்பாளோ அது மாதிரி கோடி மாதாக்களுடைய அன்பு தான் சாஸ்த்திரங்கள். இதிலிருந்தே நாம் சாஸ்த்ரப்படியே நடக்க முயற்சித்து சுலபாக பகவானுடைய அருளைப் பெறலாம்.

கோர்ட்களில் சட்ட புத்தகத்தின் படியே வாதாடுகிறார்கள். அதன் படியே தீர்ப்பும் வழங்குகிறார்கள். அப்படியே தான் நாமும் அந்த சாஸ்த்ரங்ககளின் படி மாறாமல் நடந்து கொள்ள வேண்டும். சாலைகளில்

பயணிப்பவர்களுக்கு இடதுபுறமாக செல்ல வேண்டுமென்பது சட்டம். நாம் அதை எப்படி மீறக் கூடாதோ, அப்படியே தான் சாஸ்த்ரங்களையும் மீறாமல் நடக்க வேண்டும். சாலை விதிகளை மீறி வலது புறமாகச் சென்றால், நமக்கு என்ன விபரீதங்கள் ஏற்படுமோ அப்படித்தான் சாஸ்த்ரங்களை மீறி நடந்தாலும் ஏற்படும். மிகக் கவனமாக இதை எல்லோரும் புரிந்து கொண்டு விதிக்கப்பட்ட சாஸ்த்ரங்களை நன்றாக படித்து உணர்ந்த பெரியவர்களிடம் கேட்டு அப்படியே நடைமுறை படுத்திக் கொள்ள வேண்டும்.




ஆகமம் என்ற சொல் அ+ அகம: என்ற விக்ரஹத்தினால் ஆகம: என்ற சொல் உண்டாகியுள்ளது. அகம: என்ற வினைச் சொல்லுக்கு "அடையக் கூடியவனாய்" என்றர்த்தம். "அ" என்ற சொல் அவரக்ஷணே என்ற தாதுவிலிருந்து உண்டானதால் ஸர்வரக்ஷகனைச் சொல்லும் அ+ அகம : என்ற சொல் ஸவர்ண தீர்க்கத்தால் ஆகம: என்றாகிறது. அதாவது ஸர்வரக்ஷகனை அடைவிக்கக் கூடியது என்றர்த்தம். " ஏஷ மோஷாயனாயவை பந்த்தா" என்ற பாரமேஸ்வர வசனப்படி இப்படி அர்த்தம் கொள்ளலாம். அகாரவாச்சயம் ப்ரதி அகமயதி என்று கொண்டால் எம் பெருமானிடம் நம்மை அழைத்துச் செல்லுதல் என்ற பொருள் வரும்.

DRAFT
V.S.Jayabal

ஆகமங்கள் வைதிகம், அவைதிகம் என்று இரு வகைப்படும். பௌத்தாகமங்கள் அவைதிகம். வைதிகம் - என்பது வேதம், இதிஹாஸங்கள், புராணங்கள், தந்த்ரங்கள் என மூன்று பிரிவுகள் கொண்டது. இதில் வேதம் ரிக், யஜுர், ஸாம, அதர்வ என்ற நான்கு பிரிவுகளைக் கொண்டது. இதிஹாஸ புராணங்கள் ராமாயண, மஹாபாரதம் மற்றும் 18 புராணங்களைக் கொண்டது தந்த்ரம் (ஆகமம்) என்பது சைவம், சாக்தம், வைஷ்ணவம் என மூன்று பிரிவுகளைக் கொண்டது.

இதில் வைஷ்ணவாகமம், வைகானசம் - பாஞ்சராத்ரம் என இரு வகைப்படும்.

DRAFT V.S.Jayabal

## வைகானஸாகமம்:

இதில் வைகாநச ஸூத்ரிகளான பிராம்மணர்களுக்கு மட்டும் தான் அதிகாரமுள்ளது. வேறு ஸூத்ரத்தைச் சேர்ந்தவர்களுக்கோ, பிராம்மணரல்லாதவர்களுக்கோ கடைபிடிக்க அதிகாரமில்லை. விகனஸ பகவான் ஆபஸ்தம்ப ஸூத்ராதிகளைப் போல் ஸ்ரீமந்நாராயணனின் ஆராதன விதிகளை ஸங்க்ரஹமாகச் சொன்னதை ப்ருகு, மரீசி முதலிய ரிஷிகள் விஸ்தாரமாகச் சொல்லியிருக்கிறார்கள். அவை ப்ருகு ஸம்ஹிதா, மரீசி படலம், ஆநந்த ஸம்ஹிதை முதலியன. இந்த ஆகமப் படி

திருவேங்கடம், திருவல்லிக்கேணி, திருக்குறுங்குடி, வானமாமலை, ஸ்ரீவில்லிபுத்தூர் முதலிய திவ்ய தேசங்ககளில் திருவாராதனம் நடந்து வருகிறது.

## பாஞ்சராத்ரம்:

ராத்ரம் - அக்ஞானம், பஞ்ச - போக்குகிறது பகவானை அடைவதற்குண்டான அக்ஞானத்தைப் போக்குகிறது. ஐந்து நாட்கள் (இரவு, பகல் உட்பட) அனந்தன், கருடன், விஷ்வக்ஸேநர், ப்ரஹ்மா, ருத்ரன் மற்றும் ஔபகாயனர், சாண்டில்யர் முதலியவர்களுக்கும் உபதேசிக்கப்பட்டதால் பாஞ்சராத்ரம் என்றும் ஸாங்க்யம், யோகம், பௌத்தம், ஜைனம், பாசுபதம் ஆகிய வேதவிருத்தமான மதங்கள் பாஞ்சராத்ர ஆகமத்திற்கு முன்னிலையில் " ராத்ரீயந்தே - ராத்ரி போல் ஆகிவிடுகின்றன. அதனால் பாஞ்சராத்ரமென்றும், பர, வ்யூஹ, விபவ, அந்தர்யாமி, அர்ச்சை என்ற பகவானின் ஐவகை நிலைகளைத் தெரிவிப்பதனால் பாஞ்சராத்ரமென்றும், மேலும் பகவத் ப்ரதிஷ்டைகளில் ஸ்தண்டிலம், மண்டலம், கும்பம், புஷ்பம், ப்ரதிமா ஆகிற ஐந்து இடங்களில் பகவானை ஆவாஹனம் செய்யும் முறையை அறிவிப்பதனால் பாஞ்சராத்ரமென்றும், ஒரு நாளை அபிகமந, உபாதந, இஜ்ஜை, ஸ்வாத்யாயம், யோகம் என்று ஐந்தாக பிரித்து பகவானை ஆராதிக்க

DRAFT
V.S.Jayabal

விதிப்பதாலும் பாஞ்சராத்ரமென்றும், ஸ்ருஷ்டி, ஸ்திதி, ப்ரளயம், நிக்ரஹம், அநுக்ரஹமென்கிற ஐந்து விதமான பகவத் ஸங்கல்பத்தை தெரிவிப்பதினாலும் பாஞ்சராத்ரமென்றும் - இப்படி பல அர்த்தங்களை நம் பூர்வர்கள் தெரிவிக்கிறார்கள்.

"பாஞ்சராத்ரஸ்ய க்ருத்ஸ்நஸ்ய வக்தா நாராயண ஸ்வயம்" பாஞ்சராத்ர ஆகமத்தை பகவானான நாராயணனே உபதேசித்தபடியால் இதில் ப்ரம, விப்ரலம்ப, ப்ரமாதாதி தோஷங்களுக்கு இடமேயில்லை ( ப்ரமம் - சந்தேகம், விப்ரலம்பம் - விபரீதமாகச் சொல்லுதல், ப்ரமாதம் - அதிகப்படுத்திச் சொல்லுதல்) அதனாலேயே இதற்கு " பகவத் சாஸ்த்ரம் " என்று பெயர்.

DRAFT
V.S.Jayabal

பகவான் ப்ரஹ்மாவிற்கு உபதேசம் செய்ததை நாரதருக்கு உபதேசித்தார். நாரதர் ரிஷிகளுக்கு உபதேசம் பண்ணினதாக ஈச்வர சம்ஹிதையிலும் ஸநகர், சாண்டில்ய ரிஷியைக் கேட்க அவர் ஸநகருக்கு உபதேசித்ததாக பாரமேஸ்வரத்திலும், ப்ரஹ்மாவை ஸம்வர்த்தகர் என்ற மகரிஷி கேட்க, அதற்கு பிரம்மா நான் கபிலர் என்ற மஹரிஷிக்கு உபதேசித்துள்ளேன்.

அவர் பாதாளத்தில் இருக்கிறார். அவரிடம் சென்று ப்ரார்தித்தால் அவர் உபதேசம் செய்வார் என்று சொல்ல, அதன்படி அவரும் சென்று கபிலரை பிரார்த்திக்க, அவர் தன் பக்கத்திலுள்ள பத்மன் (நாகராஜன்) பார்த்து நியமிக்க, அவர் உபதேசித்ததாக பாத்ம ஸம்ஹிதையிலும், இந்த தந்த்ரத்தை அறிய ஸ்ரீதேவியான மஹாலக்ஷ்மி பகவானைக் கேட்க அவர் உபதேசித்ததாக ஸ்ரீப்ரச்சன ஸம்ஹிதையிலும் இம்மாதிரி பலபடியாக பகவான் மூலமாக பரம்பரையாக ரிஷிகள் மூலம் வந்தது. இவைகளை ஆகமம் என்று சொல்லுவார்கள். இதில் அவைதிகமென்பது வேதத்தை ஒப்புக்கொள்ளாத பௌத்தாகமங்கள், வைதிகம் என்பது வேதத்தை ஒப்புக் கொள்கிறவர்களுடையது.

இதிலும் சில ஆகமங்கள் ராஜஸ, தாமஸ ஆகமங்கள், ஸத்வ குணமுள்ள ஆகமங்கள் சில இதிலும் ஸர்வேஷ்வரனான ஸ்ரீமந்நாராயணனால் உபதேசிக்கப்பட்டது. பாஞ்சராத்ராகமம்.

அதிலும் மூன்று ஸம்ஹிதைகள் உத்க்ருஷ்டம். அவையாவன "ஸாத்வதம் பௌஸ்கரம், சைவ, ஜயாக்யம் தந்த்ரமுத்தமம்" என்றும் போற்றப்படுகின்ற ரத்னத்ரயமாகும். மேற்படி ஸம்ஹிதைகளுக்கு

DRAFT V.S.Jayabal

விவரணமாக ஸாத்வதத்திற்கு ஈச்வரம் என்றும், பௌஷ்கரத்திற்கு பாரமேச்வரம் என்றும் ஜயாக்யத்திற்கு பாத்மம் என்றும் மூன்று ஸம்ஹிதைகள் உள்ளன. இம்மூன்றும் ஒவ்வொரு திவ்ய தேசத்தில் அனுஷ்டானத்தில் உள்ளன. ஸ்ரீரங்கத்தில் பாரமேச்வரமும், காஞ்சியில் பாத்மமும், மேல்கோட்டையில் ஈச்வரமும் அநுஷ்டிக்கப்படுகிறது.

இந்த பாஞ்சராத்ர சாஸ்த்ரம் ஸாத்விகம் ராஜஸம், தாமஸம் என்று மூன்று வகைப்படும். இதில் ராஜஸ, தாமஸ சாஸ்த்ரங்கள் இதர தெய்வங்களைப் பற்றியது. ஸாத்விகம் - திவ்யம் முநிபாஷிதம், மாநுஷம் என்று மூன்று வகைப்படும். திவ்யம் என்பது பகவானால் ஸாக்ஷாத்தாக உபதேசிக்கப்பட்ட ஸாத்வத பௌஷ்கர ஜயாக்யாதிகள். முநிபாஷிதம் - முனிவர்களுக்கு உபதேசம் செய்யப்பட்டது. மாநுஷம் மனிதர்களுக்காக சொல்லப்பட்டது. அனைத்திலும் திவ்யம் மிக உயர்ந்தது.

இவ்வடிப்படையில் 'பரம்' எனப்படும் வாசுதேவன் வியாபித்தும், அவதாரங்கள் எடுத்தும் வ்யூஹம், விபவம் இவற்றில் கண்டு மகிழ்வெய்தி அதனை மனதில் அந்தர்யாமியாக போற்றி வணங்கி, பின் அவ்வுருவை திருமேனிகளாக போற்றி பூஜிக்கும் நிலையில் வடிவுறச்

DRAFT V.S.Jayabal

செய்து (செதுக்கியோ, வார்த்தோ) பரம், வ்யூஹம் எனப்படும் மூர்த்திகளை ஆராதிப்பதனை தந்திர சித்தாந்த மெனவும் திருமுகமும் உடலும் வேறாகக் கொண்ட மூர்த்தங்களை (வராஹம், நரசிம்மம், ஹயக்ரீவர் போன்ற முகம் வேறுபாடுள்ள) ஆராதிப்பதனை தந்திராந்திர சித்தாந்தம் என்பர்.

இக்கருத்தினைக் கொண்டும் பூமியின் இயல்பினையும் இயற்கை வனத்தையும் கருத்தில் கொண்டு பூமிதனையும் (1) சுபத்மா (2) பத்ரகா (3) பூர்ணா (4) தூம்ரா என நான்கு விதமான லக்ஷணங்களையும் கூறி இம்மாதிரியாக அமையப்பெற்ற ஆலய நிர்மாணம் செய்து பூஜை முறைகளை வழிவகுக்கிறது. ஞான, யோக, க்ரியா, சர்யா என்று பகவானை தெரிந்து கொள்ளும் ஞானத்தையும், அந்த ஞானத்தால் பகவானை அடைவதற்கு யோகத்தையும், ஆலயம் அமைக்கும் முறைகளை பூமி பூஜை முதல் ஆலய நிர்மாணம் வரையில் க்ரியையிலும், நித்ய, நைமித்திகம் மாஸ, வருட ப்ராயச்சித்தங்களையும் சர்யா பாதத்திலும் தெரிவிக்கிறது.

இப் பாஞ்சராத்ர ஆகம ரீதியில் பகவானது பூஜை முறைகள் (1) ஔபசாரிகம் (2) சாம்ஸ்பர்சிகம் (3)

DRAFT
V.S.Jayabal

அப்யவ்யவஹாரிகம் என்பவைகளாக உபசரிக்க சாதகமாகவும் சாதனையாகவும் அமைந்துள்ளன.

(1) <u>ஔபசாரிக மென்பது:</u>

பகவானுக்கு சமர்ப்பிக்கப்படும் கண்ணாடி, வெண்சாமரம், குடை, பூர்ணகும்பம், தூபம், தீபம், நடனம், வாத்யம், சங்கீதம், மாத்ரா தானம், மந்திரங்களுக்கேற்ப முத்திரைகள் செய்தல் ஆகியவைகளாகும்.

(2) <u>சாம்ஸ்பர்சிக மென்பது:</u>




எண்ணெய்க் காப்பிடுதல், பல் துலக்கி, நாக்கு வழித்தல், நெல்லிமுள்ளி, மஞ்சள் போன்ற வாசனைத் திரவியங்களை நீராட்ட காலத்தில் சேர்ப்பித்தல், ஆடை ஆபரணங்கள் அணிவித்தல், பாதுகை சமர்பித்தல், வாஹனங்களில் எழுந்தருளச் செய்து வீதி உத்ஸவம் செய்வது முதலிவைகளாகும்.

(3) <u>அப்யவ்யவஹாரிகம்:</u>

அறுசுவையுடன் கூடிய அன்னம் முதலியவைகளையும், அப்பம், பொறி போன்ற பக்ஷணங்களையும், பழவகைகள் மற்றும் தாம்பூலம் முதலியவைகளை சமர்ப்பித்தல் ஆகும்.

DRAFT
V.S.Jayabal

இப்படி பல வித மேன்மைகளால் இந்த ஆகமம் ஸ்ரீரங்கம், காஞ்சிபுரம், மேல்கோட்டை, கும்பகோணம் முதலிய திவ்ய தேசங்களில் நடை முறையில் உள்ளன. முன்பே தெரிவித்தபடி ஆகம சாஸ்த்ரங்களின் படி தான் ஆலய நிர்மாணம், புனருத்தாரணம், ஜீர்ணோத்தாரணம் முதலியவைகளைச் செய்ய வேண்டும். மேலும் ஸ்ரீபாஞ்சராத்ர ஆகமம் நடைமுறையில் உள்ள இடங்களில் புனருத்தாரணமோ, ஜீர்ணோத்தாரணமோ செய்ய வேண்டியிருந்தால் இந்த ஆகமப் படியும், கோயிலில் நடைமுறையில் உள்ள ஸம்ஹிதையின் படித்தான் செய்ய வேண்டும். இதைத் தவிர்த்து வைகானசம் சைவ சாக்த ஆகமங்களின் படி செய்யக்கூடாது.

யாசாஸ்த்ர மந்த்ரக்ரியாதீநாம் மூர்த்திநாம் பவநஸ்யச !
தேசகஸ்யாபி ஜாதஸ்ய யதா பூர்வம் பரிக்ர ஹ : !!
ததைவ யாவத் காலம் து நாசர் தவ்யம் ததந்யதா !
விபரீதே க்ருதே சாத்ர ராஜராஷ்ட்ராத் யநர்த க்ருத் !!
தத: ஸமாசரேத் யத்நாத் ப்ரதிஷ்டாம் ப்ராக் ப்ரத்யத்நத : !
தத: ஸித்தாந்த ஸாங்கர்யம் நகர் தவ்யம் க்ருதாத்மபி : !!
யத்யதிஷ்டதமம் லோகே பூர்வ ஸித்தா விரோதிதத் !
ப்ரதிக்ராக்ய மதோ (அ)ந்யோந்ய விருத்தம் ஸ்ந்த்யஜேத் புத : !!
வைகாநஸேஷு தந்த்ரேஷு ஸைவ பாஸுபதேஷீச !

DRAFT
V.S.Jayabal

விஹிதாந்யத்ர ஜாதாநி விருத்தாநீதிகம் புந: !!
பாஞ்ச ராத்ர விதாநேந பூஜ்யமானே ப்ரதிஷ்டிதே !
நாந்யேந பூஜநம் கார்யம் விதுஷா (அ)பி கதாசந !!
ஸத் ப்ரஹ்ம நிரதைர்முக்யை : பஞ்ச ராத்ர பராயணை : !!
பூஜ நீயம் விஸேக்ஷேண முக்ய கல்பாதி காரிபி : !!

- பரமேஸ்வர ப்ராஸ்சித்த காண்டம்

**544 to 550**

பாஞ்ச ராத்ர ஆலயங்களில் வைகானச, சைவ ஆகமங்களை கலந்தால் நாட்டிற்கும் அரசுக்கும் அநர்தங்கள் உண்டாகும். கோவிலில் அனுஷ்டிக்கும் ஸம்ஹிதைகளில் சொல்லப்படாத விஷயங்களை மற்ற பாஞ்சராத்ர ஸம்ஹிதைகளில் இருந்து மட்டும் எடுத்துக் கொள்ளலாம். "அநுக்தம் அந்யதோ க்ராஹ்யம் " என்ற விதியினால்

இவ்விஷயங்களை மிக முக்யமாக எடுத்துக் கொண்டு அந்தந்த கோயில் பழக்க வழக்கங்களை மாற்றாமல் சாஸ்த்ரப்படிச் செய்வது ஆகம சாஸ்த்ரங்களை பாதுகாப்பதாகும். மேலும் பல ஆகம பாடசாலைகளையும், ஆகம ஸதஸ்களையும் நடத்தியும், ஆகம புஸ்த்தகங்களை வெளியிடுவதும் ஆகமங்களின் முக்ய பாதுகாப்பாகும்.

DRAFT
v.s.jayapal

# 2.7 Role of Archagars

## அர்ச்சகன்

அகாரோ ஆகமப்யாஸி : ச காரோ சாஸ்த்ர வித்தம :
க காரோ கார்ய நிபுண : அர்ச்சக இதி உச்யதே !!

ஆகம சாஸ்த்ரங்களை நன்றாக வாசித்தவரும் சாஸ்த்ரங்களில் நல்ல அனுபவம் உள்ளவராகவும் கார்யங்களில் நிபுணத்வம் வாய்ந்தவர்களாயும் உள்ளவர்களை அர்ச்சகர் என்று அழைக்கிறோம். கோவிலில் பகவானுக்கு அடுத்த இடம் அர்ச்சகர்களுக்குத் தான். "அர்ச்கஸ்ய ஹரிஸாஷாத்" பகவானே அர்ச்சகன் என்று பாவிக்க வேண்டும்.

DRAFT
V.S.Jayabal

அர்ச்கஸ்ய தபோ யோகாத் பூஜாயாஸ் சாதியே னச !
ஆபி முக்யாஸ்ச பிம்பஸ்ய தத்ர ஸன்னிஹிதோ ஹரி:
(ஸ்ரீ பாரமேஸ்வரம்)

அர்ச்சகனுடைய வெளித் தூய்மையினாலும், மனதை அடக்கி பகவானுடைய பூஜையில் ஈடுபடுவதாலும், அர்ச்சா மூர்த்தியிடம் அன்பு செலுத்துவதாலும் பகவானுக்கு ஸாந்நித்யம் ஏற்படுகிறது. கோவில் நன்றாக வளர்வது அர்ச்சகர் நடத்தையில் தான் உள்ளது. வருகின்ற

பக்தர்களிடம் அன்பாகவும் கனிவாகவும் நடந்து கொண்டால் பக்தர்களும் பகவானும் சந்தோஷப்படுவார்கள்.

அர்ச்சகஸ்ய மனஸ் துஷ்டி : தேவ ஸந்துஷ்டி ரேவச !
அர்ச்சகம் க்லேஸயித்வாது தத் க்ராமம் நாஸனம் பவதே
அர்ச்சகஸ்ய கரஸ்பர்ஸாத் ஸான்நித்திர்பவதி ஜகத் பதி :
ஸன்னிதத்தே ஸதாதத்ர த்வயேனா (அ)ஷ்டாஷ ரேணவா
(விஷ்ணு திலகம்)

அர்ச்சகர் மனம் ஸந்தோஷத்துடன் இருந்தால் பகவானும் ஸந்தோஷமாக இருப்பார். அர்ச்சகர் மனது க்லேச பட்டால் அது அந்த கிராமத்திற்கு நன்மையளிக்காது. மந்த்ரஸித்தியுள்ள அர்ச்சகனுடைய கை பட்டால் பகவானுக்கு சுத்தி ஏற்படுகிறது. மேலும் பிம்பத்தில் எப்போதும் ஸாந்நித்யம் இருக்க த்வயமும் அஷ்டாக்ஷரமும் முக்யமாகிறது.

“ஸர்வாதிசாயி ஷாட்குண்யம் ஸமஸ்திதம் மந்த்ரம் பிம்பயோ:” -

மந்த்ரங்களில் காணப்படும் பகவானின் ஞானம் முதலான ஆறு குணங்களானவை அர்ச்சையாக உள்ள

DRAFT V.S.Jayapal

அவனது வடிவத்தில் காணப்படுகின்றன. எனவே மந்த்ர ஸித்தியுள்ள அர்ச்சகனிடம் தான் பகவானின் பரிபூர்ண ஸாந்நித்யம் காணப்படுகிறது. அர்ச்சகர்களும் இவ்விஷயத்தை நன்றாக புரிந்து கொண்டு அஷ்டாக்ஷரம் முதலான மந்த்ரங்களில் நம்பிக்கையுடன் இருக்க வேண்டும்.

பூஜை முறைகளை நன்கறிந்து செய்ய நல்லதொரு குருவை நாடி தாம் பூஜை செய்யும் கோவிலில் கடைபிடிக்கப்படும் ஸம்ஹிதையை அதற்குறிய ப்ரயோகத்துடன் அறிந்து ஆகம தீக்ஷை செய்து கொள்ள வேண்டும். “தீயதே ஞான சம்பன்ன: “ க்ஷீயதே பாப நாசக:- தீக்ஷை பாபங்களிலிருந்தும் கர்மங்களிலிருந்தும் விடுபட்டு பகவானை அறிந்து கொள்வதற்காகவே செய்யப்படுகிறது. ஆகம தீக்ஷை பெற்றவர்களே கர்ப்ப க்ருஹத்தில் ப்ரவேசித்து பகவானுடைய திருமேனியைத் தொட வேண்டும். (பஞ்சஸம்ஸ்காரம் வேறு அது வீட்டிலுள்ள பெருமாளை பூஜை செய்வதற்கு மட்டும் தான்)


ஏக்தார்
கி.பி. 18-ஆம் நூற்றாண்டு

இத் தெய்வீக கைங்கர்யத்தில் பங்கு கொள்ளும் அர்ச்சகர்களுக்கு நித்ய கர்மானுஷ்டங்களும் விரிவாக கூறப்பட்டுள்ளன. சூரிய உதயத்திற்கு முன் ப்ராம்ஹ முஹுர்த்தத்தில் துயிலெழுந்தவுடன் வாசுதேவ,

DRAFT
V.S.Jayabal

ஸங்கர்ஷண, ப்ரத்யும்ன அநிருத்த கேசவாதி நாமங்களைத் த்யானித்து ஹரி : ஹரி : என 7 தடவை கூறிய வண்ணம் அமர்ந்து பூமிதேவியின் அனுமதி பெற்று பூமியில் கால் வைத்து காலைக் கடன்களைச் செய்ய வேண்டும். நதியிருந்தால் நதிக்குச் சென்று அங்கு கங்கை முதலான புண்ய தீர்த்தங்களை த்யானம் செய்து ஸ்நானம் செய்ய வேண்டும், அல்லது

> வாருணம் திவ்யமாக்னேயம் வாயவ்யம் பார்திவம் ததா !
> மந்த்ரம் மானசம் மித்யேவம் ஸ்நானம் ஸப்தவிதம் ஸ்ம்ருதம் !!
>
> - பாத்மஸம்ஹிதா

நன்றாக மூழ்கி குளிப்பதை வாருணம் எனவும், சூர்ய ஒளிக்கிரணங்கள் கூடிய சமயத்தில் வானத்திலிருந்து பொழியும் மழையில் நனைவதை திவ்யமெனவும், யக்ஞயாகங்களில் இருந்து சேகரிக்கப்பட்ட ஹோம பஸ்மங்களை தேஹத்தில் ஊர்த்வ முகமாக தரித்துக் கொள்வதை ஆக்நேயமெனவும், பசுமாடுகள் முன் செல்லும் சமயம் அவைகளின் கால் குளம்பிலிருந்து காற்றின் மூலம் தேஹத்தில் படும் தூசி மண் வாயவ்யமெனவும், துளசிச் செடியின் கீழ் பாகத்தின் மண்,

DRAFT V.S.Jayabal

புற்று மண் மலைகளிலிருந்து எடுக்கப்படும் மண்ணைக் கொண்டு மேல் நோக்கிய வண்ணம் தரித்துக் கொள்வதை <u>பார்த்திவமெனவும்,</u> வேத பாகங்களில் சுத்திக்காக ஏற்பட்ட மந்திரங்களைக் கொண்டு ப்ரோக்ஷித்துக் கொள்ளுதல் <u>மந்த்ரமெனவும்,</u> “ மானசம் விஷ்ணு சிந்தனம் ” என்று மனதின் ரீதியில் பகவானது திருவடிகளிலிருந்து பெருகி வரும் கங்கை நீரை தேஹம் பூராவும் பரவச் செய்யும்படி த்யானித்து அதன் மூலமாக நீராடப் பெறுவதாக எண்ணுவதை <u>மானஸமெனவும்</u> எழுவகை ஸ்நானங்களை விவரித்துள்ளன. இதில் எது முடியுமோ அதில் நாம் ஸ்நானம் செய்து கொள்ள வேண்டும்.

பின் சுத்தமான ஆடை அணிந்து புண்ட்ர தாரணம் எனும் திருமண் காப்பை தரித்துக் கொள்ள வேண்டும். யக்ஞம் தானம், தபம், ஹோமம், பித்ரு கடன்கள், உணவு அருந்துதல் இவைகள் திருமண் காப்பு, பவித்ரபுல் இவைகளை அணியாமல் செய்தால் பலன் கிடைக்காது. தீபச்சுடர், தாமரை, மூங்கில் இலை, மீன், சங்கு இவைகளின் ரீதியில் திருமண் தரித்து நடுவில் நன்மை நாடுவோர் சிவப்பு நிறத்திலும், சாந்தியை (அமைதியை) நாடுவோர் மஞ்சள் நிறத்திலும், மோக்ஷத்தை நாடுபவர்கள் கறுப்பு நிறத்திலான ஸ்ரீசூர்ணம் தரிக்க வேண்டுமென பரமேஸ்வர ஸம்ஹிதை 3ம் அத்யாயம்.

சந்தநாத்யை : ஸீகந்தைர்வா தர்மக்ஷேத்ர விசேக்ஷத : !
பர்வதாக்ரே நிதீதீரே ஸிந்து தீரே ததைவச !!
வல்மீகே துலஸீமூலே ப்ரய்ஸ்தா ம்ருத்திகா த்விஜ !
வய்யார்தீ ரக்தயா ஸ்ரீச்சந் பீதயா யாந்திகாமிக : !!
ஸ்யாமயா மோக்ஷகாமீ ச ஸ்வேதயா சோர்த்வ புண்ட்ரகம் !

வர்தி தீபாக்ருதிம் சைவ வேணு பத்ராக்ருதிம் ததா !!
பத்மஸ்ய முகுலா கார முத்பலம் முகுலாக்ருதி !
மத்ஸ்ய கூர்மா க்ருதிம் சைவ யங்கா கார மத: பரம் !!
புஷ்டிப்ரதே நாங்குஷ்டேந தர்ஜந்யா முக்தி ஸித்தயே !!
வாஞ்சிதார்த ப்ரதாயிந்யா முநே (அ) நாமிகயா (அ) வா !!
9 to13

புஷ்டியை விரும்புவோர் கட்டை விரலாலும், முக்தியை விரும்புவோர் ஆள்காட்டி விரலாலும், ஆயுளை விரும்புவோர் நடுவிரலாலும், வேண்டிய பலன்களை விரும்புவோர் மோதிர விரலாலும் மேலே விவரித்துள்ளபடி திருமண் காப்பு தரிக்க வேண்டும். பின் நித்ய கர்மானுஷ்டாணங்களான ஸந்த்யா வந்தனாதிகளையும் முடித்து, வீட்டிலுள்ள ஸ்ரீமூர்த்திகளைப் பூஜித்து (க்ருஹார்ச்சை) சந்தன தாம்பூலாதிகளைத் தரித்து பெரியோர்களை வணங்கி பின்னர் கோவிலுக்குச் செல்ல வேண்டும்.

DRAFT V.S.Jayabal

கோபுர வாயிலில் பாதங்களைக் கழுவிக் கொண்ட பின் கொடி மரத்தின் முன்

பத்ப்யாம் கராப்யாம் ஜனாப்யாம் உரசா சிரஸா த்ருஷா !
மனஸா வசஸா சைவ ப்ரணாமே ஷ்டாங்க முச்யதே !!

எனும் ரீதியில் பூமியில் பாதங்கள், கைகள் முழங்கால்கள், மார்பு, முகம் (நெற்றி) இவைகளைப் பதித்து மனதிலே பகவானை நினைத்தும் வாக்கினால் துதி செய்து கொண்டும் எட்டு அங்கங்களுடன் கூடிய நமஸ்காரம் செய்ய வேண்டும்.

பாதெள பாதாந்தரேயுஜ்ய கரெள சலன வஜ்ரிதெள !
ஸ்துதிர் வாசி ஹ்ருதி த்யானம் சதுரங்கம் ப்ரதக்ஷிணம் !!

பாதத்தினிடையே இடைவெளி ஏற்படுத்தாது (அடி மேல் அடி வைத்து) கைகளை கூப்பியபடியே (கைகளை தொங்கவிடாது) வாயினால் பாடிக் கொண்டும் மனதினால் நினைத்துக் கொண்டும் ப்ரதக்ஷிணம் செய்ய வேண்டும்.

ஏகம் கணாதிபே குர்யாத் த்வே சூர்யே த்ரிணி சங்கரே !
சத்வாரி கேசவோ தேவ: ஸப்தாஸ்வத்த ப்ரதக்ஷிணம் !!

கணநாதனுக்கு ஒன்றும், சூர்யனுக்கு இரண்டும், சிவனுக்கு மூன்றும், கேசவனுக்கு நான்கும், அரசமரத்தை ஏழுமுறையும் ப்ரதக்ஷிணம் செய்ய நிர்ணயித்துள்ளனர்.

## பூதசுத்தி :-

அறிவிப்பு மணி



கி.பி. 18-ஆம் நூற்றாண்டு

“அழுக்குடம்பு எச்சில் வாய்” என்று சொல்லுகிறபடியே உள்ள நம் சரீரத்தை சுத்தி செய்து கொண்டே பகவானைத் தொட வேண்டும். பூத சுத்தி செய்து கொள்ளாமல் பகவானை ஆராதிக்க கூடாது. மேலும் அதில் கூறியுள்ள பீஜாக்ஷரங்களை உச்சரிப்பு வழுவாமல் கூறி பூதசுத்தி செய்து கொண்டால் பல நன்மைகள் வரும். உடலினால் ஏற்பட்ட எந்த பாபமும் அவனைத் தீண்டாது ஸ்நாந ஸந்த்யா வந்தனாதிகளை காலம் கடந்து செய்த தோஷமோ லோபமோ கூட ஏற்படாது. ஆகையால் அனைவரும் பூத சுத்தி செய்து கொண்ட பிறகு தான் பகவானைத் தொட வேண்டும். [வாயு மந்த்ரத்தால் நம் சரீரம் பிண்டமானதாக த்யானித்து அக்நி மந்த்ரத்தால் அந்த பிண்டத்தை எரித்து, அம்ருதமயமான கிரணங்களால் சுத்தியானதாக த்யானிப்பது பூதசுத்தி]

பூதசுத்தி க்ரியா ஹீநே முத்ரா ஹீந ததைவச
தத்தோஷ சாந்தயே மந்த்ரம் அஷ்டோத்தர சதம் ஜபேத்
சாந்தி ஹோமம் தத: க்ருத்வா தேவமப்யர்ச்சயேத் புந :
ஜயாக்யம்

DRAFT V.S.Jeyabal

பூதசுத்தி செய்யாமல் பகைவனைத் தொட்டால் அஷ்டாக்ஷர மஹா மந்த்ர ஜபம் செய்து, சாந்தி ஹோமம், திருமஞ்ஜனம் செய்து விட்டுத் தான் பகவானைத் தொட வேண்டும்.

பூஜா காலே புரா குர்யாத் பஞ்ச சுத்திம் குரோத்நம !
ஸ்தான சுத்திம் பாத்ர சுத்திம் பிம்ப சோதனமேவச !!
ஆத்மனோ பூத சுத்திம் ச மந்த்ரவர்ணாஸ் த தோரமே !

மூலஸ்தானத்திலுள்ள அத்தனை புஷ்பம் வகையறாக்களை எடுத்து நன்கு கூட்டி ஜலம் கொண்டு துலக்குவதை ஸ்தான சுத்தியாகவும், பூஜைக்கு உபயோகப்படும் வட்டில் மணி, தூப, தீப பாத்திரங்களை நன்றாக தேய்த்து பளபளக்கச் செய்வதை பாத்தர சுத்தியாகவும், பகவானது திருமேனியை தேவையான உபகரணங்களைக் கொண்டு சுத்தி செய்வதை பிம்ப சுத்தியாகவும், மனம், வாக்கு, காயம், இவைகளால் அறிந்தோ அறியாமலோ ஏற்பட்ட தோஷங்கள் நீங்கப் பெற ஆராதகர் செய்து கொள்ள வேண்டியதை பூத சுத்தியாகவும் இதனால் ஏற்பட்ட சரீரமானது மந்திரப் பொலிவு பெற ந்யாசம் முதலானவைகள் மந்திர சுத்தியாகவும் பஞ்ச சுத்தியை விதிக்கிறது.

DRAFT V.S.Jayabal

பாஞ்சராத்ர விதானேன பூஜ்யமானே ப்ரதிஷ்டிதே !
நான்யேன பூஜனம் கார்யம் விதுஷாபி கதாசன !!

பாஞ்சராத்ர ரீதியில் பிரதிஷ்டை செய்யப்பட்டு பூஜிக்கப்படும் திருக்கோயில்களில் மற்றவர்கள் சாஸ்த்ரம் முதலியவற்றால் தேர்ச்சி பெற்றிருந்தாலும் பூஜை முதலான கார்யங்களைச் செய்யக் கூடாது. இதை அர்ச்சக மஹனீயர்கள் நன்றாக மனதில் வைத்துக் கொள்ள வேண்டும்.

தீஷா காலத்தில் ஆச்சார்யன் உபதேசித்த மூல மந்த்ரத்தினாலேயே ஆவாஹனாதி ஸமஸ்த உபச்சாரங்களையும் செய்து முடித்தவுடன், மந்த்ரலோப, க்ரியாலோபங்களுக்காக "ஜகாரோ ஜன்ம விச்சேத : பகாரோ பாபநாசக:" என்னும் ரீதியில் பாபங்களிலிருந்து விடுபடவும் மீண்டும் பிறவி எடுக்காமலிருக்கவும் மூல மந்த்ரத்தை திருவாராதன முடிவில் யதாசக்தி ஜபம் செய்து பலத்தை பெருமாள் திருவடிகளில் ஸமர்ப்பிக்கவும். கோயில்கள் மேன்மை அடைவதும் பகவான் ஸாந்நித்யத்துடன் இருக்கச் செய்வதும் அர்ச்சகர்களிடம் தான் உள்ளது. இவ்வளவு மேன்மைகளைச் சொல்லி வந்த சாஸ்த்ரம்,

ஸர்பம் த்ருஷ்ட்வா மஹாகாய : கம்பதேச முஹீர் முஹீ :
அமந்த்ர மார்சகம் த்ருஷ்ட்வா தூரேப் யேதி ஜனார்தன :
(விஷ்ணு தத்வே)

பாம்பைக் கண்ட மனிதர்களைப் போல் மந்த்ரம் தெரியாத அர்ச்சகனைக் கண்டால் பகவான் தூரச் சென்று விடுகிறார்.

உருமி



கி.பி. 15-ஆம் நூற்றாண்டு

வ்யாக்ரம் த்ருஷ்ட்வா மஹாராண்யே புருஷோ கம்பயேத் த்விஜ :
அமந்த்ர மார்சகம் த்ருஷ்ட்வா தூரோயாதி ஜனார்த்தன:
(பராசர ஸம்ஹிதை)

காட்டில் புலியைக் கண்ட மனிதர்கள் பயந்து நடுங்குவது போல் மந்த்ரம் தெரியாத அர்ச்சகனைக் கண்டவுடன் பகவான் சென்று விடுகிறார்.

DRAFT V.S.Jayabal

அந்த்ய காலேச ம்ருத்யுஞ்ச த்ருஷ்டவா ஜீவோ யதா பவேத்
ததா அர்ச்சகம் பாபினம் த்ருஷ்ட்வா தூரேப்யேதி ஜனாத்தன:
(பராசர ஸம்ஹிதை)

கடைசி காலத்தில் யமனைக் கண்ட ஜீவனைப் போல், எந்தவித ஒழுக்கமும் இல்லாத அர்ச்சகனைக் கண்டவுடன் தூரமாகச் சென்று விடுகிறார் பகவான்.

இப்படி பல வசனங்கள் அர்ச்சகர்களுடைய மேன்மையை விவரித்தும், ஒழுக்கத்தையும் மந்த்ரங்களையும் தெரிந்து கொண்டு கடைபிடிக்க வேண்டுமென்று வலியுறுத்துகிறது. “பிம்பாக்ருத்ய ஆத்மனா பிம்பே” என்று நம் சரீரத்தினுள் உள்ள ஜீவனுக்கு பகவான் அந்தர்யாமியாக உள்ளது போல் பிம்பங்களுக்குள்ளும் மந்த்ரமயமான சரீரத்துடன் இருக்கிறார். எனவே மந்த்ர சாஸ்த்ரப்படி அவரை தவறாது பூஜிக்க வேண்டும்.

Operation Theatre க்குள் செல்லும் அனைவரும் அதற்குரிய Hygiene உடன் செல்வதைப் போல் அர்ச்சகர்களும் அவர்களுக்குறிய ஆச்சாரத்துடன் தான் கர்ப்ப க்ருஹத்தில் பிரவேசிக்க வேண்டும். Current ல் வேலை செய்பவர்கள் Gloves அணிந்து கையாள்வது போல் மந்த்ர பலத்துடன் தான் பகவானை நெருங்க வேண்டும். உயர்ந்த பதவியில் உள்ளவர்களிடம் காட்டும் மரியாதையை விட நாம் எல்லோரையும் விட உயர்ந்தவனான பகவானிடம் பய பக்தியுடன் இருக்க வேண்டும்.

DRAFT V.S.Jayabal

திருக்கோவில் பாதுகாப்பில் முதல் படியே, அந்தக் கோவிலில் பகவான் ஸாந்நித்யத்துடன் இருக்க வேண்டும். அதற்கு அர்ச்சகர்கள் மந்த்ரமறிந்தவர்களாகவும், ஆசார அநுஷ்டானத்துடன் கோயில் பழக்க வழக்கங்களை மாற்றாமல் செய்து வர வேண்டும். அவர்களுக்கு அதிகாரிகளும் பக்தர்களும் ஆதரவு அளிக்க வேண்டும். இதைத் தான் நம் பெரியவர்களும் அரசர்களும் செய்து இன்றளவும் திருக்கோயில்களை பாதுகாத்து வந்துள்ளார்கள்.

மேலும் அவரவர்கள் செய்து வரும் கைங்கர்யங்களில் தங்கள் பிள்ளைகளையும் ஈடுபடுத்த வேண்டும். நம்பிக்கையுடனும் பக்தியுடனும் நாம் செய்யும் பூஜையை எற்று பகவான் திருக்கோவிலிலேயே ப்ரஸந்நமாக இருப்பார். பகவான் ப்ரஸந்நமானால் நமக்கு வேண்டியது வேறு ஒன்றுமில்லை, நாம் எப்படி சுத்தமில்லாத இடத்தை விரும்ப மாட்டோமோ, அப்படித்தான் பகவானும் புறத்தூய்மை, மனத்தூய்மையுடன், கர்ப்பக்ருஹத்தையும், திருமேனிகளையும் தூய்மையாக பராமரித்தால் பகவான் நிலைத்து நின்று பேரருள் புரிவான், நாம் யாரையும் எதற்கும் எதிர்பார்க்க வேண்டாம், நம்முடைய எல்லாத் தேவைகளையும் பகவானே பார்த்துக் கொள்வார். “ **யோக க்ஷேமம் வஹாம்யஹம்** ” என்று, கல்பக வ்ருக்ஷம் கூட நாம்

DRAFT
V.S.Jayabal

கேட்கும் நன்மை தீமை ஆகிய இரண்டு பலன்களையும் கொடுக்கும். பகவானாகிய கல்பக வ்ருக்ஷம் நன்மை ஒன்றை மட்டுமே கொடுக்கும். நாம் பூஜை செய்யும் பகவானை விட உலகில் சிறந்தது ஒன்றுமில்லை என்று உறுதியுடன் இருந்தால் நமக்கு யாராலும் எந்தத் தீங்கும் வராது. நம்முடைய அனுபவத்தை பக்தியையும் திட விஸ்வாஸத்தையும் அடுத்த தலைமுறைக்கு கற்றுக் கொடுத்து நம் பிறவிப் பயனை அடைவோமாக.

DRAFT
V.S.Jayabal



## 2.8 திருவாராதனம்

திருக்கோவில்களில் தினமும் தவறாது நடைபெற வேண்டியது திருவாராதனம். சரியான மந்த்ர உச்சரிப்புடன் காலம் தவறாது செய்து வர வேண்டும். மந்த்ர சாஸ்த்ரப்படி செய்யும் திருவாராதனத்தினாலேயே பகவத் சாந்நித்யம் ஏற்படுகிறது. பகவான் ப்ரஸந்நமாக இருந்தால் அர்ச்சகர்களும், பரிசாரகர்களும், சேவார்த்திகளும், கிராமமும், நகரமும் க்ஷேமமாக இருக்கும். வருகின்ற சேவார்த்திகளுடைய பிரார்த்தனைகளும் உடனடியாக நிறைவேறும். அதனால் பகவான் மீது நம்பிக்கையும் ஆஸ்திகமும் பரவி லோகமே தர்ம மார்கத்தில் செல்லும். இப்படி அனைத்தும் நடைபெற வேண்டுமானால் பகவதாராதனம் சிறப்பாகச் செய்ய வேண்டும்.

திருவாராதனம் என்ற சொல்லே பகவானுக்கு ப்ரீதியை வரவழைக்கிறது என்ற பொருள்படுகிறது. எப்படி ஆராதனம் செய்ய வேண்டும் என்பதை சாஸ்த்ரமும் தெரிவிக்கிறது.

DRAFT V.S.Jayabal

" யதா யுவனம் ராஜாநம் யதா ச மதஹஸ்திநம்
யதா பிரியாதிதம் யோக்யம் பகவந்தம் ததா அர்ச்சயேத்
யதா சபுத்ரம் தயிதம் ததை வோப சரேத்திரம் "

வருவதொரு உறவென வளர் இளவரசென
மருவுநன் மகனென வனமத கரியென
அருவிலை மணியென அடியவர் அடைபவர்
அருகனை இறைவனை அருகையுடனே

"வைணவ தினசரி - ஸ்வாமி தேசிகன்"

**திருவாராதனம் - ஸபர்யாசனம், ஸ்நானாசனம், அலங்காராசனம், போஜ்யாசனம், புநர் மந்த்ராசனம், பர்யங்காசனம் எனச் செய்ய ஆகம சாஸ்த்ரங்கள் விதிக்கின்றன.**

## ஸபர்யாசனம்:-

பாத்ர பரிகல்பனம், பீடார்ச்சனம், ஆவாஹனம், அர்க்ய, பாத்ய, ஆசமநீய, தூப, தீபாதி, மது பர்கம் முதலியவைகளைச் சமர்பிக்க வேண்டும். அப்போது அர்ச்சகனுடைய மனமானது நம் வீட்டிற்கு புதிதாக சம்பந்திகள் வந்தால் எப்படி மரியாதையுடன் அவர்கள்

DRAFT V.S.Jayabal

மனம் புண்படாது நடந்து கொள்வோமோ அப்படியே பகவானையும் திருவாராதனத்திற்கு பய பக்தியுடன் அழைக்க வேண்டும்.




" யதா ப்ரியாதிதம் - வருவதொரு உறவென "

## ஸ்நானாசனம்:-

தந்த தாவன (பல் தேய்த்தல்) ஜிஹ்வா நிர்லேகனம் (நாக்கு வழித்தல்) கண்டூக்ஷனம் (வாய் கொப்பளித்தல்) முகவாசம் (ஏலம், கிராம்பு, முதலியவை கலந்த தாம்பூலம்) அப்யங்கணம் (சுகந்த தைலங்களை திருமேனியில் சமர்ப்பித்தல்) ஆமல காதி சூர்ண ஸ்நானம் (நெல்லி முள்ளி பொடிகளால் ஸ்நானம்) போன்ற உபசாரங்களைச் செய்ய வேண்டும். அப்போது அர்ச்சகன் இளவரசனுக்கு எப்படிப் பார்த்து பார்த்து வலிக்காமலும் அவர் மனம் புண்படாமலும் நடந்து கொள்வார்களோ ஏனென்றால் இவர் ராஜாவானவுடன் தண்டித்து விடுவாரே என பயம் இருக்குமோ அப்படி ஸ்நானாசன உபசாரங்களைச் செய்ய வேண்டும். பாத்ரங்களை தேய்ப்பது போல் பகவானுடைய திருமேனியை தேய்க்கக் கூடாது.

"யுவாநம் ராஜாநம் - வளர் இளவரசென"

DRAFT

## அலங்காராசனம்:-

வஸ்த்ரம், உத்தரீயம், உபவீதம், சந்தனம், திருவாபரணம், சுகந்த தூபம், தீபம் முதலியவைகளைச் சமர்ப்பிக்க வேண்டும். அப்போது மதம் பிடித்த யானைக்கு எப்படி பயந்து நடந்து கொள்வார்களோ அப்படியே பகவானுடைய திருமேனி சிரமம் இல்லாமல் எதையும் அழுத்திக்காட்டாமல் மென்மையாகச் சமர்ப்பிக்க வேண்டும், வெறும் யானை அல்ல மதம் பிடித்த யானை.

" மதஹஸ்தினம் - வனமதகரியென "

## போஜ்யாசனம்:-

சுத்தமான நெய் சேர்த்து அறுசுவையுடன் கூடிய சித்ரான்னங்கள், பக்குவமாக தயாரித்த பட்சணங்கள் (கடித்து சாப்பிடுவது) போஜ்யங்கள் (குடிப்பது) லேஹ்யம் (நக்கி சாப்பிடுவது) சோஷ்யம் (வறுவல்கள்) நல்ல தயிர் தாம்பூலத்துடன் சமர்ப்பிக்க வேண்டும். எப்படி தாயார் தன் மகனுக்கு பிடித்த அன்னங்களையும் பதார்த்தங்களையும் அன்புடனும் ஆசையுடனும் தயாரித்து ப்ரியாக பரிமாறுவாளோ அப்படி அர்ச்சகனும் பொறுமையாகவும் நிதானமாகவும் தளிகை ஸமர்ப்பிக்க வேண்டும்.

" யதா ச புத்ரம் தயிதம் - மருவு நன் மகனென "

## புநர் மந்த்ராசனம்:-

உணவு அருந்திய பின் சுகந்த தாம்பூலங்களை சமர்பித்து நல்ல பாட்டு, வாத்யம், வீணை முதலியவைகளை இசைக்கச் செய்து ஸ்துதிப்ரியானான பகவானை வேதம், புராணம், ஆழ்வார் ஆசார்யர்களுடைய ஸ்தோத்ரங்களால் பாடி மகிழ்விக்க வேண்டும். எப்படி கிடைத்தற்கறியதான ரத்னம் கிடைத்தால் அதை நாம் மகிழ்ச்சியுடன் கொண்டாடுவோமோ அப்படி நினைத்து உபசரிக்க வேண்டும்.

நாயின தாளம்
கி.பி. 2-ஆம் நூற்றாண்டு



" அருவிலை மணியென "

## பர்யங்காசனம்:-

அலங்காரசனத்தில் சமர்பித்த திருவாபரணங்கள், சந்தனம், புஷ்பம் முதலானவற்றை திருமேனிக்கு உறுத்தாத வண்ணம் களைந்து சுகந்தமான சயனத்தில் பகவானை திருக்கண் வளர ப்ரார்த்திக்க வேண்டும். தேவர்களுக்கும், யுக யுகமாக தபஸ் செய்தும் முனிவர்களுக்கு கிடைக்காத பகவான் நாம் ஆராதிக்கும்படி நமக்கு கிடைத்துள்ளானே என மகிழ்ந்து நம் பிறவியின் பயன் அடைந்ததாக நினைத்து சுகந்த தூபப் புகையால் விசிறி மகிழ வேண்டும்.

" அருஅனை இறைவனை அருகனையுடனே "

ஸ்வாமீ தேசிகன் வைணவ தினசரி என்ற பாசுரத்தில் இப்படி நமக்கு அருளிச் செய்கிறார்.

இப்படி நாம் ஸமர்பிக்கும் ஒவ்வொரு உபசாரத்தையும் - கண்டருள வேண்டும். ஸ்வீகரித்தருள வேண்டும். ஏற்படும் அபாரதங்களைப் பொறுத்தருள வேண்டும். பிரீதி அடைய வேண்டும் என்று பய பக்தியுடன் சமர்பிக்க வேண்டும்.

திருவுருவங்களாக உள்ள எல்லா மூர்த்திகளுக்கும் தளிகையைக் கண்டருளச் செய்ய வேண்டும் (துவார பாலகர்கள், ஆழ்வார், ஆசார்யர்கள் முதலானவர்கள்) அமூர்த்திகளாக திருமேனிகளாக இல்லாமல் மந்த்ரத்தால் மட்டும் ஆவாஹணம், செய்யப்பட்டுள்ளவர்களுக்கு (பலிபீடம்) பலிசாதிக்க வேண்டும். விடாது முதல் ஆவரணத்திலும், துவாரங்களிலும், பலிபீடத்திலும் பலி சமர்பித்து வந்தால் கோவிலில் திருட்டு முதலிய அசம்பாவிதங்கள் நடைபெறாது. கேரள தேசத்தில் "ஸ்ரீவெளி" என விடாது பலி சமர்பித்து வருகிறார்கள். அங்கு திருட்டு முதலியவை பெரும்பாலும் நடை பெறுவதில்லை. இதை முக்யமாக கவனித்து சிரத்தையுடன் கோயில் வழக்கப்படிச் செய்ய வேண்டும்.

DRAFT V.S.Jayabal

மூலவருக்கு திருமஞ்சனம் செய்யுமிடங்களில் முதலில் தைலங்களை நன்றாகச் சமர்பித்து, திருமஞ்சனமானவுடன் சீயக்காய் முதலிவற்றால் திருமேனியில் பிசுக்கு பிடிக்காத வண்ணம் அக்கறையுடன் சுத்தம் செய்து நன்றாக துடைக்க வேண்டும். இதனால் திருமேனிகள் மழுக்கு பிடிக்காமல் இருக்கும். உள்சாத்து வஸ்த்ரங்களைச் சார்த்தியே கவசங்களை ஸமர்ப்பிக்க வேண்டும். மெதுவாகவும் பொறுமையாகவும் சமர்பித்தால் திருமேனிகள் பின்னமேற்படாமல் இருக்கும். உத்ஸவர்களையும் வாகனங்களில் புறப்பாடு செய்யும் காலங்களில் நன்றாக ஏகாந்தம் செய்து ஏள்ளப்பண்ண வேண்டும். நடுவில் எந்த ஹாநியும் திருமேனிகளுக்கு ஏற்படாது. மேலும் கர்ப்ப க்ருஹம் அர்த்தமண்டபம் முதலியவற்றை எப்போதும் தூய்மையாக வைத்துக் கொள்ள வேண்டும். நித்ய தீபம் ஹார்த்தி தட்டு போன்ற உபகரணங்களை அடிக்கடி தூய்மை படுத்த வேண்டும். மேலும் எண்ணைய் முதலியவற்றை சிந்தாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். தூய்மையாக இருக்கும் இடத்தில நாம் வசிக்க ஆசைப்படுவது போல் பகவானும் தூய்மையான இடத்தில் தான் இருப்பார்.

மூலஸ்தானத்தில் துர்நாற்றம் வராமலும், திருமேனிகளில் காய்ந்த புஷ்பம், கிழிந்த வஸ்த்ரம்

DRAFT
v.S.Jayabal

முதலியவை இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். "பிம்பாக்ருத்ய ஆத்மனா பிம்பே " என்கிறபடி நம் உடம்பினுள் ஜீவன் இருப்பது போல், திவ்ய மங்கள விக்ரஹத்திலும் பகவான் மந்த்ரமயமான சரீரத்துடன் இருக்கிறார்.

எனவே நேரம் தவறாமலும் நாள்தோறும் சரியான மந்த்ர உச்சரிப்புடன் ஆராதனம் செய்தால் ஸர்வேஸ்வரனான பகவான் அர்ச்சகர்களுக்கு அருகில் இருப்பான். "அர்ச்சக பராதீனோ அகிலாத்ம ஸ்திதி" என்று

எனவே தூய்மையுடன் மந்த்ரங்களை சரியாக உச்சரித்து திருவாராதனம் செய்து வந்தால் கோவிலும், சிப்பந்திகளும், அதிகாரிகளும், பக்தர்களும், ஊரும், நாடும் சரியான பாதையில் செல்லும். இதுவே நம் முன்னோர்கள் கண்ட அனுபவம். நாமும் சரியாக கடை பிடித்து பின்புள்ளோரும் நன்மையடைய நாம் பெரியவர்கள் சென்ற வழியில் செல்வோமாக. யாருக்கும் கட்டுப்படாத யானை பாகனுடைய அங்குசத்திற்கு கட்டுப்படுவது போல் பகவான் அர்ச்சகர்களுடைய மந்த்ரத்திற்கு கட்டுப்படுகிறார். இதை பெறாப் பேறாக கருதி திருவாராதனத்தைச் சரியாகச் செய்து பகவானை நம் வசப்படுத்துவோமாக.

DRAFT V.S.Jayabal

## 2.9 பிரம்மோத்ஸவம்

### பிரம்மோத்ஸவம் - விளக்கங்களும், பலன்களும்

### முன்னுரை

திருவுக்கும் திருவாகிய எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் பக்தர்களை காக்க வேண்டி திருக்கோயில்களில் விக்ரஹ வடிவினனாய் சான்னித்யம் பெற்று விளங்குகிறான். இந்த எம்பெருமானுக்கு நித்ய பூஜை, யாகங்கள், திருமஞ்சனம் முதலான வைபவங்கள், உற்சவங்கள் ஆகியவை திருக்கோயில்களில் நடைபெற்று வருகிறது. இதில் பிரம்மோத்ஸவம் என்பது முக்யமாக பேசப்படுகிறது.

DRAFT V.S.Jayabal

### பிரம்மோத்ஸவம்:

பிரம்மதேவனால் ஏற்படுத்தப்பட்டு, கருடக்கொடியேற்றி 9 வாகனங்களிலும், பல்லக்கிலும், திருவீதி எழுந்தருளச்செய்து யாகவேள்வி நடத்தி தீர்த்தவாரியோடு பூர்த்தி செய்வது பிரம்மோத்ஸவம் ஆகும். இந்த உத்ஸவத்தில் செய்யப்படும் வைபவங்களையும் அதனை தரிசிப்பதால் ஏற்படும் பலன்களையும் சுருக்கமாக காண்போம்.

## 1. புற்றுமண் எடுத்து விதையிடுதல் விழா

(மிருத்ஸங்கிரஹணம், அங்குரார்ப்பணம்)

உலகெங்கும் பயிர் தொழில் சிறப்பாக இயங்க வேண்டி, மேதினி தேவியை (பூமித்தாயை) வழிபட்டு புற்றிலிருந்து மண் எடுத்து வந்து, நவதானியங்களை பாலிகைகளில் ஆகமவிதிப்படி விதையிடப்படுதல் முக்யமாக சொல்லப்படுகிறது. இதில் ஸோமன் என்ற வனஸ்பதி தேவதைக்கு பூஜைகள் செய்யப்படுகின்றன. இந்த பூஜைகளை தரிசிப்பதால் நாட்டில் மக்களுக்கு பஞ்சம் பசியின்றி சுபிக்ஷசமாக இருக்கும் என்று கூறப்படுகிறது



## 2. கருடக்கொடி ஏற்றுதல் (த்வஜாரோகனம்)

உத்ஸவ ஆரம்பமாக இந்த த்வஜாரோகனம் செய்யப்படுகிறது. இந்த உத்ஸவத்தில் பகவான் விஷ்ணு, கருடபகவான், இந்திரன் முதலான அஷ்டதிக்பாலர்கள், சக்ரம் விஷ்வக்ஸேனர் ஆகிய தேவதைகள் ஆராதிக்கப் படுகிறார்கள். இந்த உத்ஸவத்தை தரிசிக்கும்போது மனதிலுள்ள பாரங்கள் அகன்று நிம்மதியும் சந்தோஷமும் சாந்தியும் கிடைக்கும். கருடனுக்கு நிவேத்யமான பிரசாதத்தை உண்பவர்களுக்கு பல்வேறு அபூர்வ பலன்கள் சொல்லப்பட்டுள்ளது. முக்யமாக புத்ரன் (குழந்தை)

DRAFT V.S.Jayabal

இல்லாதவர்களுக்கு புத்ரபாக்யமும், மனநிலை பாதிக்கப்பட்டவர்களுக்கு ஞாபகம் திரும்பும் நிலை ஏற்படும் என்று சொல்லப்பட்டுள்ளது.

## 3. பிரம்மோத்ஸவ யக்ஞ (வேள்வி) விசேஷம்:

ஒவ்வொரு நாள் காலை மாலை வேளைகளில் நெய், ஸமித்து குச்சிகள், ஹவிஸ் (சாதம்) ஆகிய திரவியங்களினால் பகவானுக்கு ஆஹுதிகள் அளிக்கப்படுகின்றன. இதில் அன்று அன்று திதிவார நட்சத்திரம் வாஹனங்கள் முதலான தேவதைகளுக்கு வேத மந்திரங்களைச் சொல்லி ஆஹுதிகள் தரப்படுகின்றன. இந்த வேத மந்திரங்களையும் ஹோமங்களை தர்சிப்பதால் ஆயுள், ஆரோக்யம், ஐச்வர்யம், பஞ்சம் இல்லாமை, பூகம்பம் முதலான இயற்கை சீற்றங்கள் இல்லாமை முதலான அநேக பயன்கள் கிடைக்கும் என ஆகமங்கள் எடுத்து இயம்புகின்றன.

## 4. பிரம்மோத்ஸவத்தில் வாகனப் புறப்பாடுகள்

### 4-1 ஹம்ஸ வாகனம் (அன்னபக்ஷி)

1-ம் நாள் அன்னப்பக்ஷி வாகனத்தில் மன்மத ராஜனாக எம்பெருமான் அருள் பாலிக்கிறார். பிரம்மா எம்பெருமானுக்கு அளித்த வாகனம். அன்னபக்ஷியை சாதாரணமாக பார்க்கும் போது ஒரு கருணையும்,

DRAFT V.S.Jayabal



சாந்தமும் தோன்றும். அவ்வாறாக இந்த சேவை மக்களுக்கு, (பிரம்ம ஞானத்தையும்) தெய்வீக உணர்வையும், குழந்தைகளுக்கு வித்யையையும், சதிபதிகளுக்கு அன்யோன்யத்தையும் பிரஸாதிக்கும். ஹம்ஸம் நீரையும், பாலையும் பிரித்து பாலை மட்டும் எடுத்துக் கொள்வது போல், நம்முள் உள்ள காம (பேராசை), கிரோத (கோபம்), லோப (கஞ்சத்தனம்), மத (ஆணவம்), மாத்ஸர்யம் (பொறாமை), ஆகியவற்றை நீக்கி சுத்தமான மனதுடன் இறைவழிபாட்டிற்கு கொண்டு செல்லும்.

## 4-2 சிம்ம வாஹனம்:

2-ம் நாள் பகவான் சிங்கவாஹனத்தில் மிருக இந்திரனாக சேவை சாதிக்கிறார். காட்டரசனான சிங்கம் மீது ஆரோகணித்து ராஜ தர்மத்தையும், நீதியையும் நிலைநாட்டி, சத்ரு பயத்தை போக்குவதாக இந்த



அலங்காரம் அமைகிறது. இச்சேவையை தரிசிப்பதால் மனதிலுள்ள கோழைத்தனம் அகன்று தைரியம் ஏற்படும். எடுத்த காரியம் தடையின்றி நிர்பயமாக வெற்றிபெறும். ராஜ விருத்தி ஏற்படும்.

DRAFT
V.S.Jayabal

## 4-3 ஹனுமான் வாஹனம்:



2-ம் நாள் வாயு பகவானால் எம்பெருமானுக்கு ஹனுமந்த வாகனம் அளிக்கப்பட்டது. 3-ம் நாள் இவ்வாகனத்தில் சக்கரவர்த்தி திருமகனாக சேவை சாதிக்கிறார். ஸாக்ஷாத் ஆஞ்சநேய பகவானை ஸேவிப்பதால் ஏற்படுவதாகிய புத்தி, பலம், புகழ் தைரியம், பயமின்மை, வியாதியின்மை, சோம்பலின்மை, நாவன்மை, வித்யாமேன்மை, போன்ற நற்குணங்கள் உண்டாகும். ஏகபத்னி விரதனாகிய இராமனின் கடாக்ஷம் பெற்றால் சகோதர பண்பு, சத்யம், தர்மம், தாய் தந்தையரை தெய்வமாக மதித்தல், தியாகம், எளிமை, தம்மக்களைக் காத்தல் முதலிய மாண்புகள் நமக்கு கிடைக்கும் என்பதில் ஐயமில்லை.

DRAFT
V.S.Jayabal

## 4-4 கருட வாகனம்:



எம்பெருமானுக்கு மிக உகந்த வாகனமாகவும், கொடியாகவும் விளங்குபவர் கருடன். 'பறவையேறும் பரம புருடா' என்று ஆழ்வாரும் போற்றுகிறார். ஸேவைகளில் 'கருடசேவை' இந்த 10-ம் நாள்

உற்சவத்தில் கண் போன்றதாகும். 'ஆதிமூலமே' என்று கூவிய யானையின் துயர் தீர்க்க கருடன் மீது ஆரோகணித்து சங்க சக்ர கதாயுதங்களோடு கஜேந்திர வரதனாக வந்து முதலையை அழித்து காப்பாற்றிய லீலையை சொல்லுவதாக 4-ம் நாள் இந்த சேவை அமைகிறது. கருட சேவை தரிசனம் 'விஷகுணங்களை போக்கடித்தல், கர்ம தோஷம் போக்கடித்தல், புத்ரதோஷங்களை விலக்குதல், சாம வேத கானத்தில் ஏற்படும் பயன்களை தருதல், பகவத்பக்தியை வளர்த்தல் ஆகியவற்றை தலைகட்டி வைக்கிறது (தருகிறது).

### 4-5 சேஷ வாஹனம்:



ஸ்ரீவைகுண்டத்தில் பகவானோடு இருந்து கைங்கர்யம் செய்பவனாக ஸ்ரீசேஷன் விளங்குகிறார். எம்பெருமானுக்கு, சென்றால் குடையாகவும், அமர்ந்தால் ஸிங்காசனமாகவும், நின்றால் பாத பீடமாகவும், சயனம் செய்தால் படுக்கையாகவும், ஸ்ரீசேஷனே விளங்குகிறார். இளையபெருமாள் என்ற லக்ஷ்மணரும், பிற்காலத்தில் வைணவம் வளர்த்த இராமானுஜரும் ஸ்ரீசேஷனின் அம்சமே ஆவர். சன்னதியில் சடாரி என்ற பாதுகையை

தாங்கிக்கொண்டு இருப்பவரும் ஸ்ரீசேஷனாவார். 5-ம் நாள் இவ்வாகனத்திலே கிருஷ்ணாவதார திருக்கோலத்திலே காட்சி தருகிறார். இந்த வாகன சேவையை தரிசித்தால் அனந்தாழ்வானை போல பகவானுக்கு கைங்கரியம் (பணி) செய்யும் மனப் பக்குவமும், ஜாதக ரீதியாக ஸர்ப தோஷம், ராஹு-கேது தோஷங்கள் விலகுதல் முதலான பலன்கள் கிடைக்கும்.

### 4-6 கஜவாஹனம்: (யானை வாகனம்):



6-ம்நாள் கஜ வாகனமாகும். தேவர்களின் தலைவனான இந்திரனால் எம்பெருமானுக்கு வாகனமாக ஸமர்ப்பிக்கப்பட்டது ஐராவதமாகும். மஹாலக்ஷ்மிக்கு யானையே கொடியாக விளங்குகிறது. யானையின் சப்தத்தில் மகாலக்ஷ்மி வஸிக்கிறாள் என்றும் சுபமாக கூறுவதுண்டு. யானையின் முகத்தில் உள்ள பிரஸன்னத்தையும், அதிலே ஆரோகணித்து ஸாம்ராட் (ராஜா) சேவை சாதிக்கிற எம்பெருமானை தரிசிப்பதால் லக்ஷ்மி கடாக்ஷம் அரசு சார்ந்த வெகுமதிகள், சுக்கிர கிருஹ பார்வை ஆகியவை கிடைக்கப் பெற்று உள்ளும் புறமும் எப்போதும் சந்தோஷத்தையும், நிம்மதியையும் அளிக்கிறது.

DRAFT V.S.Jayabal

## 4-7 இந்திர விமானம்:



எம்பெருமான் ஸ்ரீதேவி பூதேவி ஆகிய தேவியரை மணந்து மணமக்களாக திருக்கல்யாண கோலம் பூண்டு இந்திர விமானத்தில் 7-ம் நாள் பவனி வருகிறார். திருக்கல்யாண மங்கள அக்ஷதையினால் எல்லா தேவதைகளும் பூர்ண திருப்தியாக இருக்கிறார்கள். இந்த சேவையை தர்சிப்பது கண் படைத்த பயன். பிரிந்த தம்பதியினர் சேருதல், தாம்பத்ய ஒற்றுமை, திருமணம் ஆகாத கன்னியர் காளையருக்கு விவாஹம் கூடுதல், புத்ர பாக்கியம், அஷ்ட ஐச்வர்யம் நிறைய பெருதல், பெண்களுக்கு தீர்க்க சௌமாங்கல்ய பலம் ஆகிய நன்மைகள் கிடைப்பதில் வியப்பில்லை. ஸ்ரீகடாக்ஷம் பரிபூர்ணம்.

DRAFT VS.Jayavel

## 4-7 குதிரை வாகனம்:

பிரம்மோத்ஸவத்தில் 8-ம் நாள் குதிரை வாகனத்தில்



'ஆடல் மா அரசனாக' எம்பெருமான் காட்சி தருகிறான். குதிரையின் முன் பாகத்தில் லக்ஷ்மி ஸான்னித்தியம் கொண்டுள்ளதாக வேதம் கூறுகிறது. கலியுக தர்மம் காக்க குதிரை மீதேறி தீமைகளை களைவதாக கூறப்படுகிறது. இவ்வுத்ஸவத்தில்

வேடுபறி சேவை நடந்து, கலியனாகிய திருமங்கை ஆழ்வாரை அனுகிரஹித்து திருமந்திரத்தை உபதேசிப்பது வைணவ நெறியில் உயர்ந்த வைபவமாக கருதப்படுகின்றது. இவ்வுத்ஸவத்தை தரிசிப்பதால் முரடன் பக்தனாகவும், தீய வழிகளில் பாதை மாறி சென்றவனும் ஸன்மார்க்கத்திற்கு திரும்புவான். ஞானம், வைராக்யம் கிடைக்கப்பெற்று விஷ்ணு ஸாம்ராஜ்யத்தை அடைவான் என்பது திண்ணம்.

### 4-9 ரத உற்சவம்:

அசைகின்ற விமானம் என்று திருத்தேர் போற்றப்படுகிறது. இன்று ஒரு நாள் மட்டும் ஸ்ரீவைகுண்டத்திலிருந்து தன்னுடைய விமானத்திலே கீழிறங்கி ஒவ்வொரு பக்தனையும் விசாரித்து அனுகிரஹிக்க வருவதாக தனிப்பெரும் சிறப்பு ஆகும். எம்பெருமான் இந்த நாளில் ஸேவிப்பதற்கு ஒப்புமை இந்த நாளில் மட்டும் ஸேவிப்பது தான். மற்றொன்றும் கூற முடியாது. ஜாதி மத பேதமின்றி எல்லோரும் ஒன்று கூடி சேர்ந்து வடம் பிடித்து தேரிழுத்து மக்கள் வெள்ளத்தில் எம்பெருமான் மிதந்து வரும் அழகு கோலாஹலமானது. ஆனந்த பரவசமூட்டும் இந்த உத்ஸவத்தை தரிசித்த பலன்களை வாயால் சொல்ல முடியாதபடி ஆனந்தமானது (கணக்கற்றது).

DRAFT V.S.Jayabal

டோலாயமானம் கோவிந்தம் மஞ்சஸ்தம் மதுஸூதனம்
ரதஸ்தம் கேசவம் திருஷ்ட்வா புனர்ஜன்ம நவித்யதே

ரத உத்ஸவத்திலே பகவத் தரிசனம் செய்தவர்களுக்கு, புனர் ஜன்மம் என்பது இல்லாமல் சாச்வத விஷ்ணு லோகத்தை அடைகின்றான்.

### 4-10 சக்ரஸ்நாநம்:

10-ம் நாள் காலை தீர்த்த உத்ஸவம் என்ற சக்ர ராஜனை நதி, குளங்களில் அர்ச்சகர் எடுத்து சென்று திருமுழுக்காடி அந்த தீர்த்தத்தை பக்தர்கள் மீது தெளித்து, ஆனந்த பாஷ்பம் பொங்க எம்பெருமானுக்கு பிரம்மோத்ஸவத்தை நிறைவு செய்யும் வைபவம் ஆகும்.

இந்த உத்ஸவத்தில் கலந்து கொள்பவர்களுக்கு அச்வமேத யாகம் செய்த பலனும், தனக்கு முன்னர் 10 தலைமுறை, பின்னர் 10 தலைமுறை, தான் ஆகிய 21 தலைமுறைக்கு விஷ்ணுவின் ஸாயுஜ்ய (மோக்ஷ) பதவி கிடைக்க பெறுகிறது என்று ஆகம சாஸ்திரங்கள் கூறுகின்றன.

DRAFT
V.S.Jayabal

# 2.10 ஸ்ரீ வைகானஸ பகவத் சாஸ்திரத்தின் மாஹாத்ம்யம்

## முன்னுரை

இந்துக்களாக பிறந்த அனைவரும் வேதத்தில் கூறப்பட்டுள்ள தருமத்தை கடைபிடிக்க வேண்டும். 'த்ரு' என்னும் மூல எழுத்திலிருந்து 'தர்ம' என்ற சொல் வந்தது. 'த்ரு' என்றால் தாரணே (தாங்குகிற) நிலைப்படுத்துகிற என்று பொருள். அதாவது இந்த உலகை நிலைப்படுத்தி தாங்கி நிற்கும் ஆதார விஷயம் தர்மம் என்பதாகும். காலையில் எழுந்தது முதல் இரவில் உறங்கச் செல்லும் வரை எவ்வாறு இருக்க வேண்டும் எதன்படி நடக்கவேண்டும் என தருமத்தை பற்பல நூல்கள் எடுத்துரைக்கின்றன. அதில் தெய்வ வழிபாடு என்பது மனிதன் தர்மத்தை கடைப்பிடிக்கவும், நீதி தவறாது வாழவும், தவறு ஏற்பட்டால் அதற்காக பிராயச்சித்தம் செய்து கொள்ளவும், அகந்தை, காமம், மோகம், மதம், மாத்ஸர்யம் (பொறாமை), க்ரோதம் (கோபம்) இவ்வாறான ஷட் ஊர்மிகள் நம்மை தாக்காமலும், மனிதன் தன்னை உயர்த்திக்கொள்ள ஆன்மீகமும், தெய்வ வழிபாடுகளும், சடங்குகளும் நமக்கு பக்க பலமாக உள்ளன.

DRAFT
V.C.Jayabal

அவ்வாறான தெய்வ வழிபாடுகள் அருவம், உருவம் என்று இருவகைப்படும். அருவம் என்பது வடிவம் என்று ஒன்று இல்லாமல், 'அகண்ட சச்சிதானந்த தத்வமாக' எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் பரம்பொருளை வழிபடுதல் ஆகும்.

உருவம் என்பது ஓர் குறிப்பிட்ட தேவதையை கல்பித்து, வடிவு கல்பனை செய்து அதனை பூஜித்தல் ஆகும். அவ்வாறான உருவ வழிபாட்டில் காணாபத்யம், கௌமாரம், சைவம், வைஷ்ணவம், ஸௌராம், சாக்தம் ஆகியன ஷண்மத ஸ்தாபனம் என்று பெரியோர்கள் ஏற்படுத்தி உள்ளார்கள். முறையை கணபதி, சுப்பிரமணியர், சிவபெருமான், ஸ்ரீமஹாவிஷ்ணு, ஸ்ரீஸூரியன், ஸ்ரீதுர்க்கை ஆகிய தேவதைகள், அந்த மதத்துக்கு கடவுளர்கள் ஆவார். இதிலே ஸ்ரீமஹாவிஷ்ணுவின் வழிபாடு 'வைணவம்' எனும் பிரிவில் பிரஸித்தமாக பேசப்படுகிறது. வேதம், இதிஹாஸம், ஆகமம், புராணங்கள், திவ்யபிரபந்தங்கள், சிற்றிலக்கியங்கள், ஸமஸ்க்ருதாதி மொழிகளில் எழுதப்பட்ட காவியங்கள், ஸ்தோத்ரங்கள், ஆகியவற்றில் பராக்க, பரம்பொருளாக எம்பெருமான் பேசப்படுகிறார். 'நாராயணன்' ஒருவனே உலகை படைத்து, காத்து, அழித்து விளங்கும் ஸ்வாமியாக சொல்லப்படுகிறான்.

DRAFT
V.S.Jayapal

அவரை பற்றிய பராத்துவ கருத்துக்களையும், திருக்கோயிலில் விக்ரஹ வடிவாக ஆராதிப்பது, விழாக்கள் செய்வது, கும்பாபிஷேகம் செய்வது தொடர்பாக மகரிஷிகள் அருளிச் செய்தவையே 'ஆகமம்' சாஸ்திரம் ஆகும்.

## ஸ்ரீ வைகானஸ பகவத் சாஸ்திரம் (ஸ்ரீ வைகானஸ ஆகமம்)

வைணவ ஆகமங்கள் 1. ஸ்ரீ வைகானஸம் 2. ஸ்ரீபாஞ்சராத்ரம் என்பதாகும்.

இதில் ஸ்ரீவிகனஸர் என்னும் முனிவரால் அருளிச் செய்யப்பட்டது ஸ்ரீ வைகானஸ பகவத் சாஸ்திரம் எனப்படுகிறது. ஒரு குறிப்பிட்ட சாஸ்திரம் 1½ கோடி க்ரந்தங்களாக காணப்பட்டால் அது ஆகமம் என்று ஸ்ரீபாஞ்சராத்ர ஸம்ஹிதை கூறுகிறது.

> लक्षाधिकैस्तु बहुभिः सहस्रैस्तु शतान्वितैः ।
> सार्धकोटि प्रयान्तं च तच्च तन्त्राख्यमागमम् ॥
> / பௌஷ்கர ஸம்ஹிதை 39-11 /

சைவத்தில் காமிகாமத்திலும்,

!गतं च वासुदेवस्य तेनागममितीरितम् !! வாசுதேவனை பற்றிய விஷயமானதால் 'ஆகமம்' என்று வழங்கப்படுகிறது

DRAFT
V.S. Jayabal

என்று உள்ளது.

பகவானாகிய ஸ்ரீவிஷ்ணுவால் நேரடியாக ஸ்ரீ விகனஸ முனிவருக்கு உபதேசிக்கப்பட்டதால் ஸ்ரீ வைகானஸ ஆகமம் பகவத் சாஸ்திரம் என்று அழைக்கப்படுகிறது.

विखनो मुनये पूर्वं शास्त्रं भगवतेरितम् ।
तस्मात् भगवत् शास्त्रं लोके वैखानसं स्मृतम् ॥
மரீசி ஆனந்தஸம்ஹிதை (வைகானஸ ப்ரச்னோத்தரி) - 20

அவ்வாறாக உபதேசிக்கப்பட்ட, விகனஸ முனிவரின் பெருமைகள் உத்பத்தி சரிதம் பற்றி காண்போம்.

## ஸ்ரீவிகனச உத்பத்தி சரிதம்

குழி தாளம்



கி.பி. 2-ஆம் நூற்றாண்டு

சௌனகாதி மகரிஷிகளுக்கு மாீசி மகரிஷி விகனஸ முனியின் உத்பத்தியை விளக்குகின்றாா். இந்த சரிதத்தை கேட்டால் அனைத்து பாபங்களும் நீங்கும், அனைத்து மனோபீஷ்டங்களும் (பெற வேண்டியவை, இவ்வுலகில்) கிடைக்கப்பெற்று, புண்யமும், அந்திமத்தில் வீடுபேறும் கிட்டும் என்று மாீசி மகரிஷி கூறுகிறாா்.

अतः परं प्रवक्ष्यामि विखनोमुनि संभवम् ।
शृण्वतां सर्व पापघ्नं साक्षात् मोक्षप्रदं शुभम् ।
सर्वाभीष्ट प्रदं पुण्यं शृणुध्वं शौनकादयः
(ஆனந்தஸம்ஹிதை - 15/1,2)

ப்ரளய காலத்திற்கு முன்பு ப்ரக்ருதி முதலான அசையும் அசையாததான (உலகில் உள்ளதான) அனைத்துக்கும் தலைவரான ஸ்ரீமஹாவிஷ்ணு பாற்கடலில் யோக நித்திரையில் ஆழ்ந்திருந்தார். சில காலம் கழித்து யோக நித்திரையின்று விழித்து ப்ரக்ருதியை நோக்கி அதினில் லயித்து போன ஜீவராசிகளை நினைத்து இதிலிருந்து இந்த பிரபஞ்சமானது ஆத்மாக்களினால் பல பெயர் கொண்ட தனி தனி தோற்றங்களாக ஸ்ருஷ்டி செய்விக்க ஆலோசித்தார். இப்படி நினைத்த மாத்திரத்திலேயே தன் நாபியிலிருந்து பெரிய தாமரை உண்டானது. அத்தாமரையிலிருந்து அழகு வாய்ந்த ஸ்ரீ பிரம்மா உற்பத்தியானார்.

பிறந்த அந்த நிமிஷத்திலேயே அவர் விஷ்ணு பக்தராகிவிட்டார். கருணை கடலான ஹரி அந்த பிரம்மாவை பார்த்து மகிழ்வுடன் ஒ பிரம்மனே! நமக்கு உலகை ஸ்ருஷ்டித்து நடப்பிக்க ஆசையுண்டு. உன்னால் சகல சராசரங்களும் செய்யப்பட வேண்டும். அப்படி ஸ்ருஷ்டிக்கப்பட்ட உலகத்தின் விருத்தியை கோரியும், அதிலுள்ள ஸாது ஜனங்களை ரக்ஷிப்பதற்க்காகவும் வேத சாஸ்திரங்களை நிலைநாட்டவும், துஷ்கர்மா செய்பவர் (கெட்டவர்களை) அழிக்கவும் ஒவ்வொரு யுகத்தில் நாம் அவதரிப்போம்.

DRAFT
V.S Jayabal

ब्रह्मन् त्वया जगत्सर्वं कर्तव्यं स चराचरम् ।
लोके विष्णुमिच्छातु वर्तते पद्मसंभव ।
ततः त्वत्सृष्ट जगतां अविच्छिन्न प्रवृत्तये ।
साधु संरक्षणार्थाय वेद शास्त्रार्थ सिद्धये ।
दुष्टानां च विनाशाय संभवामि युगे युगे ।
(ஆனந்தஸம்ஹிதை - 15/8, 9, 10)

முன் கலியுகத்தில் கரை கடந்த மாயா சக்தியினாலே ஸம்ஸார ஸாகரத்தில் பிறந்த ஜீவன்கள் ஞானமில்லாமல் இருக்கின்றன. அவர்கள் மனதை நிலை நிறுத்தி யோக சாதனத்தை கொண்டு பக்தி செலுத்த அறியாதவர்கள். ஆகையால் அவர்களுக்கு மோக்ஷமாகிய வீடுபேறை அளிக்க வேண்டியும் ஸர்வ லோகத்திலும் பக்தியை பெருக்க வேண்டியும் பூலோகத்தில் ஸ்ரீதேவி பூமிதேவி ஸமேதராய் அர்ச்சாவதார (சிலை வடிவாய்) ரூபமாய் அவதரிக்க போகிறோம்.

அப்பொழுது ஆராதனம் (பூஜை) முதலான காரியங்களுக்காக ஆதி ச்ருஷ்டி என்னும் படியாக, ஒரு முனிவரை ஸ்ருஷ்டிக்க கடவாய் என்று பிரம்மனுக்கு கட்டளை (ஆக்ஞை) யிட்டார் ஸ்ரீ பகவான்.

अर्चावतारेण रूपेण लोकेऽस्मिन् चतुरानन ।
अवतारं करिष्यामि भूम्यालक्ष्म्या समन्वितः ।
मदर्चनार्थं सृष्ट्यादौ सृजत्वं मुनिसत्तम ॥
(ஆ. ஸம்ஹிதை - 15 - 14, 15)

DRAFT
V.S.Jayabal

இந்த ஆக்ஞையை ஏற்று அதன்படி ஒரு முனிவரை ஸ்ருஷ்டிக்க எண்ணினார். எவ்வளவு முயன்றும் பிரம்மாவினால் அந்த முனிவரை ஸ்ருஷ்டி செய்ய இயலவில்லை. தனது ஸாத்தியமில்லா சக்தியை அறிந்து, பகவானை நமஸ்கரித்து "ஓ! தேவ! ஸ்ருஷ்டிக்க சஸ்டிக அடியேனால் இயலவில்லை. மன்னியுங்கள் அக்கார்யத்தை தாங்களே செய்வீர்களாக! என்று பிரார்த்தித்துக் கொண்டார்.

नमस्ते देवदेवेश सृष्टिस्थित्यन्तकारण !
मुनिसृष्टिर्मया कर्तुं न शक्यते भक्तवत्सल !!
(அ-ஸம்ஹிதை 15/18)

பிரம்மா ப்ரார்த்தித்ததை ஏற்று பகவான் தன்னுடைய சக்தியினால் வேத வேதாந்த மீமாம்ஸா சாஸ்த்ர ரகஸ்யங்களை ஸ்மரித்து (ஆழ்மனதில் நினைத்து) தன் மனதிலிருந்து தன் அம்சமாக ஓர் முனியை சிருஷ்டித்தார்.

பிரதர்சன வீணை- சித்ரவீணை



கி.பி. 16-ஆம் நூற்றாண்டு

அவ்வாறு ஸ்ருஷ்டிக்கப்பட்ட முனியானவர் பகவானை அர்ச்சனை ஆராதனை செய்ய கூடிய சக்தி வாய்ந்தவராகவும், ரூபலக்ஷணங்களோடு, தேஜோமயமான தேவருக்கு ஸமமாகவும், ஸாத்வீக குணம் பொருந்தியவராகவும்,

DRAFT V.S. Jayabal

முனி வேஷத்துடன், நான்கு கரங்களும், சங்கு சக்ரமும், வரத அபய ஹஸ்த (கரம்)ங்களும், தாமரையும், தர்ப்பாஸனமும், ஊர்த்வபுண்டரமும் (நெற்றியில் திருமண்காப்பு), மகுடம், ஹாரங்கள், ஒட்டியாணம், சலங்கை தண்டை, கொலுசு ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்டவராக, சிகை (குடுமி), யக்ஞோபவீதம் (பூணல்) திரிதண்டம் ஆகியவற்றோடு விளங்கினார்.

तस्य तत्त्ववचनं श्रुत्वा देवदेवो हरिस्स्वयम् ।
चिन्तयित्वा सृजद्विष्णुः स्वाराधन परं मुनिम् ॥
वेदान्त तत्त्व मीमांसा खननं कृतवान् विभुः ।
स्वांशभूते भगवान् सञ्जातो मुनिपुंगवः ॥
रूपलक्षण सौन्दर्य तेजोवान् दिव्य विग्रहः ।
शुद्ध सत्त्व मयः साक्षात् मुनिवेष धरोऽव्ययः ॥
चतुर्भुज शंख चक्र वरदाऽभय चिह्नितः ।
कुशासने समासीनो हि ऊर्ध्वपुण्ड्र पवित्रकः ॥
किरीट हाराभरणैः कुण्डलांगत भूषितः ।
शिखा यज्ञोपवीताभ्यां त्रिदण्डेन विराजितः ॥
(ஆ. ஸம்ஹிதை 15/19-25)

இந்த உலகமே குடும்பமாய் வாய்க்கும் விஷ்ணுவுக்கு ஆத்மாவே புத்ரனாக பிறந்தார் அந்த முனியை பார்த்து எனது ஔரஸபுத்ரா! என்று கூப்பிட்டு, தீர்க்கமான ஆலோசனையின் பேரில் பிறந்தவரானபடியால் 'விகனஸ்' என்று பெயரிட்டார்.

आत्मा वै पुत्र नामासीत् विष्णोर्विश्व कुटुम्बिनः ।
नाम्ना विखनसं चक्रे तं वदन्नर्थ योगतः ॥
(ஆனந்தஸம்ஹிதை 15/26)

விகனஸருக்கு விஷ்ணு அர்ச்சனம், மோக்ஷ உபாயமான விஷயங்கள் ஸாவித்ரீ மந்த்ரம், த்வயம், மூலமந்த்ரங்கள் மற்றும் ஸர்வ சாஸ்திரங்களையும் உபதேசித்தருளினார் - பகவான் ஆக்ஞையிடுகிறார்.

“விகனஸ! நான் பூலோகத்தில் அர்ச்சாவதாரமாக அவதரிக்க போகிறோம். அப்போது பக்தியோடு என்னை ஆராதிப்பாயாக. அவ்வாறு ஆராதித்தால் அனைத்து உலகத்திற்கும் க்ஷேமம் ஏற்படும்.

तस्मात् मदर्चनं कार्यं त्वयैव मुनिसत्तम ।
आत्मार्थं वा परार्थं वा गृहे देवालयेऽपि वा ।
नित्य नैमित्तिके चैव मदीयाराधनं कुरु ॥
(ஆ. ஸம்ஹிதை - 16/16-18)

பகவானின் ஆக்ஞையை சிரமேற்கொண்டு ஸ்ரீவிகனஸர், தன் சிஷ்யர்களுடன் முதல் யுகமான கிருதயுகத்தில், 14வது மந்வந்தரமான, ஸ்வாயம்புவ மனுவின் காலத்தில், சுக்ல வருடம், ஆவணி ச்ரவணம் பௌர்ணமி திதி திங்கட்கிழமை நைமிசாரண்யத்தை அடைந்தார்

स्वायम्भुव मनोः काले युगादौ शुक्ल वत्सरे ।
श्रावणे श्रावणे मासि पूर्णिम सोमवासरे ।
सिद्धलग्नेन संयुक्तं विखनाः प्राप नैमिशम् ॥
(ஆனந்த ஸம்ஹிதை" 17)

நைமிசாரண்யத்தை அடைந்து சிஷ்யர்களான ப்ருகு, காச்யபர், அந்ரி, மரீசி ஆகிய முனிவர்களுக்கு 1 1/2 கோடி க்ரந்தங்களாக வைகனாஸ பகவத் சாஸ்த்திரத்தை உபதேசம் உபதேசித்தருளினார்.

सूत्रं विखनसा प्रोक्तं सार्धकोटि प्रमाणकम् ॥
(ஆ. ஸம்ஹிதை 18)

விகனஸ ஆசார்யரிடத்திலிருந்து கற்ற விஷயங்களை நான்கு ரிஷிகளும், 4 லட்சம் க்ரந்தங்களாக, சுருக்கி வரைந்தார்கள்.

काश्यपेनात्रिणाचैव मया च भृगुणा तथा ।
चतुर्लक्ष प्रमाणेन संक्षिप्य प्रोच्यते ऽधुना (ஆ.ஸம் - 18)

அதன்படி ஸ்ரீசாஸ்திரம் இன்றுவரை திருக்கோயில்களில் ஜீர்ணோத்தாரணம், ஸம்ப்ரோக்ஷணம், ஆராதனம், உத்ஸவங்கள், ஸ்தாபனங்கள், ப்ராயச்சித்தங்கள் ஆகியவைகளாக பயன்பாட்டில் இருந்து வருகிறது.

## ஸ்ரீவைகானஸ ஆகமம் மற்றும் வைகானஸர்களின் மஹிமை

பழமையான வேதமாகிய ரிக் வேதத்தில் நூறு மந்த்ரங்களுக்கு விகனஸர் அதிதேவதையாக விளங்குகிறார்.

" पवस्वन्तं वैखानसः पवस्वते " इत्यादि शतर्चिः वैखानसाधि [देवता:
(रिक् - 8 - 70 - 3)

யஜுர் வேதத்தில் வைகானஸர்கள் பாபபற்றவர்கள். பகவானுடைய திருமேனியிலிருந்து தோன்றினார்கள்,

'येनघ्याः ते वैखानसाः'

விஷ்ணுவின் வாக்கிலிருந்து விகனஸர் உத்பவமானார்

वैखानस मुनिः पूर्वं विष्णो वाणी समुद्भवेत्
(ஸ்ரீதோபணிஷத்)

இராமாயணத்தில் பாலகாண்டத்தில் வஸிஷ்ட ஆக்ரமம், ஜபம், ஹோமம், பாராயணம், தியானம் இவற்றில் ஈடுபடுகிற வைகானஸ வாலகில்யர்களால் - ச்ரேஷ்டமாக காணப்படுகிறது.

DRAFT
V.S.Jayabal

ऋषिभिः वालखिल्यैश्च जपहोमपरायणैः ।
अन्यैः वैखानसैश्चैव समन्तात् उपशोभितम्
(ராமா- பால. காண் - 51/27)

கிஷ்கிந்தா காண்டம், சீதாதேவியை தேடுவதற்காக புறப்பட்ட வினதரிடம் ஸுக்ரீவன், வினதா! ஸெளமனஸ சிகரத்தில் மஹா தபோ தனர்களாகவும் திவ்ய ஒளியுடன் விளங்கும் வைகானஸர்களிடமும், வாலகில்யர்களிடமும் ஸீதாதேவியை பற்றி விசாரிப்பாயாக என்று கூறுகிறார்

तत्र वैखानसा नाम वालखिल्या महर्षयः ।
प्रकाशमाना दृश्यन्ते सूर्यवर्णाः तपस्विनः ॥
(இராமா. கிஷ் . கா - 40/60)

43வது ஸர்க்கம் கிஷ்கிந்தா காண்டத்தில், "இளம் சூரியன் போன்ற ஒளியில், பிரகாசித்துக் கொண்டு ச்ரேஷ்டமான அன்னபக்ஷிகளின் வசிப்பிடமாக இருந்து கொண்டு பொன்னிறமான சுத்த ஜலம் நிறைந்த வைகானஸ தீர்த்தம் இருக்கிறது என்றும் அங்கு தபோதனர்களான வைகானஸர்கள் வஸிப்பதால் அத்தீர்த்தத்திற்கு அப்பெயர் பெற்றதாக விளக்கப்படுகிறது.

ஸ்வரபத்

கி.பி. 13-ஆம் நூற்றாண்டு

हेम पुष्कर संछन्नं तस्मिन् वैखानसं सरः ।
तरुणादित्य संकाशैः हंसैः विचरितं शुभैः ॥
(இராமா. கிஷ் . காண் - 43)

DRAFT
v.s.Jayabal

மஹாபாரதத்தில் சாந்தி பர்வாவில்,

ஆயிரம் மந்த்ரங்களை காட்டிலும் ஒரு பிரம்மசாரியும், ஆயிரம் பிரம்மச்சாரிகளைக் காட்டிலும் ஔபாஸனம் செய்யும் கிருஹஸ்தனும், ஆயிரம் ஔபாஸனம் செய்பவர்களைக் காட்டிலும் ஸோமயாஜியும், ஆயிரம் ஸோமயாஜிகளைக் காட்டிலும் வேதாந்த சாஸ்திரம் அறிந்தவரும், ஆயிரம் வேதாந்திகளைக் காட்டிலும் ஒரு விஷ்ணு பக்தனும், சிறந்தவர்களாக கூறப்படுகின்றனர். ஆயிரம் விஷ்ணு பக்தர்களை காட்டிலும் ஓர் வைகானஸர் ச்ரேஷ்டமானவர்

मन्त्राणां सहस्रेभ्यो ब्रह्मचारी विशिष्यते
ब्रह्मचारी सहस्रेभ्यो नित्ययाजी विशिष्यते।
नित्ययाजी सहस्रेभ्यो सोमयाजी विशिष्यते।
सोमयाजी सहस्रेभ्यो सर्ववेदान्त पारगः।
वेदान्तगः सहस्रेभ्यो विष्णुभक्तो विशिष्यते।
विष्णु भक्त सहस्रेभ्यो विप्रो वैखानसो वरः॥
(சாந்தி பர்வா ஸ்ரீமத் மஹாபாரதம்)

பாத்மபுராணத்தில் எங்கு வைகானஸ பூஜை நடைபெறுகிறதோ அங்கு அனைத்து துக்கங்களும் நாசமடைந்து அனைத்து ஸம்பத்துகளும் உண்டாகும்

पूजा वैखानसैर्विप्रैः आलयस्यात् विशेषतः।
सर्वं संपत्करं चैव सर्व दुःख विनाशनम्॥ (பாத்மபுராணம்)

DRAFT
v.s.jayabal

**கூர்மபுராணம்:-** வைகானஸர்கள் தங்களுடைய உயிர், மனம், எண்ணம் ஆகியவற்றை என்னிடம் அர்ப்பணித்தவர்களாய் மற்றவர்களை சரணம் அடையாதவர்களாக சிறந்தவர்களாக விளங்குகிறார்கள். (ஸ்ரீ கிருஷ்ணன் வாக்கு)

मच्चित्ता मद्गतप्राणाः मयि संगत मानसाः ।
अनन्य शरणाः राजन् तस्मात् वैखानसाः वराः ॥

**<u>மற்ற புராணங்களில்:-</u>**

எங்கு வைகானஸர்கள் உள்ளார்களோ எங்கு பசுக்கள் வஸிக்கின்றனவோ, எங்கு வில்வ மரங்கள் புரசு மரங்கள் காணப்படுகின்றனவோ அங்கு விஷ்ணு ஸாந்நித்யம் கொண்டுள்ளார்.

यत्र वैखानसा विप्राः यत्र सन्ति गवाङ्गणाः ।
यत्र बिल्वाः पलाशाश्च तत्र सान्निहितो हरिः ॥

உலகில் புனிதமானவர்கள் 7. 1. அக்னி, 2. வைகானஸசாஸ்த்ரம் 3. விஷ்ணு, 4. வேதங்கள், 5. காயத்ரீ மந்த்ரம், 6. விஷ்ணு பக்தர்கள், 7. ஞானிகள் என்பன

अग्निर्वैखानसं शास्त्रं विष्णुर्वेदाश्च शाश्वताः ।
गायत्री वैष्णवा विप्राः सप्तैते बहुपावनाः ॥

DRAFT S.Jayabal

வேதத்திற்கு சமமான வைகானஸ ஸூத்ரத்தில் எந்த தர்மங்கள் சொல்லப்பட்டனவோ அவை அனுஷ்டிக்க வேண்டியவைகள். அதில் விவாதங்களுக்கு இடமில்லை.

वेदे वैखानसे सूत्रे यो धर्मः परिकीर्तितः ।
सर्वस्स धर्मोऽनुष्ठेयः नात्र कार्या विचारणा

ஸ்ரீ பாஞ்சராத்ரம் - பௌஷ்கரஸம்ஹிதையில்

வைகாஸனர்கள் என் அந்தரங்க பக்தர்கள். இவர்கள் ஏகாந்திகள். நாராயணனையே முதன்மை கொண்டு விளங்குபவர்கள். அன்ய தேவதை உபாஸனை செய்யாதவர்கள். ஸ்ாத்வீகர்கள். பலனை எதிர்பாராது ஆராதனத்தையே சிறந்த தனமாக கொண்டு கடைசியில் என்னை சரணடைபவர்கள்.

विप्रा वैखानसाख्या ये भक्ताः तत्वमुच्यते ।
एकान्तिनः स्सत्वस्थाः देहान्तं नान्ययाजिनः ।
कर्तव्यमिति देवेशं संयजन्ते फलं विना ।
प्राप्नुवन्ति च देहान्ते वासुदेवत्वं अब्जज ॥

ஸ்ரீபாஞ்சராத்ரம் - ஆத்மஸம்ஹிதையில் சாண்டில்யர் சதாநந்தருக்கு சொல்லுவதாவது

மஹாபூதங்களில் நிறைந்திருப்பவரும், சித்-அசித்து இவைகளை சரீரமாக உடையவருமாகிய விகனஸரால்

இந்த உலகம் நிறைந்திருக்கிறது. ஜகத் காரணனான அச்யுதனை நீ சரணடைய வேண்டும். இங்கு விஷ்ணுவே விகனஸராக பிரகாசிக்கின்றார்.

महाभूतेन भूतेन व्याप्तं विखनसा जगत् ।
तमेव शरणं गच्छ जगत् कारणमच्युतम् ॥

இவ்வாறு பெருமைகளை உடைய ஸ்ரீவைகானஸ பூஜை நடைபெறும் இடங்கள் பற்றி காண்போம்.




## <u>ஸ்ரீவைகானஸ ஆகம பூஜை நடைபெறும் கோயில்களும் பலன்களும்</u>

திருப்பதி, திருமாலிருஞ்சோலை (கள்ளழகர்), ஸ்ரீவில்லிபுத்தூர், கூடலழகர் ஸன்னதி, ஒப்பிலியப்பன் திருக்கோயில், திருவல்லிக்கேணி, திருநீர்மலை, உத்தமர் கோயில், புள்ளம் பூதங்குடி, திருக்கண்டியூர், ஒப்பிலியப்பன் கோயில், திருக்கண்ணபுரம், திருவாலி திருநகரி, நாச்சியார்கோயில், நாதன் கோயில், திருச்சித்ரகூடம், சீர்காழி, கூடலூர், திருக்கண்ணங்குடி, திருக்கண்ணமங்கை, கபிஸ்தலம், திருவெள்ளியங்குடி, திருக்கோட்டியூர், திருமெய்யம், திருப்புல்லாணி, திருத்தண்கால், திருக்கூடலழகர் கோயில், வானவாமலை, திருக்குறுங்குடி, திருவயிந்திரபுரம், திருக்கோயிலூர்,

DRAFT v.s.Jayabal

திருத்தண்கா, ஸ்ரீ பரமேச்வ விண்ணகரம், திருநீர்மலை, திருவிடந்தை, திருக்கடல்மல்லை, திருக்கடிகை (சோளிங்கர்), ஸ்ரீநைமிசாரண்யம் ஆகிய திவ்ய தேசங்களும், பலநூறு புராண க்ஷேத்ரங்களும், கிராமங்களிலும் நகரங்களிலும் ஸ்ரீவிகனஸர் வகுத்துக் கொடுத்த ஸ்ரீ வைகானஸ ஆகம ரீதியாக பூஜைகளும், ஸம்ப்ரோக்ஷணங்கள், உத்ஸவங்கள் நடைபெற்று வருகிறது.

ஸ்ரீவைகானஸ ஆகமமானது நான்கு வேதங்களான ரிக், யஜுர், ஸாம, அதர்வண வேதங்களை கொண்டது.

வைகானஸ பூஜையானது எங்கு நடைபெறுகிறதோ அங்கே 'அச்வமேதம்' என்று சொல்லுவதான யாகமானது நூறு செய்தால் (ஓர் நாளுக்கு) என்ன பலனோ அந்த பலனை அளிக்கவல்லது.

வைகானஸ அர்ச்சகர்களுக்கு 'தப்தமுத்ரா' (ஸமாச்ரயணம்) என்பது தனியே கிடையாது. அவர்களது பிறப்புக்கு முன்னரே கர்ப்பத்திலேயே 'விஷ்ணுபலி' என்ற சடங்கின் மூலமாக கர்பவைஷ்ணவத்வம் (வைணவராகிய தகுதி) ஸித்திக்கின்றது. இந்த ஒரே பெருமையினால் ஸ்ரீவைகானஸர்கள் பூஜைக்காகவே

DRAFT V.S.Jayabal

பிறக்கச் செய்யப்பட்டவர் (பகவானேலே) என்பது சாஸ்திர ஸம்மதமாகும்.

வைகாஸனுடைய பிறப்பு முதல் இறப்பு வரையிலான சடங்குகளையும் தொகுத்தளித்து 'சாக்ஷாத் பகவானாகவே' அவனை (வைகானஸனை) ஸ்ம்ஸ்காரங்களினால் பலப்படுத்திய செம்மைப்படுத்திய ஸ்ரீவிகனஸாசார்யனுடைய உதார குணத்தையும், தயையையும் நினைத்து நினைத்து ஆனந்த பாஷ்பம் விடுவது தவிர வேறு கைமாறிலேன்.

निषेकादि श्मशानान्तं मानुषं कर्मसूचितम् ।

ஸ்ரீவைகானஸ 6 கால பூஜையின் பலன்கள் - ஸ்ரீவைகானஸ அர்ச்சனை நவநீதம் - 1 கண்டம்

உலகில் ஆன்மீக ஸம்பந்தமாக ஜபங்கள், ஹோமங்கள், பூஜைகள், விரதங்கள் இவைகள் அதிகரிப்பதால், தர்மம் காப்பாற்றப்படும். இவைகள் அதிகரிக்க காலை பூஜைசெய்யக் கூறப்படுகிறது.

प्रातः कालार्चनं चैव जप होमाभिवृद्धये !!

அரசும், அரசாங்கமும் சரிவர நேர்மையாக இருந்தால் தான் அந்த நாடு சுபிக்ஷம் பெறும். அதில் குறையில்லாமல்

இருக்க மதிய திருவாராதனம் செய்யக் கூறப்படுகிறது.

मध्याह्ने ऽर्चनं चैव राजराष्ट्राभिवृद्धये ।

உலகில் விவசாயம் பெற்றால் மட்டுமே தான்யாதிகளை பெற்று மக்கள் இன்புற்று இருப்பர். அதன் அபிவிருத்திக்காக அந்திநேர கால பூஜை செய்ய வேண்டும்.

सायं कालार्चनं चैव सर्वसस्याभिवृद्धये ॥

லோகத்தில் மனிதர்கள், குழந்தைகள் அனைவரும் வியாதி இல்லாமல் ஆயுள் ஐச்வர்யம் முதலான நன்மைகளை பெற்று வாழ்ந்தால் மட்டும் ஆன்மீகம் சிறப்பு பெற்று விளங்கும். எனவே அதற்காக விடியல் காலை பூஜை நடத்த வேண்டும்.




उषःकालार्चनं चैव नरस्त्रीशिशुवृद्धये ॥

பகைவர்களானவர்களின் அறிவுக்காக மாலை நேர பூஜை செய்ய கூறப்படுகிறது.

उपरात्र्यार्चनं चैवा ऽसुराणां नाशहेतवे ।

DRAFT

கால்நடைகள், ப்ராணிகள், பறவைகள், இரண்டறிவு, ஓரறிவு வர்க்கங்கள் அபிவ்ருத்தியடைய அர்த்தஜாம பூஜை செய்ய வேண்டும்.

अर्धरात्रार्चनं चैव चतुष्पादाभिवृद्धये !!

இவ்வாறு ஆறு கால பூஜையும் இந்த உலகில் அனைத்து பலனையும் அளித்து ஸாயுஜ்யத்தை (வீடுபேறு)யும் அளிக்க வல்லது.

एवं षट्कालपूजायां ऐहिकामुष्मिकं फलम् !!

## இன்றளவில் திருக்கோயில் வழிபாட்டின் முக்யத்வம்

ஜபம், ஹோமம், ஸ்தோத்ரம் சொல்வது, தியானம் செய்வது, விரதம் இருப்பது, யோகம் செய்வது, இது முதலானவைகளுக்கு சில தகுதிகள் வேண்டும். ஆனால் 24 மணி நேரமும், (न मे भक्तः प्रणश्यति) 'என் பக்தன் நாசமாக மாட்டான்' என்று அபயஹஸ்தத்தை அதேபோல தாங்கிக்கொண்டு பரம கிருபாநிதியாகிய எம்பெருமானை திருக்கோயிலில் காணும் ஸுகம், ஆனந்தம், வேறெதிலும் இராது. அவன் கிருபையை அறிய, அறிய அனைத்தும் சுவைக்கும்.

DRAFT V.S.Jayabal

வியாதியால் பாதிக்கப்பட்டவர்கள், எழுந்திருக்க முடியாதவர்களுக்கும் கூட நம் வீடு தேடி புறப்பாடாகி வந்து தரிசனம் தருவது போன்ற, ஓர் சுலபம் (ஸௌலப்யம்) வேறெங்கும் எந்த நிலையிலும் (பரவ்யூஹாதிகளில்) கிடைக்காது.

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக (ஸ்வயம்வ்யக்தம்) தானாகத் தோன்றியதாலும், (ஆர்ஷப்ரதிஷ்டிதம்) ரிஷிகளால் ஸ்தாபிக்கப்பட்டதாலும் (தைவ்யம்) தேவர்களினாலே ஸ்தாபனம் செய்யப்பட்டதாலும் (भक्तैः संकीर्तितम्) ஆழ்வார் ஆச்சார்ய மஹா புருஷர்களாலே மங்களாஸாசனம் பெற்ற பலத்தினாலும், வேத, (वेदघोषणात्) பிரபந்த, ஸ்துதி, நாம ஸங்கீர்த்தனாதி ஸாந்நித்யத்தினாலும், திருக்கோயிலிலுள்ள மூர்த்திகளுக்கு அபாரமான சக்தியானது இயல்பாகவே உள்ளது போன்றதை, ஒரு மனிதனாகிய நம்மால் ஒருபோதும் தனியாக ஏற்படுத்த முடியாது. ஆகவே இன்றளவில் திருக்கோயில் வழிபாடு போல ஸௌலபமும், அதிக பலனும், வேறெங்கும் இல்லை (கிடைக்காது) என்பது சாஸ்திர ஸம்மதமாகும்.

இதுபோல் நிறைய உதாஹரிக்க முடியும் கட்டுரை விரிவு அஞ்சி அடுத்த தலைப்புக்கு செல்வோம்.

DRAFT V.S.Jayabal

## ஜீர்ணோத்தாரண திருப்பணிகள்

பழமையான திருக்கோயிலில் விமானம், பேரங்கள் (அர்ச்சா மூர்த்திகள்) விழுந்து விட்டாலோ, கிலமாகி (பழமையடைந்து) போனாலோ, உடைந்து விட்டாலோ, அங்கங்களில் பழுது ஏற்பட்டாலோ, இடிவிழுந்து ஏதேனும் ஆபத்து ஏற்பட்டாலோ, சூறாவளி புயலினால் பாதிக்கப்பட்டு இருந்தாலோ, வர்ணங்கள் (விமான, கோபுரங்கள்) பழுதாகிவிட்டாலோ, பகவானுடைய ஸ்தானம், மற்றும் பீடங்கள் பழுதாகி விட்டாலோ, உடனே பாலாலயம் செய்து திருப்பணிகள் செய்ய கூறப்படுகிறது. திருப்பணிகள் செய்து முடித்து முறைப்படி ஸம்ப்ரோக்ஷணம் செய்விக்க வேண்டும்.

महाबेरे विमाने च पतिते, जीर्णे छिन्ने अंगहीने
अशनिहते वाताहते क्षीणवर्णे गर्भालय स्थलं भ्रंशे
स्थानगर्भपीठ विनाशे चंडालाद्यस्पृश्य प्रविष्टे वा
अचिरादेव बालालये देवं प्रतिष्ठापयेत् ॥



## மஹா ஸம்ப்ரோக்ஷண விதிமுறைகள்

மஹா என்னும் சொல் பவித்திரமான, பெரிய, அரிய, உயர்வான எனும் பொருள்படும். 'ஸம்' எனில் நன்றாக 'ப்ரோக்ஷணம்' எனில் தெளித்தல் என்று பொருள்படும்.

கலசத்தில் 3, 5, 7, 9 நாட்கள் ஆராதித்த (ஹோமத்துடன்) தீர்த்தத்தை, கூர்ச்சம் என்று சொல்லும் தர்பைமுடிச்சினால் மந்த்ர பூர்வமாக எடுத்து பிம்பத்தின் அந்த அந்த இடத்தில் 12 ஸ்தானங்களில் 48 களைகளாகப் பிரித்து பீஜாக்ஷரம் மந்திரம் சேர்த்து களா கர்ஷணாதி, ப்ரயோக அடிப்படையில் ப்ரதிஷ்டை (உயிரூட்டுதல்) செய்வது மஹாஸம்ப்ரோக்ஷணம் ஆகும். இந்த பகுதி மரீசி கல்பத்தில் 25 செயல் விபரமாக 33ம் படலத்தில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.



प्रथमं अंकुरार्पणम्
द्वितीयं संभारहरणम्
तृतीयं अक्षुण्मोचनम्
चतुर्थं बिम्बशुद्धिः
पञ्चमं अग्निमथनम्
षष्ठं वास्तुशुद्धिः
सप्तमं अग्निप्रणयनम् ।
अष्टमं कुम्भपूजा ध्यानम् ।
नवमं - कलशस्थापनम् ।
प्रतिसरं शयनास्तरणं च दशमं
शयनाधिवासनं एकादशम्
वेदाध्ययनं सर्वदेवार्चनं द्वादशम् ।
हौत्र प्रशंसनादि त्रयोदशम् ।
प्रधानहोमं चतुर्दशम्
देवस्योत्थापनं स्नानं पञ्चदशम्
रत्नन्यासं षोडशम्
दक्षिणादानं अग्निसंग्रहणं सप्तदशम्
सप्त प्रदक्षिणं अष्टादशम्

चलाचलस्थापनं तयोरावाहनं च एकोनविंशम्
अन्यदेवानामावाहनं विंशतिकम्
पुण्याहं एकविंशम् ।
देवार्चनं द्वाविंशतिकम् ।
ब्राह्मण भोजनं वैष्णवपूजनं च त्रयोविंशतिकं
उत्सवं चतुर्विंशतिकम् ।
स्नापनं महाहविर्निवेदनं च पञ्चविंशं ॥ इति एतेषां
विपर्यासं तु न कारयेत् ॥

## 1. அங்குரார்ப்பணம்

அங்குரம் - விதைகளை நவதானியங்களை ஊற வைத்து பாலிகை, சராவம், சித்ரகும்பம் என்பதான மண்ணால், செம்பினால், வெள்ளியினால், தங்கத்தினால் செய்யப்பட்ட பாத்திரங்களில், சொல்லப்பட்ட 54 தேவதைகளை அர்ச்சித்து, மிருத்ஸங்கிரஹணம் செய்து புற்று மண் எடுத்து வந்து புற்று மண்ணை பாத்திரங்களில் இட்டு விதைகளை முளைக்க இடவேண்டும். இந்த அங்குரார்ப்பணம் செய்வதால் பகவான் ப்ரீதி அடைகிறான். இந்த கிரியை விட்டுப் போனால் மற்ற அனைத்தும் நிஷ்பமாகிறது, என்று ஜாக்கிரதை படுத்துகிறார் மகரிஷி.

## 2. ஸம்பாரஹரணம்

பகவான் ஸம்ப்ரோக்ஷணத்திற்கு யக்ஞம், ஸ்நபனம், நிவேதனம், மற்றுமுள்ள வைபவங்களுக்கு தேவையான சாமான்களை தயார் செய்ய சொல்லுவது ஸம்பாரஹரணம் ஆகும்.

DRAFT
V.S.Jayabal

## 3. அக்ஷி -உன்மோசனம்

புதிதாக செய்யப்பட்ட விக்ரகங்களு அக்ஷி-உன் மோசனம் என்னும் கிரியை செய்யப்படுகிறது. சில்பியினால் உளி வைத்து திறக்கப்பட்டாலும், ஹோமபூர்வமாக அந்த அந்த தேவதைகளின் மந்திரங்களை உச்சரித்து ஹோமம் செய்து, தங்க ஊசியினால் (பக்ஷ்ம, வர்ம, ரோகா, தைஜஸ மண்டலம், நீலமணி, ஸ்வேதமணி, தக்ஷிண வாமநயனம், உத்பாதயாமி) என்று கண்ணில் உள்ள கருவிழி, வெள்ளை பாகம், சிகப்பு ரேகைகள், பிரகாசம் தரும் இந்திரியம், ஆகியவை உண்டாக்குகிறேன் என்பதான வைபவங்கள். அதன்பின் பசுமாடு, ஸ்த்ரீ, கண்ணாடி, நவதான்யம், தேன் ஆகியவை மங்கள திரவ்ய தர்சனம் செய்து வைக்கப்படும்.

## 4. பிம்பசுத்தி

பெரிய அளவில் விக்ரஹத்துக்கு தக்கபடி பூமியில் 3 பள்ளம் எடுத்து, அதில் 1. பஞ்சகவ்வியம், 2. பால், 3. நீர் ஆகியவை நிரப்பி, குண்டத்தில் ஹோமங்கள் செய்து தேவதையை - பகவானை கிழக்கு சிரஸு இருக்குமாறு ஒவ்வொரு அவடத்திலும் ஒவ்வொரு நாள் இருத்த வேண்டும். இது அதிவாஸம் எனப்படுகிறது. இவ்வாறு செய்வதால் பிம்பத்தில் தூய்மை உண்டாகி, பிரதிஷ்டைக்கு அர்ஹமான ஸான்னித்யத்தை தரும் என்று மகரிஷி உரைக்கிறார்.

DRAFT V.S.Jayabal

## 5. அக்னி மதனம்

அக்னி இல்லாமல் யாகங்கள் கிடையாது. நம்முடைய சாஸ்திரத்தில் மதித அக்னி (அரளியில் கடைதல்), லௌகீக அக்னி என்று இரண்டு விதமாக எடுத்துரைக்கப்படுகிறது. சுமார் 100 வருடம் முதிர்ந்த அரச மரத்தை பலகையாக வைத்து, வன்னி மரத்தை, கூராக கருவி செய்து, அதில் வைத்து கயிறு கொண்டு கடைய அக்னி வெளிப்படும். இவ்வாறு வெளிப்பட்ட 'அக்னி' மிகவும் பவித்ரம் வாய்ந்தது. இதையே அக்னி மதனம் (கடைதல்) என்று கூறுகிறோம்.

## 6. வாஸ்து சுத்தி

யாகசாலை, பாகசாலை, கலசங்கள், திருக்கோயில் (திருப்பணி நடைபெற்று முடிந்த) மற்ற சாமான்கள் அனைத்தையும் தூய்மைப்படுத்த (மந்த்ரவத்தாக), பர்யக்னி செய்து, வைக்கலில் விசும்பு கட்டி அதனை அக்னியில் ஏற்றி அனைத்து இடத்திற்கும் அதனை காட்டுவார்கள். இந்த கிரியைக்கு 81 தேவதைகளை ஆராதித்து அன்னபலி சேர்த்து பூசணிக்காய் நிவேதித்து ஔபாசன குண்டத்தில் ஹோமங்கள் செய்து நிறைவு செய்வர்.

DRAFT
VS Jayabal

பன்னிரு நரம்பு யாழ்



கி.பி. 2-ஆம் நூற்றாண்டு

## 7. அக்னி பிரணயணம்

யாகசாலையில் உள்ள அனைத்து குண்டங்களுக்கும் அக்னி மதனம் செய்து உண்டாக்கிய அக்னியை, சேர்த்து ஜ்வலிக்க செய்ததும், அதிதேவதைகள், ஹோம பொருட்களான தர்பம், பரிதி, ஸமித்து, சுருக், அருவம், சாதம், அரிசி, நெய், ஆகியவற்றை ஸ்வீகரிக்க (எடுத்துக் கொள்ள) எந்த இடத்தில் அவற்றை ஸ்தாபனம் செய்ய வேண்டும் என்று விரிவாக எடுத்துரைக்கும் கிரியா அக்னி பிரணயணம்.

## கும்ப பூஜாதியானம்

ஸம்ப்ரோக்ஷணத்திற்கு முக்கியமானது கலசமும், அதில் சேர்க்கப்படும் நீரும் ஆகும். எனவே அந்த கலசத்தை முறைப்படி பஞ்சகவ்ய கோமயத்தினால் சுத்தம் செய்து, உள்ளே தூப புகை நிரப்பி சுத்தப்படுத்தி நதி, தடாகத்திலிருந்து நீர் எடுத்து வந்து, வடிகட்டி சேர்த்து, கூர்ச்சம், ரத்தினம், மாயிலை, ஸ்வர்ண பதுமை, நவரத்தினங்கள் சேர்த்து, நூல் சுற்றி, மேடையில் இருத்தி மாயிலை, தேங்காய் சேர்த்து புருஷாகாரமாக பாவித்து களாகர்ஷண மந்திரங்களை உச்சரித்து பால பிம்பங்களிலுள்ள சக்திகளை, ஆகர்ஷம் செய்து கலசத்தில் இருத்தி 'यथा देहे तथा बेरे न्यासकर्म समाचरेत्' என்னும்படி, நம், ஸூக்ஷ்ம சரீரத்தில் ந்யாயங்களை செய்துகொண்டு,

DRAFT
V.S.Jayabal

பேரத்தில் கலசத்தில் தினம் தினம் அதில் சக்தி சான்னித்யத்தை அளித்தலே கும்ப பூஜா தியானம் ஆகும்.

<u>ப்ரதிஸா பந்தம், சயனாதி வாஸம்</u>

வைதீக கர்மாக்கள் ஆரம்பித்து ரக்ஷாபந்தனம் ஆனால் அந்த வைதீக கர்த்தாவை, எந்த ஒரு ஆசௌசவும் தீண்டாது, பகவானின் ஸம்ப்ரோக்ஷணை ஆரம்பித்து பூர்த்தியாகும் வரையில் யார் முன்னின்று ஆரம்பிக்கிறார்களோ அவர்களை பூர்த்தி பண்ணவேண்டும். ஆகவேதான் ப்ரதிஸரம் என்ற ரக்ஷாபந்தனம் செய்விக்கப்படுகிறது.

பகவானை பஞ்ச (ஐந்து) விதமான சயனங்களில் இருத்தக்கூடிய வைபவம் சயனாதி வாஸம் எனப்படும். சாலிதான்யம், யவதான்யம், அரிசி, எள், இவை தான்யங்கள் இவற்றில் எவை கிடைக்குமோ அவைகளை கீழே பரப்பி, அதன்மேல் மான்தோல், கம்பளி, பட்டு, மயிலிறகு, ஆகியவற்றை மேல் மேலாக இருத்தி அதிலே வாசனை பூக்கள் சேர்த்து பகவானை ஸ்ரீ பூஸஹிதமாக சயனத் திருக்கோலத்தில் இருத்த வேண்டும்.

DRAFT V.S.Jayabal

## ஹௌத்ரப்ரசம்ஸனம்

சப்த்காச ரூபமான தேவதைகளை பகவானுடைய ப்ரதிஷ்டா அத்வரத்திற்காக (ஹோமம்) ஏகஸ்வரமாக அழைத்தல். அவ்வாறு அழைக்கப்பட்ட தேவதையை ப்ரணிதியில் கூர்ச்சத்தினால் ஆவாஹித்து பூஜித்து ஜஷ்டாகார ஸ்வாஹாகாரங்களை நெய், சருவினால் ஹோமம் செய்தல் ஹௌத்ரப்ரசம்ஸனம் ஆகும்.

## ப்ரதான ஹோமம்

ப்ரதிஷ்டைக்கு சொல்லப்பட்டபடி, ஸப்யம், அன்வாஹார்யம், ஆவஸத்யம், பௌண்டரீகம், ஆஹவநீயம், ச்ராமணகம் ஆகிய குண்டங்களில் சுமார் விஷ்ணு பரத்வமாக 950 மந்திரங்கள் சொல்லப்பட்டுள்ளன. அந்த மந்திரங்களை நெய், வில்வம், தாமரை, சத்துமாவு, வடை, அப்பம், சாதம், ஸமித்துக்கள், பொரி, தேன் ஆகியவைகளைக் கொண்டு ஆஹாதியாக ஹோமம் செய்கிற கிரி ப்ரதான ஹோமம்.

## தேவஸ்ய உத்தாபனம் ஸ்நபனம்:-

யாகசாலையில் சயனாதி வாஸத்தில் அமர்த்திய எம்பெருமானை எழுப்பி திருமஞ்சனம் செய்விக்கிற முறை உத்தாபனம், ஸ்நபனம் ஆகும்.

DRAFT V.S.Jayabal

## ரத்னந்யாஸம்

மூல பிம்பத்தின் அடியில் பிரம்மாதி பத தேவதைகளின் இடத்தில் மாணிக்கம், வஜ்ரம், வைடூர்யம், கோமேதகம், புஷ்பராகம், இந்திரநீலம், சந்திரகாந்தம், ஸுவர்ணம், ரஜதம் ஆகியவற்றால் மந்த்ரத்துடன் ஸ்தாபனம் செய்தல் ரத்னந்யாஸம் ஆகும்.

## யூக்ஷிணாதானம்

யஜமானராக இருப்பவர் தேவஸந்நிதியில், யக்ஞம் செய்த ஆசார்யன் முதலானவர்களுக்கு 4 நிஷ்கம் பவுன், பசுமாடு, பூமிதானம், ஆகியவற்றை அளிக்கும் வைபவம். தக்ஷிணை இல்லாத எந்த பூஜையும், யாகமும் வீண். ஆதலால் முயன்று திருப்தியளிக்கும் வகையில் தக்ஷிணை அளிக்க கூறப்படுகிறது.

## அக்னிஸங்கிரஹணம்

ப்ரதான ஹோமகுண்டத்தில் ஸப்யாக்னியை நன்கு ரக்ஷித்து நித்ய ஹோமத்தின் பொருட்டு அளிக்க வேண்டும். இது அக்னிஸங்கிரஹணம் என்று பெயர்.

## ஸத்ம ப்ரதக்ஷிணம்

வாத்யங்கள் முழங்க பெருமாளையும், கும்பத்தையும், எழுந்தருளச் செய்து, மாடவீதி பிரதக்ஷிணம் செய்து

DRAFT V.S.Jayabal

கருவறையை அடைந்து அவர் அவர்களை அந்தந்த இடத்தில் ஏற்ற பண்ண வேண்டும்.

<u>சலாசல ஸ்தாபனம் ஆவாஹனம்</u>

ஆச்சார்யன் த்ருவபேரத்தை அஷ்டபந்தனம் கொண்டு நன்கு அசைந்தவாறு அந்தந்த இடத்தில் ஸ்தாபனம் செய்தல். கும்ப தீர்த்தங்களை கொண்டு 'ஜீவ களாந்யாஸங்கள்' செய்து அந்தந்த ஸ்தானத்தில் பீஜாக்ஷர ரீதியாக பிரதிஷ்டை செய்தல். பரிவார தேவதைகளையும், விமான தேவதைகளையும், ஆவாஹித்து ஸம்ப்ரோக்ஷணம் செய்து அக்ஷதா ஆசீர்வாதம் நிவேதனம் உத்ஸவங்கள் செய்ய கூறப்படுகிறது. இதுவே சுருக்கமான மஹா ஸம்ப்ரோக்ஷணத்திற்கு விளக்கவுரையாகும்.

DRAFT
V.S.Jayabal

<u>பலன்கள்</u>

ஸம்ப்ரோக்ஷணையை நடத்தி வைக்கிற யஜமானர். ஏற்படும் பலன்களாவன.




1. உடல், வாக்கு, மனது, இவற்றால் செய்த பாவம் அழிகிறது.
2. கிடைக்க வேண்டிய அனைத்தும் சுலபமாக கிடைக்கிறது.
3. எடுத்த காரியத்தில் வெற்றி ஏற்படுகிறது.

4. நான் ஒரு தலைமுறை, எனக்கு முன்பு பத்து தலைமுறை, எனக்கு பின்பு 10 தலைமுறை ஆக 21 தலைமுறைக்கு என்னுடைய வம்சத்தினர் விஷ்ணு ஸாயுஜ்யத்தை அடைகின்றார்கள். சந்தேகமில்லை.
5. அக்ஷயமான குறைவற்ற செல்வம் நம்முடன் நீங்காமல் இருக்கும்.
6. தனதான்யாதிகளை பெற்று தேஜஸ்வீயாக ஆகிறான்.
7. சென்ற இடமெல்லாம் புகழ் பெறுகிறான்.
8. நிறைய பூமி முதலான சொத்துக்களுடன் சௌக்யமாக வாழ்வான்.
9. அவன் குடும்பத்தில் பிள்ளைபேறு இல்லாதவர்களுக்கு புத்ர (பிள்ளை) பாக்கியம் கிட்டுகிறது
10. நிறைய அந்தஸ்து, பசு, நிதி கோசம் பெற்று, ஸாது ஸம்ரக்ஷனம் செய்வான்.
11. அரசு, அரசாங்கம் ஆகியவை இவனுக்கு அனுகூலமான நிலையில் அமையும்.
12. சாந்தி (அமைதி), ஆரோக்யம், தனம், தான்யம் ஆகியவற்றுடன் நீங்காத மனநிம்மதியையும் பெறுகிறான்.

தப்ளாக் கட்டை



கி.பி. 2-ஆம் நூற்றாண்டு

இவ்வாறு மரீசி மகரிஷி ஸம்ப்ரோக்ஷண பலனாக எடுத்துரைக்கிறார்.

DRAFT V.S.Jeyabal

## 2.11 ஸ்ரீ பாஞ்சராத்ரமும் ஸ்ரீ ராமாநுஜரும்

கமப்யாத்யம் குரும் வந்தே கமலா க்ருஹமேதிநம்!
ப்ரவக்தா சந்தாஸாம் வக்தா பஞ்சராத்ரஸ்ய ய: ஸ்வயம்!!
- யதிராஜ ஸப்ததி

ஸ்வாமீ தேசிகன் ஸ்ரீ வைஷ்ணவ சித்தாந்த ஸ்தாபகரான ஸ்ரீபாஷ்யகாரரை ஸ்தோத்ரம் செய்கிறார். யதிராஜ ஸப்ததி என்ற ஸ்தோத்ரத்தில், முதல் ஸ்லோகத்திலேயே பிரம்மாவுக்கு வேதத்தையும் பாஞ்சராத்ர சாஸ்திரத்தையும் க்ருபையினால் தானாக வெளியிட்டார். ஸ்ரீய: பதியான நாராயணன் என்கிறார். ஸ்வாமீ ராமாநுஜரை ஸ்தோத்ரம் செய்ய ஆரம்பித்தவர் பகவான் வேதத்தையும் பாஞ்சராத்ரத்தையும் உபதேசித்தான் என்று கொண்டாடுகிறார்.

வேதத்தையும் பாஞ்சராத்ரத்தையும் பாதுகாத்து ப்ரமாணம் என ஸ்தாபித்தவர் எம்பெருமானார் ஒருவரேயாகையால் வெளியிட்டவரையும் பாதுகாத்தவரையும் கொண்டாடுகிறார்.

DRAFT V.S.Jayabal

நாட்டிய நீசச் சமயங்கள் மாண்டன

நாராணனைக் காட்டிய வேதம் களிப்புற்றது என்றும்

பேதையர் வேதப் பொருள் இதென்று உன்னி, பிரமம் நன்று என்று ஓதி மற்றெல்லா உயிரும் அஃதென்று, உயிர்கள் மெய் விட்டு ஆதிப்பரனோடு ஒன்றாம் என்று சொல்லும் அவ் அல்லல் எல்லாம் வாதில் வென்றான் எம் இராமாநுசன். மெய்ம் மதிக்கடலே என்று அமுதனாரும் கொண்டாடுகிறார்.

ஜகதாசார்யரான ஸ்ரீராமாநுஜர் தன்னுடைய உயர்ந்த கருணையினால் சமஸ்த லோகமும் உய்வு பெற ஸ்ரீபாஞ்சராத்ர ஆகமத்தை ஆதரித்தார்.

இங்கு யாரும் தவறாக நினைக்கக்கூடாது. ஸ்ரீவைகானஸத்தை ஆதரிக்கவில்லை என்று, வைகானச சாஸ்த்ரம் அந்த ரிஷியின் வம்சத்தில் வந்த பிராம்மணர்களுக்கு மட்டும் தான் அனுஷ்டிக்க வழிகாட்டுகிறது, மேலும் பல திவ்ய தேசங்களில் ஸ்ரீ ராமாநுஜருக்கு முன்பிருந்தே நடைமுறையில் இருந்து வருகிறது. ஸ்வாமீ அவதரித்த

ஸ்ரீபெரும்புதூரிலேயே ஸ்ரீ வைகானஸ ஆகமம் அநுஷ்டிக்கப்படுகிறது. திருவேங்கடத்திலும் ஸ்வாமி அதை மாற்ற முயற்சிக்கவில்லை.

"அந்தணர் அந்தியர் எல்லையில் நின்ற அனைத்துலகும்" என்கிறபடி ஸமஸ்த லோகத்தில் உள்ளவர்களுக்கும் பகவானை ஆஸ்ரயித்து கைங்கர்யங்கள் செய்து ஸ்ரீவைகுண்டத்தை அடைய முடியும் என்பதை சாஸ்த்ரங்கள் மூலமே ஸ்தாபித்தார். "ஸமோஹம் ஸர்வ பூதேஷு" என்ற கீதாசார்யனின் திருவுள்ளத்தைக் கொண்டும் நாவீறுடைய பிரானான ஸ்வாமீ நம்மாழ்வாரின் திருவுள்ளத்தைக் கொண்டும் "வைகுந்தம் புகுவது மண்ணவர் விதியே" என்று சித்தாந்த ஸ்தாபனம் செய்தார், இதற்கு ஸ்ரீபாஞ்சராத்ர சாஸ்த்ரமே ஸ்வாமிக்கு துணை நின்றது.

ப்ராம்மனை: க்ஷத்ரியை: வைச்யை:
சூத்ரைச்ச க்ருதலக்ஷனை !!
அர்ச்சனீயச்ச ஸேவ்யச்ச நித்யயுக்தை
ஸ்வகர்மஸு !!

- மஹாபாரதம்

DRAFT V.S.Jeyabal

எல்லா வர்ணத்தவரும் ஸ்ரீபாஞ்சராத்ரம் விதித்த வகையில் பஞ்ச ஸம்ஸ்காரம் செய்து கொண்டு பகவானுக்கு திருவாராதனம் முதலிய கைங்கரியங்களை தங்கள் வர்ண அநுசரமாக செய்யலாம் [விக்ரஹ ஆராதனம் உட்பட]. அவரவர்களின் வீடுகளில் செய்து கொள்வதற்கு "ஸ்வார்த்த யஜனம்" என்று விதிக்கிறது. பகவானுக்கு கைங்கர்யம் செய்ய பஞ்ச ஸம்ஸ்காரம் அவசியம் என்பதை ஸ்ரீ பாஞ்சராத்ரப்படி ஸ்வாமீ உலகிற்கு உபதேசித்து அனைவரையும் வைஷ்ணவர்களாகச் செய்தார்.

பஞ்ச ஸம்ஸ்காரமென்பது:- பகவானின் பிரதான ஆயுதங்களான சங்கு சக்ரங்களை நம் தோள்களில் பதித்துக் கொள்வதை தப்த ஸம்ஸ்காரம் எனவும்

பகவானது பாத கமலத்தை நெற்றி முதலான அவயங்களில் தரித்துக் கொள்வதை புண்ட்ர ஸம்ஸ்காரமெனவும் கேசவன் முதலான பகவானின் பன்னிரு திருநாமங்களைச் சொல்லி தரிப்பதால் நாமம் எனவும் வழங்குகிறோம்.

ஜீவன் ஸ்வதந்திரன் அல்லன் பரதந்திரன் [பகவானுக்கும் அவன் அடியார்களுக்கும் அடிமை]

DRAFT V.S.Jayabal

என்பதை உணர்த்துவதற்காக தாஸன் என பெயருடன் சேர்த்து தாசநாமாவையும் வைப்பதால் நாம ஸம்ஸ்காரமெனவும், பிறகு தான் என தன்னைச் சொல்லிக் கொள்ளாமல் பகவானுக்கும் அவன் தொண்டர்களுக்கும் தாசன் என்பதை "அடியேன்" என்று எப்போதும் மறக்காமல் இருக்கச் செய்வதற்காக அநுசந்தித்து வருகிறோம்.

நலம் தரும் சொல்லான பெரிய திருமந்ரத்தையும் த்வயமும் சரமஸ்லோகமும் உபதேசிக்கப் படுவதை மந்த்ர ஸம்ஸ்காரமெனவும்

தனக்கு கிடைத்த அங்கீகாரத்தினால் "தெரிந்து எழுதி வாசித்தும் கேட்டு வணங்கி வழிபட்டு பூசித்தும் போக்கினேன் போது" என்று பகவத் கைங்கர்யம் செய்வதை யாக ஸம்ஸ்காரம் எனவும், இவை நமக்கு பஞ்ச ஸம்ஸ்காரம் ஆகிறது. இது எல்லோருக்கும் பொது.



DRAFT V.S.Jayabal

### பரார்த்தயஜனம்

ஊரும் நாடும் நகரமும் உலகமும் நன்றாக இருக்க [மிக மழை, மற்றும் மழை இல்லாமல் இருத்தல், நன்றாக பயிர்கள் வளர, கால்நடைகள் சிறக்க, பசி பட்டினி வியாதிகள் முதலியவை நம்மை அநுகாமல் இருக்க] கோவில்களில் நித்யமும் செய்ய வேண்டிய திருவாராதனம். இதற்கு தனியாக தீக்ஷை செய்து கொள்ள வேண்டும். பொதுவாக வேதமறிந்த பிராமணர்களே செய்து வருகிறார்கள்.

கோவில்களில் அவரவர்களுக்கு ஏற்ற கைங்கரியங்களில் எல்லோரையும் நியமித்தார். வர்ண ஆஸ்ரம விதிகளின்படி நாம் பயணிக்கும் பாதை தனித்தனியே தவிர சேரும் இடம் ஒன்று என்று நமக்கு வழி காட்டினார். பகவானுக்கு முன்பு எல்லோரும் சமம் என்றும் பகவத் பிரசாதத்திற்கு அனைவருக்கும் உரிமை உண்டு என்று பிரசாத விநியோக கோஷ்டிகளை ஏற்படுத்தினார்.

இந்த நடைமுறையை தொடர்ந்து நடக்க ஒழுக்கத்தாலும், ஞானத்தாலும், சீலத்தாலும், ஆத்ம குணத்தாலும் சிறந்தவர்களை தீர்த்த காரர்களாகவும், ஆசார்ய புருஷர்களாகவும் நியமித்து மனிதர்களுக்கு வழிகாட்டினார்.

ஆசினோதிஹி சாஸ்த்ரார்தான் ஆசாரே ஸ்தாபயந்த்சபி:
ஸ்வயமாசரதே யஸ்மாத் தஸ்மாதாசார்ய உச்யதே
(பராஸரே)

ஆசார்ய சப்தத்தின் பொருள் நன்றாக சாஸ்திரங்களை வாசித்து சரியாக (உள்ளது உள்ளபடி) உபதேசிக்கிறவர்களும், இதுதான் சரியான மார்க்கம் என்று ஸ்தாபிப்பவர்களும், உபதேசிப்பதை தவறாமல் கடைபிடிப்பவர்களைத்தான் ஆசார்ய சப்தம் உணர்த்துகிறது. இவர்களை முன்னிட்டு திருக்கோவில்களில் அதற்கான தகுதிகளான வேதாத்யநம், சாஸ்த்ர ஞானம், ஆகம பரிசயம், திருக்கோயில் பழக்கங்கள் முதலியவற்றை குறைவற தெரிந்திருந்தால் தான் அர்ச்சகர்கள் உட்பட அனைத்து கைங்கர்யபரர்களும் சரியாக தங்கள் கைங்கரியங்களை செய்வார்கள். மேற்படி தகுதிகள் இல்லாமல் மரியாதை மட்டும் வாங்கிக்கொண்டு அதிகாரம் செய்தால் பட்டப்படிப்பு முடிக்காமல் பதவியில் அமர்ந்து சம்பளம் வாங்கினால் என்ன தண்டனையோ அது தான் அவர்களுக்கும்.

நகரா



கி.பி. 14-ஆம் நூற்றாண்டு

DRAFT v.s.jayabal

அனர்சக த்விஜாதிதீனாம் தீர்த்தபானம் ஸுராசமம்

ப்ரஸாதம் மாம்ஸ துல்யம் ச சந்தனம் ருதிரம் பவேத்

(பராஸரே)

தகுதியில்லாத பிராமணர்கள் கொடுக்கும் தீர்த்தம் கள்ளுக்கு சமம். பிரஸாதம் மாம்ஸத்திற்கு சமம். சந்தனம் ரத்தத்திற்கு சமம். எனவே தீர்த்தகாரர்கள் தங்கள் தகுதியை சரியாக கற்றுக்கொண்டு மற்றவர்களையும் இதில் ஈடுபடச் செய்ய வேண்டும்.




ஸித்தம் ஸத்ஸம்ப்ரதாயே ஸ்த்திரதியமநகம்

ச்ரோத்ரியம் ப்ராஹ்ம நிஷ்ட்டம்

ஸத்வஸ்த்தம் ஸத்யவாசம் ஸமய நியதயா

ஸாது வ்ருத்யா ஸமேதம்

டம்பாஸூயாதி முக்தம் ஜிதவிஷய கணம்

தீர்க்க பந்தும் தயாளும்

ஸ்க்காலித்யே ஸாஸிதாரம் ஸ்வ பரஹித பரம்

தேஸிகம் பூஷ்ணு ரீப்ஸேத்

மேன்மையான நிலைக்கு வர விரும்புமவன் சிறந்த ஸம்ப்ரதாயத்தில் நிலை பெற்றவனாய், உறுதியான புத்தியுடையவனாய், குற்றமற்றவனாய், வேத வேதாந்தங்களை நன்கு கற்றவனாய், எம்பெருமானிடம்

பக்தியுடையவனாய், ஸத்வ குணத்தில் நிலையுடையவனாய், உண்மையே பேசுபவனாய், காலத்தைத் தழுவிய அல்லது தர்மமுணர்ந்தவரின் வரையறைக்கு உட்பட்ட சிறந்த ஒழுக்கத்துடன் கூடியவனாய், டம்பம், பொறாமை முதலியன அற்றவனாய், இந்திரியக் கூட்டங்களை வசப்படுத்தியவனாய், நீண்ட உறவினனாய், அருள் மிக்கவனாய், சிஷ்யர்களுக்குத் தவறு நேருங்கால் கண்டிப்பவனாய், தனக்கும் பிறர்க்கும் நன்மையை நாடுபவனான ஆசார்யனை அடைய விரும்ப வேண்டும்.

DRAFT
V.S.Jayabal

நாம் அடைய வேண்டிய ஆசார்யனுக்கு வேண்டிய பதிநான்கு மிக முக்யமான குணங்களை அருளிச் செய்கிறார் ஸ்வாமீ தேசிகன்.




அஜ்ஞாந த்வாந்த ரோதாத் அக பரிஹரணாத்
ஆத்ம ஸாம்யாவ ஹத்வாத்
ஜந்ம ப்ரத்வம்ஸி ஜந்ம ப்ரத கரிமதயா
திவ்ய த்ருஷ்டி ப்ரபாவாத் !!
நிஷ் ப்ரத்யூஹாந்ருயம்ஸ்யாத் நியத ரஸதயா
நித்ய யேஷித்வ யோகாத்
ஆசார்யஸ் ஸத்பிரப்ரத்யுபகரண தியா
தேவ வத் ஸ்யாது பாஸ்ய: !!

அஞ்ஞானமாகிய இருளை ஒழிப்பதாலும் பாபங்களைப் போக்குவதாலும், தன்னைப் போன்ற தன்மையை உண்டாக்குவதாலும், பிறவியையொழிக்கும் புதுப்பிறவி கொடுக்கும் பெருமையாலும், உயர்ந்த கடாக்ஷங்களைச் செய்யும் மேன்மையாலும், தடையற்ற கருணையைப் பொழிவதாலும், எப்பொழுதும் இனியனாய் இருப்பதாலும், எப்போதும் ஸ்வாமியாய் இருப்பதாலும், ஆசார்யன் நல்ல சிஷ்யர்களால் தனக்கு செய்த கருணைக்கு கைமாறு இல்லை என்ற எண்ணத்துடன் பகவானைப் போலவே வழிபட உரியனாக ஆகிறார். இவை சிஷ்யர்களுக்கு ஆசார்யர்களிடம் இருக்க வேண்டிய மஹா விஸ்வாசம். நமக்கு ஆசார்யன் செய்யும் உபகாரதிற்கு பகவானாலும் கைமாறு செய்ய முடியாது என்கிறார்.

ஸத்புத்திஸ் ஸாது ஸேவீ ஸமுசித சரிதஸ்
தத்வ போதாபிலாஷீ
ஶ்ரீஶ்ரீரூஷீஸ் த்யக்த மாந: ப்ரணிபதந பர:
ப்ரஸ்ந கால ப்ரதீக்ஷ: !
ஸாந்தோ தாந்தோஸ்நஸீயுஸ் ஸரணமுபகத:
ஸாஸ்த்ர விஸ்வாஸ ஸாவீ
ஸிஷ்ய: ப்ராப்த: பரீக்ஷாம் க்ருதவிதபிமதம்
தத்வதஸ் யக்ஷணீய: !!

வீர முரசம் (டமாரம்



கி.பி. 2-ஆம் நூற்றாண்டு

DRAFT v.s.jayabal

நல்ல புத்தி உடையவனாய், பாகவதர்களோடு பழகும் சீலமுள்ளவனாய், நேர்மையான ஒழுக்கமுடையவனாய், தத்வங்களை அறிவதில் விருப்பமுடையவனாய், ஆசார்யனுக்குக் கைங்கரியம் செய்பவனாய் அஹங்காரத்தை விட்டவனாய், ஆசார்யனை வணங்கும் தன்மை உடையவனாய், ஆசாரியனிடம் ஐயங்களைக் கேட்டுத் தெளிய உரிய காலத்தை எதிர்பார்ப்பவனாய், வெளியிந்திரியங்களை அடக்கியவனாய், மனத்தை அடக்கியவனாய், பொறாமையற்றவனாய், சரணமடைந்தவனாய், சாஸ்த்ரங்களில் நம்பிக்கையுடையவனாய், பரீக்ஷிக்கப் பெற்றவனாய், செய்நன்றி உடையவனாய் உள்ள சீடன் உண்மையாக விரும்பிய விஷயத்தை கற்பிக்கப்பட உரியவன். இவையாவும் சிஷ்யர்களின் லக்ஷணம்.

ஸ்வாதீநாயேஷ ஸத்தா ஸ்த்திதி யதந பலம்
வித்தி லக்ஷ்மீஸ மேகம்
ப்ராப்யம் நாந்யம் ப்ரதீயா: நச ஸரண தயா
கஞ்சி தந்யம் வ்ருணீயா: !
ஏதஸ்மாதேவ பும்ஸாம் பய மிதரதபிப்ரேஷ்ய
மோஜ்ஜீஸ் ததாஜ்ஞாம்
இத்யே காந்தோப தேஸ: ப்ரதம மிஹ குரோ:
ஏக சித்தேந தார்ய: !!

மோக்ஷத்தை விரும்பி தன்னை வந்தடையும் சிஷ்யனுக்கு சேதனம், அசேதநம் ஆகிய எல்லா பொருளுக்கும் ஸ்வரூபம் உண்டு. அவை தொடர்ந்து நிற்கின்றன, அவற்றுக்குச் சில செயல்களும் உண்டு, அவற்றால் வரும் பயன்களும் உண்டு இவையெல்லாம் எவ்வாறு நடக்கின்றன? பெரிய பிராட்டியார்க்கு நாயகனான ஸ்ரீமந் நாராயணன் ஒருவனே இவற்றையெல்லாம் தான் இட்ட வழக்கப்படி தனக்கு முற்றிலும் வசப்பட்டவனாகக் கொண்டு நடத்துகிறான் என்ற தத்வத்தை உணர்ந்து கொள். அவன் ஒருவனை நீ அடையவேண்டிய பலனாகவும் அறிந்துகொள். வேறு யாரையும் அடையவேண்டிய பலனாக கருதாதே. அந்தப் பலனை பெற எம்பெருமானையே உபாயமாக தெரிந்து கொண்டு சரணடைவாயாக. வேறு யாரையும் உபாயமாக நினைத்துக் கொண்டு சரணமடையாதே, சேதநர்களுக்கு ஸம்சார பந்தமாகிய அச்சமும் அவ்வச்சமில்லாமையும் எம்பெருமானால் மட்டுமே வருவன என்று நன்கு உணர்ந்து கொள். ஆதலின் அவனுடைய கட்டளையாக உள்ள சாஸ்த்ரங்களில் விதித்துள்ள கர்மங்களைச் செய்யத் தவறாதே. இந்நிலவுலகில் ஆசார்யன் ஏகாந்தமாக முதலில் செய்த உறுதியான உபதேசத்தை சிஷ்யன் தன் ஒன்றிய மனதிற்கொண்டு எப்போதும் நினைத்துக் கொண்டிருக்க வேண்டும். இந்த நான்கு சுலோகங்களின் அர்த்தத்தை

DRAFT
V.S.Jayaraj

மனதில் நன்கு பதிய வைத்துக் கொண்டாலே எல்லா வேதாந்த ஸாரமும் நமக்கு கைகூடும் என்கிறார் ஸ்வாமீ தேசிகன். ந்யாஸ விம்சதி என்ற ஸ்தோத்ரத்தில் இவை முதல் நான்கு ஸ்லோகங்கள்.

இப்படி ஆசார்ய சிஷ்ய லக்ஷணங்களை நம் பூர்வர்கள் தெரிவித்துள்ளார்கள். நாம் சரியான சிஷ்யனாக நடந்து கொண்டால் நமக்கு ஆசார்யனாகும் தன்மை தானே வரும். இது ஏதோ அபூத கல்பனை அல்ல. தற்போதுள்ள ஆசார்யர்களின் முன்னோர் இப்படித்தான் இருந்தார்கள். அப்படி இருந்தவர்களைத் தான் ஸ்வாமீ ராமாநுஜர் நியமித்தார். நாம் பெரிதாக எதையும் தெரிந்து கொள்ளா விட்டாலும் நம் பெரியவர்கள் சென்ற பாதையில் நடந்தாலே போதும்.

DRAFT
V.S.Jayabal

யத்ராஷ்டாக்ஷர ஸம்ஸித்தோ மஹாபாகோ மஹீயதே
ந தத்ர ஸஞ்சரிஷ்யந்தி வ்யாதி துர்பிக்ஷ தஸ்கரா:
(நாரதீயம் 1-20)



கி.பி. 3-ஆம் நூற்றாண்டு

நலம் தரும் சொல்லான பெரிய திருமந்த்ரத்தில் நிலையாக நிற்கும் ஆசாரியர்களைப் போற்றிக் கொண்டாடும் இடத்திற்கு வ்யாதிகள், பஞ்சம், திருட்டு முதலியவை வராது. எனவே எப்போதும்

திருவெட்டெழுத்தை ஜபித்து ஸித்தி அடைந்து கோவில்களையும் நகரங்களையும் காக்க வேண்டும். ஏனெனில் நம் வசிஷ்டாத்வைத ஸம்ப்ரதாயத்திற்கு மூல மந்த்ரமே அஷ்டாக்ஷரம் தான். அதில் ஆசார்யர்களும், சிஷ்யர்களும் திட நிஷ்டையுடன் இருந்தால் உலகமே க்ஷேமமாக இருக்கும். தற்போதைய உலக நிலைக்கும் நம்மிடம் மந்த்ர பலமில்லாததும் காரணமாகும்.

ஆசார்ய புருஷர்கள் மட்டுமல்லாது சில க்ஷேத்ரங்களில் ஸந்யாசிகளையும் ஸ்வாமி நியமித்துள்ளார். சாஸ்த்ரங்கள் விதித்துள்ள நான்கு ஆஸ்ரமங்களில் கடைசி ஆஸ்ரமம் ஸந்யாச ஆஸ்ரமாகும். இவர்களை உத்தமாஸ்ரமிகள் என்றும் அழைப்பார்கள். ஸந்யாசிகள் உலக இன்பங்களைத் துறந்தவர்களாகவும், சிற்றின்பத்தில் நாட்டமில்லாதவர்களாகவும், சுயநலம், போட்டி, பொறாமை முதலியவை இல்லாதவர்களாக நடந்து கொள்வது ஸந்யாச தர்மமாகும்.

மேலும் எப்போதும் உலக நலனை விரும்பி எல்லோருக்கும் சந்மார்க்கத்தை போதிப்பவர்களாகவும், பற்றில்லாதவர்களாக பிறருக்காக யம நியமாதி தர்மங்களைச் செய்பவர்களாக இருப்பதினாலேயே அவர்களையும் நியமித்தார். **தர்மங்களிலோ**

ஆகமங்களிலோ சந்தேகம் வந்தால் அதை சரியான முறையில், நிர்வஹிப்பவர்களாகவும், எல்லோருக்கும் சரியான முறையில் எடுத்துச் சொல்லி தர்மம் குறையாமல் நடத்துவதற்காகவும், சந்யாசிகளை நியமித்தார். ஊரில் உள்ள அனைவருக்கும் ஏதாவது தவிர்க்க முடியாத காரணங்களினால் தீட்டு வந்துவிட்டால் ஸந்யாசி பகவானுக்கு திருவாராதனம் செய்து வரலாம் என்பவும் முக்ய காரணமாகும். மேலும் ஸந்யாசிக்கு தீட்டு கிடையாது. இப்படி ஒரு உயர்ந்த நோக்கமும் நிர்வாகத் திறனும் இன்றளவும் வேறு யாரிடமும் காணக்கிடைக்காத செயலாகும்.

"ராமாநுஜார்ய திவ்யாக்ஞா வர்த்ததாம் அபிவர்த்ததாம்"

என்று கோவில்களிலும் மடங்களிலும், க்ருஹங்களிலும் நித்யமும் சேவித்து வருகிறோம். ஸ்வாமீ தன் அவதார கார்யங்கள் முடிந்து திருநாட்டிற்கு (ஸ்ரீவைகுண்டத்திற்கு) எழுந்தருளப் போவதாக தெரிவித்தவுடன், அப்போது இருந்த எல்லோரும் அவரைப் பிரிந்து நாம் இருக்க முடியாது அவருக்கு முன்பே நாம் ப்ராண த்யாகம் செய்து விடுவோம் என்று தீர்மானித்தனர். இதைக் கேள்வியுற்ற உடையவரும் மிகவும் வருந்தி எல்லோரையும் அழைத்து எனக்கு முன்பாக ப்ராணத்யாகம்

DRAFT V.S.Jeyabal

செய்தீர்களாகில் "ஆளவந்தார் ஸ்ரீபாதத்தின் மேல் ஆணை நமக்கும் உங்களுக்கும் இனி சம்பந்தம் இல்லை" என்று தெரிவித்தார், எந்த ஸ்ரீராமாநுஜ சம்பந்தத்திற்காக பிராணத்யாகம் செய்யத் துணிந்தோமோ அதுவே இல்லாமல் போகும் போது என்ன செய்வது என்று கலங்கி மிகவும் வருத்தமுடன் இருந்தனர். அவர்களை அழைத்து சில கைங்கர்யங்களை ஸ்வாமீ நியமித்தார், ஸ்ரீபீஷ்மர் மஹாபாரதத்தில் தர்மபுத்திரருக்கு தர்மோபதேசம் செய்து கடைசியில் ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாமத்தை வெளியிட்டதுபோல்.

ஒருவன் ப்ரபந்தன் என்றால் தன்னுடைய மோக்ஷம் என்பது எம்பெருமானின் வசப்பட்டது என்பதால் அதனைக் குறித்து அவன் வருத்தம் கொள்ள வேண்டியதில்லை. அப்படியும் அவன் வருந்தினான் என்றால் அவன் சரணாகதி செய்தததது என்பது பொய்யே ஆகும். அவன் தனது சரீரத்தைக் கைவிடுதல் என்பது அவன் முன்பு செய்த கர்மத்தின் கையில் உள்ளது, என்பதால் அதற்காகவும் வருத்தம் கொள்ளக் கூடாது. அப்படியும் வருந்தினால் அவன் நாஸ்திகனே ஆவான். ஆகவே இரண்டிற்காகவும் வருத்தம் கொள்ளக் கூடாது.

அப்படி என்றால் மனம் வாக்கு மற்றும் சரீரம்

DRAFT V.S.Jayabal

ஆகியவற்றைக் கொண்டு ஒருவன் தனது விருப்பப்படி செயல்களைச் செய்தபடி இருக்கலாமா? அப்படிச் செய்தல் என்பது இவனுடைய இயல்பிற்கு ஏற்றதன்று. இவன் தனது கைங்கர்யத்தில் ஈடுபட்டபடி இருக்கலாம். அவன் இந்த உலகில் வாழும் வரையில் ஐந்து வித கைங்கர்யங்களைச் செய்யலாம். அவையாவன.

ஸ்ரீ பாஷ்யத்தை தான் கற்றுக் கொண்டு மற்றவர்களுக்கும் உபதேசம் செய்தல்.

ஸ்ரீ வியாஸருடைய பிரம்ம சூத்திரத்திற்கு தான் அருளிய உரைக்கு சரஸ்வதி தேவி ஸ்ரீபாஷ்யம் என்று பெயரிட்டு கொண்டாடி, அவருக்கும் ஸ்ரீபாஷ்யகாரர் என்று திருநாமமிட்டாள்.

மேலே கூறப்பட்டது இயலவில்லை என்றால் ஆழ்வார்களின் அருளிச் செயலைக் கொண்டு மற்றவர்களுக்கு உபதேசம் செய்தல்.

மேலே கூறப்பட்டது இயலவில்லை என்றால் எம்பெருமான் எழுந்தருளியுள்ள திவ்ய தேசங்களில் வசித்துக் கொண்டு அங்குள்ள எம்பெருமானுக்கு சமைத்துக் கொடுப்பது, சந்தனம் அரைப்பது,

DRAFT V.S.Jayabal

திருவிளக்குகளைத் தூய்மையாக்கி ஏற்றுதல், திருமாலைகள் தொடுத்தல், முதலியவற்றைச் செய்தல்.

மேலே கூறப்பட்டது இயலவில்லை என்றால் திவ்ய மந்த்ரத்தை அதன் பொருளுடன் அறிந்து கொண்டு அதனைக் கூறிய படி இருத்தல்.

மேலே கூறப்பட்டது இயலவில்லை என்றால் "நான் உடையவரின் கோஷ்டியைச் சேர்ந்தவன்" என்று எண்ணியபடி உள்ள ஒரு ஸ்ரீவைஷ்ணவனைப் பற்றிக் கொண்டு அவனுடைய நிழலில் ஒதுங்கி வாழ்தல்.

இதனில் முடிந்தவற்றைக் கடைபிடிப்பதே நாம் அவருக்குச் செய்யும் மிகப் பெரிய தொண்டாகும்.

DRAFT V.S.Jayabal

அவிப்லவாய தர்மானாம் பாலநாய குலஸ்யச
ஸங்க்ரஹாய சலோகஸ்ய மர்யதா ஸ்தாபநாய ச
ப்ரியாய மம விஷ்ணோச்ச தேவ தேவஸ்ய
சார்ங்கிண:
மநீஷீ தைவிகாசாரம் மநஸா அபிலங்கயேத்

(லக்ஷ்மீ தந்த்ரம் 17-93,94)

தர்மங்கள் மாறாமல் இருக்கவும், குலங்களைக்

காப்பாற்றவும், இந்த உலகை தூய்மையான வழியில் நிலையாக நிறுத்துவதும், சாஸ்த்ரங்களுக்கான மரியாதை என்று உள்ளதற்கு பிரபந்நன் ஒருவன் வேதங்களில் விதிக்கப்பட்ட விதிகளை மனதாலும் மீற எண்ணக் கூடாது. இதனை ப்ரபன்னன் ஏன் செய்ய வேண்டும் என்றால் என்னுடைய மகிழ்ச்சிக்காகவும் அனைவருக்கும் தேவனும் சார்ங்கம் என்னும் வில்லை உடையவனும் ஆகிய எம்பெருமானின் மகிழ்ச்சிக்காகவும் தான்.

யதாஹி வல்லபோ ராஜ்ஞோ நதீம் ராஜ்ஞா ப்ரவர்த்திதாம்
லோகோப யோகிநீம் ரம்யாம் பஹீஸஸ்ய விவர்த்தநீம்
லங்கயந் சூலமாரோ ஹேதந பேக்ஷ: அபிதாம் ப்ரதி
ஏவம் விலங்கயந் மர்யாதாம் வேத நிர்மிதாம்
ப்ரிய: அபிநப்ரிய: அசௌ மே மதாஜ்ஞா வ்யதிவர்த்தநாத்
(லக்ஷ்மீ தந்த்ரம் 17-95,96,97)

தவுல்



கி.பி. 1-ஆம் நூற்றாண்டு

அரசன் உலகிற்குப் பயன்படுவதற்காக அழகான ஒரு நதியை ஏற்படுத்தக்கூடும். அந்த நதியானது பல விதமான இடங்களில் உள்ள பயிர்களைச் செழிப்பாக வைத்தபடி ஓடும். அந்த நதியால் தனக்கு எந்த விதமான பயனும் இல்லை என்று ஒருவன் அழிக்க முற்படுகிறான் என

வைப்போம்; அப்படிப்பட்டவன் அரசனின் நண்பனாக இருந்தாலும் அவனை அரசன் கழுவில் ஏற்றுவான். இப்படியாகவே வேதங்களில் விதிக்கப்பட்டுள்ள கட்டளைகளை மீறி நடப்பவன் எனக்குப் ப்ரியமானவனாகவே இருந்தாலும் எனது கட்டளைகளை மீறியதால் தண்டனைக்கு உரியவனே ஆவான்.

எனவே நாம் எல்லோரும் சாஸ்த்ரங்கள் நமக்கு விதித்தவற்றை மீறி நடக்காமல் இருக்க முயற்சிப்போம். இவையாவும் பாஞ்சராத்ர சாஸ்த்ரங்களில் கூறிய ப்ரமாணங்களாகும். இதற்குத்தான் ஸ்ரீராமானுஜர் முதலிய நம் பூர்வர்கள் முக்யம் அளித்து நமக்கும் வழிகாட்டியுள்ளார்கள். நாம் நம் பூர்வர்களுக்கு ஏதாவது செய்ய நினைத்தால் அவருடைய உபதேசங்களை கடைபிடிப்பது தான்.

மேலும் நாம் செய்யும் செயல்கள் எல்லாம் எம்பெருமான் சந்தோஷப்படத் தான். அப்படி எம்பெருமான் நம் செயல்களால் சந்தோஷப்பட்டால் நமக்கு அதைவிட பெரியது வேறு ஏதும் இல்லை.

நாடீர் நாடோறும் வாடா மலர் கொண்டு
பாடீர் அவன் நாமம் வீடே பெறலாமே

\- திருவாய்மொழி

DRAFT V.S.Jayasal

பகவானுடைய திருவடிகளில் புஷ்பம் சமர்ப்பித்தது மிக உயர்ந்த கைங்கரியம். அந்த புஷ்பங்களை சாஸ்த்ரம் விவரிக்கிறது.

அஹிம்ஸா ப்ரதமம் புஷ்பம்
புஷ்ப மந்த்ரிய நிக்ரஹ:
ஸர்வ பூத தயா புஷ்பம்
க்ஷமா புஷ்பம் விஸேஷத:
த்யானம் புஷ்பம் ததை வச
ஸத்ய மஷ்ட விதம் புஷ்பம்
விஷ்ணோ: ப்ரீதிகரம் பவேத்

- பாகவதம்

தக்குஸ்தாயி மிருதங்கம்



கி.பி. 13-ஆம் நூற்றாண்டு

பிறரை இம்சிக்காமல் இருத்தல் முதல் புஷ்பம். இந்திரியங்களை அடக்குதல் அடுத்த புஷ்பம். எல்லா ஜீவர்களிடத்திலும் தயையுடன் இருத்தல் அடுத்த புஷ்பம். பிறர் செய்யும் தவறுகளை மன்னித்தல் விசேஷமான புஷ்பம். முடிந்தளவு தானம் தருவதும் சிறந்த புஷ்பம். மனதை அடக்கி பகவானிடம் செலுத்துவதும் உயர்ந்த புஷ்பம். சதா சர்வ காலமும் பகவானை த்யானிப்பதும் நமக்கு மகிழ்ச்சி அளிக்கக் கூடிய புஷ்பம். ஸத்யத்தைக் கடைப்பிடிப்பதும் மிக மிக உயர்ந்த புஷ்பம். இந்த எட்டு புஷ்பங்களை பகவானின் திருவடிகளில் ஸமர்பித்தால்

DRAFT V.S.Jayabal

பகவான் நம்மிடம் ப்ரீதி அடைவார். அதனாலேயே பெரியாழ்வாரும் “எண்பகர் பூவும் கொணர்ந்தேன்” என்கிறார்.

எனவே நாமும், அர்ச்சகர்களும், ஜீயர்களும், தீர்த்த காரர்களும், ஆசார்ய புருஷர்களும் தங்களுக்கு விதித்த தர்மங்களைச் சரியாக கடைபிடித்தால் அதுவே நாம் நம் சமுதாயத்திற்குச் செய்யும் பெரிய தொண்டாகும். சரியாக கடைப்பிடித்து பிறருக்கும் வழிகாட்டினால் இதுவே பெரிய பாதுகாப்பு, கோவில்களுக்கும் நம் சமுதாயத்திற்கும்.

பெரியவர்களிடம் கேட்டதை தொகுத்துள்ளேன். யாரையும் புண்படுத்தவோ அல்ல, நாம் எல்லோரும் ஒற்றுமையுடன் நமக்கு விதித்துள்ள கைங்கரியங்களைச் செய்தாலே நமக்காக ப்ராணத் தியாகம் செய்த நம் பூர்வர்களுக்குச் செய்யும் நன்றியாகும். நம் தர்சனத்திற்காக தன் கண்களையே இழந்த நம் கூரத்தாழ்வானை நினைத்தாலேயே நம் மனம் தவறான பாதையில் செல்லாது.

துடி



கி.பி. 15-ஆம் நூற்றாண்டு

DRAFT
V.S.Jayabal

## 2.12 Conclusions

1 திருமகள் கேள்வனான எம்பெருமானுடைய அளவற்ற கருணையால் மானிட ஜன்மம் எடுத்து, பாரத திருநாட்டில் பிறந்து ஸனாதன தர்மத்தை கடைபிடிக்கும் பெரும் பேற்றைப் பெற்றுள்ளோம். நம் தர்மத்திற்கு வேதங்களும், அவற்றை கடைப்பிடிக்க ஸ்ம்ருதிகளும், அவற்றின் சாரமான இதிஹாஸ புராணங்களும் நமக்கு மேன்மையான நிலையை அடைய வழி காட்டுகிறது.

DRAFT
v.s.Jayabal

2 தங்களுடைய தப பலத்தினால் மானிடர்களுக்கு எந்த வழியில் சென்றால் நன்மை அளிக்கும் எந்தச் செயல்களைச் செய்யலாம், எதைச் செய்யக்கூடாது என்பதை மஹரிஷிகள் தர்ம சாஸ்த்ரங்களில் உபதேசித்துள்ளார்கள். பகவானும், வேதங்களும், ஸ்ம்ருதிகளும், என்னுடைய ஆஜ்ஞைகள் (orders) அதை மீறி நடக்க முயற்சிக்க கூடாது, அப்படி மீறி நடந்தால் என்னுடைய கட்டளைகளை மீறிய துரோகியாவான். என்னுடைய பக்தனுமில்லை, வைஷ்ணவனும் இல்லை என்கிறார்.

ச்ருதி: ஸ்ம்ருதிர் மமைவாஜ்ஞா யஸ்தா முல்லங்யம் வர்த்ததே!
ஆஜ்ஞாசேதீ மமத்ரோஹீ மத்பக்தோ அபி ந வைஷ்ணவ:!!

விஷ்ணு தர்மம் 6-13

3 எனவே நாம் நம் பெரியவர்கள் கடைப்பிடித்த மார்க்கங்களை சரியாக புரிந்து கொண்டு அதன்படி நடந்து மானிட வாழ்க்கையின் பயனைப் பெறுவோம். நம்முடைய பூர்வ ஜன்ம கர்மங்களால் நமக்கு வரும் துன்பங்களுக்கு ப்ராயச்சித்தங்களை விதித்துள்ளார்கள் (நாம் செய்த தவற்றுக்கு தண்டனையாக சிறைவாசம் விதிக்கப்படுகிறது அல்லது தண்டனைக்கு ஏற்ப அபராதம் (fine) விதிக்கப்படுகிறது. நம்மிடம் பணம் இருந்தால் அபராதத்தைக் கட்டி தண்டனையில் இருந்து வெளியேறலாம். அபராதம் கட்ட முடியாவிட்டால் சிறைவாசம் அனுபவிக்கலாம், சிறை தண்டனையிலிருந்து தப்பிக்க விதிக்கப்பட்டவைகள் தான் ப்ராயச்சித்தங்கள்). புண்ணிய தீர்த்த ஸ்நானங்களும், ஷேத்ர தரிசனமும் மஹான்களின் பார்வைக்கு இளக்காவதும் நமக்கு அளவிட

DRAFT V.S.Jayabal

முடியாத பயன்களைத் தரும் ப்ராயச்சித்தங்களாகும்.

4 நம் மீது கருணை கொண்ட நம் பெரியவர்கள் திருக்கோவில் நுழைவு வாயில்களில் கங்கை, யமுனை முதலிய புண்ணிய நதிகளை நிறுவியுள்ளார்கள். மேற்படி நதிகளுக்குச் சென்று ஸ்நானம் செய்ய முடியாதவர்கள் திருக்கோவிலில் நுழைந்தாலே அதன் பயன் அடையட்டும் என்று, நமக்கு தெரியாமல் ஏதாவது அசுத்தங்கள் நம்மிடம் இருந்தால், அவைகளும் போக்கடிக்கப்படட்டும் என்று, "கங்கை கங்கை என்ற வாசகத்தாலே கடுவினை களைந்திடகிற்கும்" என்கிறார் பெரியாழ்வார். மேலும் நுழைவு வாசல் படிகளில் ராசி தேவதைகளும் நக்ஷத்ர தேவதைகளையும் நிறுவியுள்ளார்கள். கடுமையான தோஷங்களும் அந்த வாசல்களைத் தாண்டிச் சென்று பகவானை தரிசித்தால் அவைகளும் விலகட்டும் என்று, இப்படி பல சூக்ஷமமாக பல காரியங்களைச் செய்துள்ளார்கள். முடிந்தவரை நாம் நம் பெரியவர்கள் காட்டியுள்ள வழியில் சென்றாலே போதும் மிக மேன்மையான பலன்களைப்

பெறலாம்.

5 இப்படி பல வழிகளில் நமக்கு திருக்கோவில்கள் நன்மை பயக்க ஏற்படுத்தப்பட்டுள்ளது, நாம் தினமும் சென்று வழிபடுவதோடல்லாமல் நம் பெரியவர்களின் தீர்க்க தரிசனத்தையும் உணரலாம். எனவே திருப்பணி செய்யும் போது பழையதை மாற்றாமல் அப்படியே கடைபிடிக்க வேண்டும். தற்கால புனரமைப்பு நிறுவனங்களுக்கு இந்த சூக்ஷமங்கள் தெரியாமல் வேண்டாதவற்றை எடுத்துவிடுகிறார்கள். நாம் அதற்கு சிறிதும் அனுமதிக்கக்கூடாது. சிமெண்ட் மற்றும் இரும்பு, பிளாஸ்டிக் பொருட்கள் நீண்ட காலம் தாங்காது. ஆயிரக்கணக்கான ஆண்டுகள் நம் கலாச்சாரத்தை பறைசாற்றும் நம்முடைய கட்டிடக்கலையும் அதன் அமைப்புகளும் நமக்கு கிடைத்துள்ள பொக்கிஷங்கள். மேலும் மண்ணின் தன்மைக்கு ஏற்பவும் தட்ப வெட்பங்களுக்கு ஏற்பவும் நிறுவப்பட்டுள்ள நம் புராதன கலைகளை சிறிதும் மாறாமல் காப்பாற்ற முயற்சிக்க வேண்டும்.

DRAFT
V.S.Jayabal

6 சமயம் கிடைக்கும் போதெல்லாம் நம் பெரியவர்கள் நிறுவியுள்ள திருக்கோவில்களின் மேன்மையை நம் குழந்தைகளுக்கு காட்டி அவர்களும் அதன் பயன்களை அடையச் செய்ய வேண்டும். மனித வாழ்வின் முக்ய அங்கமாக திருக்கோவில் தரிசனத்தை கடைப்பிடிக்க வேண்டும், மனம் அமைதி பெறவும், மானிட வாழ்க்கையின் கஷ்டங்களில் இருந்து விடுபடவும் ஆலய தரிசனம் இன்றியமையாததாகிறது. நமக்கு கிடைத்துள்ள அரிய வாய்ப்பாகப் பயன்படுத்தி ஆலயங்களை பாதுகாக்க வேண்டும். கட்டிடம் கட்டுவது மட்டும் பாதுகாப்பாகாது. ஆலயங்களின் மேன்மையை உணர்ந்து அதன் தன்மை மாறாமல் பாதுகாக்க வேண்டும். அதற்கான சில யோசனைகள்

7 ஆலயங்களுக்கு மிகவும் இன்றியமையாதது அங்கு எழுந்தருளியுள்ள எம்பெருமானின் ஸாந்நித்தியம் ஆகும். அதற்கு அர்ச்சகர்களின் அர்ப்பணிப்பும் தவறாமல் செய்யும் பூஜையும் இன்றியமையாதது. அந்தந்த கோவில்களில் ஏற்படுத்தப்பட்டுள்ள ஆகம விதிகளை சிறிதும்

DRAFT V.S.Jeyabal

மாற்றாமல் கடைப்பிடிக்க வேண்டும். நேரம் தவறாமல் பூஜை செய்ய வேண்டும். மேலும் வரும் பக்தர்களிடம் அன்பாகவும், கருணையாகவும் நடந்து கொள்ளவேண்டும். பலவித துன்பங்களுக்கு ஆட்பட்டு அதிலிருந்து விடுபட பகவானை நாடி வருபவர்களை நாம் மனதாலோ, உடலாலோ துன்பப்படாமல் பார்த்துக் கொள்ளவேண்டும். தவறு செய்வது மனித இயல்பு, அப்படிச் செய்பவர்களிடம் நாம் பொறுமையாக எடுத்துச் சொல்லி அந்த தவறை அவர்கள் மேலும் தொடராமல் பார்த்துக்கொள்ள வேண்டும். இதற்கு அர்ச்சகர்கள், பரிசாரகர்கள், ஆசார்ய புருஷர்கள், தீர்த்தகாரர்கள், ஸ்தலத்தார்கள், சிப்பந்திகள், அதிகாரிகள், அரசாங்கம் ஒத்துழைக்க வேண்டும்

8 தூய்மையை கர்ப்பக்ருஹம் தொடங்கி பிரசாதங்கள் வரை கடைபிடிக்க வேண்டும். வாத்யங்கள் வாசிப்பவர்கள், இசைக்கலைஞர்கள் ஸ்தபதிகள் மற்றும் உள்ள திருக்கோவில் பணியாளர்களை தற்கால சூழ்நிலைக்கு ஏற்ப சம்பளம் முதலியவற்றை வழங்கி அவர்களைப் பாதுகாக்க வேண்டும். ஆன்மீகத்தில்

DRAFT V.S.Jayabal

நாட்டமுள்ளவர்களையே திருக்கோவில் பணிகளில் அமர்த்த வேண்டும். இந்த அறிய கலைகள் அழியாமல் இருக்க வேத, ஆகம பாடசாலைகள், (அர்ச்சக, பரிசாரர்களுக்கு) தர்ம சாஸ்த்ரங்களுக்கான பாடசாலை, ஆசார்ய ஸ்தலஸ்தார்களுக்கு சிற்ப பாடசாலை, ஸ்தபதிகளுக்கு, நாட்டி, சங்கீத பாடசாலை இசைக் கலைஞர்களுக்கும் பொதுமக்களுக்கும் தர்ம போதனை செய்ய வகுப்புகளும் ஏற்படுத்தி, அதில் தகுதி பெற்றவர்களையே திருப்பணிகளில் ஈடுபடுத்த வேண்டும், நம் காலத்தில் புராதனமான சின்னங்களை அதற்குண்டான பழைய வழிகளிலேயே பராமரிக்க வழி செய்தால் அதுவே உண்மையான பாதுகாப்பாகும். இதனால் உலகெங்கும் அமைதியும் அன்பும் அறமும் அழைத்து உலகம் இன்புற்றிருக்கும்.

DRAFT V.S.Jayabal

# Bibliography

இந்த கட்டுரைகளை தொகுக்க உதவிய நூல்கள்:

1. ஸ்வாமி தேசிகனின் ஸ்ரீமத் ரஹஸ்யத்ரைய ஸாரம்
2. ஸ்ரீ பாஞ்சராத்ர ரக்ஷை மற்றும் ஸ்தோத்திரங்கள்
3. தேரெழுந்தூர் உ.வே. ஸ்ரீராமன் பட்டாச்சார்ய ஸ்வாமியின் வசன ஸாரம்
4. ஈஸ்வர, பரமேஷ்வர, பாத்ம ஸம்ஹிதைகள்

**குறள் 5:**



**இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்**
**பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு.**

விளக்கம்:

**கடவுளின் மெய்மைப் புகழையே விரும்புபவரிடம் அறியாமை இருளால் வரும் நல்வினை, தீவினை என்னும் இரண்டும் சேருவதில்லை.**



DRAFT
vs.Jayabal

# 2.14 வைஷ்ணவ ஜீயர் மற்றும் மடாதிபதிகளின் பரிந்துரைகள்

|| श्रीः ||



HH 46th Jeer



SRI AHOBILA MATH
No. 8-A, Aarathi Nagar
(Behind Selaiyur Police Station)
East Tambaram, Chennai 600 059

|| श्रीमते श्रीलक्ष्मीनृसिंह परब्रह्मणे नमः ||

|| श्रीमते श्रीलक्ष्मीनृसिंह दिव्य पादुका सेवक श्रीवण्शठकोप श्री नारायण यतीन्द्र महादेशिकाय नमः ||

## SRI AHOBILA MATH

శ్రీ అహోబిల మఠం　　श्रीमदहोबिल मठम्　　Sri Ahobila Math

**போதமர் செல்வக்கொழுந்து புணர் திருவெள்ளறையான்**
**திருக்கோயில் திருப்பணி..**

***மங்களானி பவந்து.***

*பூலோக வைகுண்டமாம் ஸ்ரீரங்கம் ஸ்ரீரங்கனாதர் திருக்கோ்யிலின் உபகோயிலாம் திருவெள்ளறை ஸ்ரீ புண்டரீகாக்ஷபெருமாளின் 2 நிலை வடக்கு ராஜகோபுரம் பூர்த்தியாகமல் உள்ளதை 7 நிலை கோபுராமாக புனர்நிர்மாணம் செய்ய கோயம்பத்தூர் பீளைமேடு வாசிகளான ஸ்ரீ.V.S.ஜெயபாலன் மற்றும் ஸ்ரீ.S.வேலுமணி குடும்பத்தார், திருப்பணி செய்ய விழைந்துள்ளதாக அறிந்தோம்.*

*இந்த நற்கார்யத்தை செய்ய இடையூறு செய்யும் வகையில் இம்மாதிரி "வடக்கு கோபுரத்தை" திருப்பணி செய்யக் கூடாது என்றும், இதனால் சில எதிர்விளைவுகள் ஏற்பட்டு நாட்டுக்கும், இந்த க்ஷேத்ரத்திற்கும் கேடுகள்விளையும் என்றும் எதிர்ப்பு பரவிவருவதாகவும் அறிந்தோம்.*

*தற்போது, பலநூறு ஆண்டுகளாக பூர்த்தி பெறாமல் இருந்து 1987-ல் பூர்த்தி பெற்று நாளதுவரை நன்றாகவே இருந்து வரும், ஸ்ரீரங்கம் தெற்கு (மொட்டைகோபுரம்) ராயகோபுரம், ராஜகோபுரமாக நிர்மாணிக்கப் பெற்று நன்றாகவே இருந்து வருகிறது. ஆரம்பகாலத்தில் இந்த திருப்பணியைக்கூட சிலர் குறைகூறினார்கள்.*

*இந்த ராஜகோபுர திருப்பணியை பூர்த்தி செய்த ஸ்ரீ அஹோபில மடம் 44-வது பட்டம் ஸ்ரீவண்சடகோப ஸ்ரீவேதாந்த தேசிக யதீந்த்ர ஸ்வாமி, விஷமிகளுக்குபதில் அளிக்கும் வகையில் "பழைய ராஜகோபுரத்தின்" மீது தான் பல அடுக்குமாடிகளைக் கொண்ட கோபுரம்கட்டப்படுகிறது. பெரியோர்கள் நன்கு ஆலோசித்து ஆரம்பித்து வைத்த இந்ததிருப்பணி தற்போதய காலகட்டத்தில்தான் பூர்த்தியானது. அதுபோல் திருவெள்ளறையில் 2 நிலைகள் உள்ள வடக்கு ராஜகோபுரதை 7 நிலை கோபுரமாக கட்டுவதனால் (புதுப்பிப்பதனால்) எந்தவித சாஸ்த்ரவிரோதமும் இல்லை என்பதை தெரிவித்து 7 நிலை கோபுராமாக கட்ட விழைந்துள்ள பீளைமேடு ஸ்ரீ.V.S.ஜெயபாலன் மற்றும் ஸ்ரீ.S.வேலுமணி குடும்பத்தாரின் முயற்சிகள் வெற்றி பெற்று ஸ்ரீ புண்டரீகாக்ஷ பெருமாளின் அனுக்ரஹத்திற்கு பாத்ரர்களாகவேணுமாக ஆசீர்வதிக்கிறோம்.*

***லோகா: ஸமஸ்தா:ஸுகினோபவந்து,***

***சார்வரி திருவாடிப்பூரம் (24.07.2020)***

H H THE JEER OF SRI AHOBILA MUTT

Central Office: 30, Venkatesa Agraharam, Mylapore, Chennai-600004. Email:azhagiyasingarsam@gmail.com

श्री:

Srimathe Varaha Mahadesikaya Namaha
Srimathe Rangaramanuja Mahadesikaya Namaha
Srimathe Srinivasa Ramanuja Mahadesikaya Namaha
Srimathe Vedantha Ramanuja Mahadesikaya Namaha
Srimathe Ranganatha Mahadesikaya Namaha

Srimathe Srinivasa Mahadesikaya Namaha
Srimathe Nigamantha Mahadesikaya Namaha
Srimathe Bhagavath Bhashyakaraya Mahadesikaya Namaha
Srimathe Ranganatha Mahadesikaya Namaha
Srimathe Ranganatha Divyamani Padhukabhyam Namaha

# Srirangam Srimad Andavan Ashramam

**Headquarters : Melur Road, Srirangam, Trichy - 620 006.**
**178, North Chitra St., Srirangam,Trichy - 620 006.**

ஸ்ரீமதே ராமானுஜாயநம:

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

பூலோக வைகுண்டம் என்னும் பெருமை பெற்ற ஸ்ரீரங்கம் ஸ்ரீரங்கநாதர் திருக்கோயிலைச் சார்ந்ததான திருவெள்ளறையில் அருள்பாளிக்கின்ற எம்பெருமான் திருவெள்ளறை நின்றான் ஸ்ரீபுண்டரீகாக்ஷப் பெருமாளின் 2 நிலை கொண்ட வடக்கு ராஜகோபுரம் பூர்த்தி செய்யாமல் நினைத்து வருந்தி அதை செப்பனிட வேண்டும் என்ற எண்ணங்கொண்டவர்களான 2-ம் நிலையை 7 நிலையாக கோபுரமாக (புணர்நிர்மாணம்) கோயம்புத்தூர் பீளமேடு வாசிகளான திருவாளர்கள் ஸ்ரீ ஜெயபாலன் மற்றும் அவர் சகோதரர் Dr.ஸ்ரீ S.வேணுமணி குடும்பத்தார் திருப்பணி செய்ய விழைந்துள்ளதாக நன்கு அறிந்தோம். இத்திருப்பணி நடைபெறுவதற்கு பல இன்னல்கள் ஏற்பட்டன. இத்திருப்பணி அரசர் காலத்திலே நடைபெற முடியாமல் இருந்த காரணத்தால் அவை எவ்வித விரோதமின்றி நடைபெற ஆசைப்படுகின்றனர்.

ஸ்ரேயாம்ஸி பஹு"விக்னாநி பவந்தி மஹதாமபி
அஸ்ரேயஸி ப்ரவ்ருத்தானாம் தூரம்யாந்தி விநாயகா:

ஸ்ரீமத்ராமாயணம்

ஸ்ரீ:




# Srirangam Srimad Andavan Ashramam

Headquarters : Melur Road, Srirangam, Trichy - 620 006.
178, North Chitra St., Srirangam, Trichy - 620 006.


-2-

நன்மை ஏற்படுவதற்கு (பெரியோர்களுக்கும்) இடையூறுகள் பல ஏற்படும். நன்மையானது தீய காரியங்களில் ஈடுபாடு உடையவர்களுக்கு வெகு தூரத்தில் இருக்கும்.

வள்ளுவப் பெருந்தகையும்,

*அறனீனு மின்பமு மீனுந் திறனறிந்து*
தீதின்றி வந்த பொருள் என்றார் செங்கோலன்.

நீதி தவறாத கடவுட் பூசை செய்தல் பயன் எய்தல் தேவ பூசையும் தானமும் செய்து அறத்தின் பயன் அடைய வேண்டும் என்றும் அறத்தின் பயன் யாது என்றால் வெகு காலம் அழியாது நின்று எல்லாரும் அனுபவிக்கப்படும் தன்மையை கூறுகிறார்.

ஆவர்த்தனம் புணராவர்த்தனம் புதியதாய் நிர்மாணம் செய்தல் நிர்மாணம் செய்த ஆலயங்கள் சிதிலமடைந்துவிட்டால் மறுபடியும் திருப்பணி செய்ய வேண்டியதை புணருத்தாரணம் என்று ஆகமங்களில் பெரியோர்கள் தெளிவாக சொல்கிறார்கள். அவ்வாறு திருவெள்ளறை நின்ற பெருமாளின் வடக்கு கோபுரம் இரண்டாம் நிலையோடு நின்றுவிட்ட திருப்பணியை நன்கு நடத்த ஆலயங்களுக்கு ஆகம விதிகள் ஏற்பட்டுள்ளன. இத்திருக்கோயில்களில் விமானங்கள் கலைகள் கோபுரங்கள் இவைகள் எல்லாம் மிகவும் பழுது அடைந்த நிலையில் உள்ளவை

ஸ்ரீ:

Srimathe Varaha Mahadesikaya Namaha
Srimathe Rangaramanuja Mahadesikaya Namaha
Srimathe Srinivasa Ramanuja Mahadesikaya Namaha
Srimathe Vedantha Ramanuja Mahadesikaya Namaha
Srimathe Ranganatha Mahadesikaya Namaha

Srimathe Srinivasa Mahadesikaya Namaha
Srimathe Nigamantha Mahadesikaya Namaha
Srimathe Bhagavath Bhashyakaraya Mahadesikaya Namaha
Srimathe Ranganatha Mahadesikaya Namaha
Srimathe Ranganatha Divyamani Padhukabhyam Namaha

# Srirangam Srimad Andavan Ashramam

**Headquarters : Melur Road, Srirangam, Trichy - 620 006.**
**178, North Chitra St., Srirangam, Trichy - 620 006.**

-3-

களாகும். புதியதாகவோ அல்லது அந்த பழுது அடைந்ததை சரிசெய்வதற்கு வழிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன.

பூர்வம் விமானம் யத்ரவ்யம் சிலாத்யந்தரம்பவேத்
ஸலஷ்னம் வா தத்பின்னம் தத்ருகேவ ப்கல்கயேத்
ஏவம் பிம்பே விமாநேச பாகஸ்தானேச மண்டபே
கோபுரே வாபி சாலே வாததா ஜீர்னேது
சாலகோபுர பீடாதிவலனே ஜீர்ன ஏவவா

(ஸ்ரீப்ரஸ்னசம் 457, 458)

த்ருடம் ஸ்ரீலாதிபி : குர்யாத் விஸ்தீர்ணமதவான்யதா

(பாத்ம ஸம்மிதை 47-ம் அத்யாயம்)

விமானத்தில் உள்ள சாலைகள், பீடங்கள், கோபுரங்கள், சிலைகள் இவைகள் எல்லாம் பழுது அடைந்து இருந்தால் குறுகியோ அல்லது விஸ்தாரம் செய்தோ கொள்ளலாம். ஆகையால் தாங்கள் இத்திருக்கோயிலின் திருப்பணியை நன்கு செப்பனிட கோயம்புத்தூர் பீளமேடு வாசிகளான திருவாளர்கள் ஸ்ரீ ஜெயபாலன் மற்றும் அவர் சகோதரர் **Dr.ஸ்ரீ S.வேணுமணி** குடும்பத்தார் அனுமதி தருமாறும் இவர்களுக்கு திருவெள்ளறை நின்ற பெருமானின் ஆசீர்வாதம் என்றும் இருக்க மங்களாசனங்கள் செய்கிறோம்.

இவண்
ஸ்ரீ வராஹ யதி:

ஸ்ரீராமஜெயம்

ஸ்ரீருக்மிணீநாயிகா ஸமேத ஸ்ரீவேங்கடகிருஷ்ணபரப்ரஹ்மணே நம:




SRI VAIKHANASA SEVA RATNAM, SRI VAIKHANASA KULAPATI, SRI VAIKHANASA BHAGAWAT SASTRA BHASKARA, SRI VAIKHANASA AGAMA RATHNAKARA,

**Dr. N.S. Parthasarathy Bhattacharyar**

★ Secretary, South Indian Vaikhanasa Archakas' Association

★ Editor, 'Srivaikhanasam' Monthly magazine.

★ PradhanaAdhyapaka, Sri Vaikhanasa Bhagawat Sastra Pathasala

★ New 92/Old 80 , Flat - 3, T.P. Koil St, Thiruvallikeni, CHENNAI - 600 005, INDIA.

☎ 8778671827; 9444 7140 99; 95 66 11 4676


---

பெருமாள் கோவிலில் விமானம் ப்ராகாரம் ராஜகோபுரம் போன்றனவற்றை கட்டி பெருமாளுக்கு கைங்கர்யம் செய்வது பெரிய பாக்யமாகும். அத்தகைய ஸௌபாக்யம் பெற்றவர் அனைத்து இம்மை மறுமை பலன்களும் பெறுவார்.

அதிலும், ஒரு கோவிலில் ஆரம்பித்து அஸ்திவாரம் கட்டி நின்று போன கைங்கர்யத்தை எடுத்துச்செய்யும் தன்யவான்கள் அபூர்வம்.

அத்தகையோர் கைங்கர்யம் செய்யும்போது அதற்கு நம்மாலான உதவிகளை அவசியம் செய்யவேண்டும்.

ஸ்ரீரங்கத்தில் தெற்கில் அஸ்திவாரம் இருந்தும் கட்டப்படாமல் இருந்த ராஜகோபுரத்தை பல்வேறு மஹநீயர்கள் ஆதரவுடன் கட்டி அஹோபிலமடம் முக்கூர் ஸ்ரீமத் அழகியசிங்கர் ஸ்வாமி பெரும் பாக்யம் அடைந்தார்.

அதுபோல, திருவெள்ளரையிலும் ஸ்ரீபுண்டரீகாக்ஷப்பெருமாளுக்கு ராஜ கோபுரம் அஸ்திவாரம் இருந்தும் சிறிது கட்டப்பட்டிருந்தும் பல்வேறு படையெடுப்பு மற்றும் தடைகளால் நின்றது. அந்த ராஜகோபுர கைங்கர்யத்தை எடுத்துச் செய்ய ஒருவர் இப்போது தலைப்பட்டால் அவருக்கு அனுமதி அளித்து கட்ட வைப்பதே மிகவும் உத்தமமான செயலாகும். இத்தகு கைங்கர்யத்தில் அனைவரும் ஈடுபட்டு தானும் சிறப்பிப்பதே சிறப்பாகும். இதில் முக்யமாக ஸ்ரீவைகானஸ பகவத் சாஸ்திரத்தில் ப்ருகுமஹர்ஷி அருளிய க்ரியாதிகாரத்தில் 1953-இல் திருமலை திருப்பதி தேவஸ்தானம் மூலம் அச்சான புத்தகத்தில் 332-ஆம் பக்கத்தில் ஒரு கோவிலை நவீகரணம் செய்யும்போது அதாவது ஜீர்ணோத்தாரணம் செய்யும்போது உள்ள விதிகளும் உதாரணமாகக் கொள்ளத்தக்கன.

அதவா ம்ருண்மயாநாஞ்ச யதி வ்ருத்திம் ததேச்சதி | பரிதோ வர்தயேதேவம் ப்ராச்யுதீச்யைரதாபி வா || 39 || யத்யக்ரே க்ராமவீதீ ஸ்யாத் திஸ்ருஷு ஆஶாஸு வர்தயேத் | ஸாலாநாம் மண்டபாநாஞ்ச பார்ஶ்வயோரக்ரதஸ்ததா || 40 || வ்ருத்திம் குர்யாத் விஶேஷேண ப்ராச்யுதீச்யைரதாபிவா | உதீச்யாம் அக்ரதஶ்சைவ வர்தயேத் பசநாலயம் || 41 || ஏகதஸ்ஸங்கடஞ் சேத்து நதீஸாகரபர்வதை: | வர்தயேத் அந்ய பார்ஶ்வேஷு நாத்ர கார்யா விசாரணா || 42 || தக்ஷிணாபர வ்ருத்திஶ் சேத் க்ஷேமஸ்ஸ்யாத்து ந ஜாதுசித் | ப்ராகாரமண்டபாதீநாம் ஸாலாநாம் ந ஸமாஹரேத் || 43 || மண்டபாதிஷு ஸர்வேஷு ஹீந த்ரவ்யக்ருதேஷு ச | ந்யூநம் வாப்யதிகம் வாபி காரயேத் தேஶிகோத்தம: || 44 ||


பொருள்- மண்ணாலான கோவிலை கருங்கல்லால் கட்டுவது போன்ற வ்ருத்திக்கு கொண்டு வருவது சிறப்பு. கிழக்கிலும் வடக்கிலும் வ்ருத்தி செய்யலாம். க்ராமத்தெருக்கள் வழக்கமான கிழக்கு தவிர மற்ற வீதிகளில் இருந்தால் அதற்கேற்ப ஸாலைகள் (ஸால கோபுரங்கள்) மண்டபங்கள் போன்றவையும் இரு பக்கமும் முன்பும் வ்ருத்தி செய்வதும் சிறப்பாகும். அதற்கேற்ப மடைப்பள்ளி கூட இடம் மாற வாய்ப்புகள் உண்டு. நதீதீரத்தின்கண் உள்ள கோவிலிலும் அந்த கரையின் தன்மைக்கேற்ப மற்ற திசைகளில் கோவிலை வ்ருத்தி செய்வதும் சிறப்பே ஆகும். தெற்கிலும் மேற்கிலும் கூட கோவிலை வ்ருத்தி செய்ய ஸந்தர்பம் அமைந்தால் அதுவும் சிறப்பாகும்.

நாராயணன் கோவிலுக்கு நாலு புறமும் வாசல் தான் என்பதே தமிழன் மூதுரை.

குறைவான த்ரவ்யங்கள் கொண்டு நின்று போன கைங்கர்யங்களை எப்பாடுபட்டாவது சிறப்பாக செய்து பூர்த்தி செய்வது சிறப்பாகும். அத்தகைய கைங்கர்யத்தில் கோவில் அர்ச்சகர்களும், வேதப்ரபந்த அத்யாபகர்களும் பாதுகாக்கும் நிர்வாஹத்தினரும் முனைவது சிறப்பாகும்.

இதனையெல்லாம் மனதில் கொண்டு அவசியம் எந்தெந்த கோவிலில் எல்லாம் கைங்கர்யம் நிலுவையில் உள்ளதோ அங்கெல்லாம் கைங்கர்யம் நிர்வஹிக்க தன்யவான்கள் - அதாவது பெருமாள் தாயார் திருவருள் பெற்று நிதியை சரிவர பயன்படுத்துவோர் முனைய வேண்டும் என்று உளமாரக் கேட்டுக்கொள்கிறோம்.

மங்களானி பவந்து



Signed - N.S. பார்த்தஸாரதி பட்டாச்சார்யர், திருவல்லிக்கேணி

ஸ்வஸ்திஸ்ரீ சார்வரி வருஷம் ஆடி 17 சனிக்கிழமை - 1.08.2020



✆ 95-4635 - 265291

# ஸ்ரீ ஸ்ரீ பேரருளாள ராமாநுஜ ஜீயர் ஸ்வாமி ஸந்நிதி

திரு ஜீயர் மடம்

திருக்குறுங்குடி - 627 115.

தேதி: 6/8/2020

ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம: ஸ்ரீகுருங்க முநயே நம: ஸ்ரீமத் வரவர முநயே நம:

மங்களாசாசனம்:

- "செம்பொன் மதிள் வெள்ளறையாய் செல்வத்தினால் வளர்பிள்ளாய்" என்று பெரியாழ்வாரும், திருமங்கை ஆழ்வாரும் போற்றிப் பணிந்த திவ்ய தேசம் திருவெள்ளறை.

- இத்தலத்தில் வடக்கு ராஜகோபுரம் திருப்பணி இரண்டு நிலைகளுடன் முற்றுப் பெறாமல் உள்ளது. "மேலையார் செய்வனகள்" என்ற ஸ்ரீ ஆண்டாள் திருவாக்கின்படி, நம் பூர்வர்கள் நியமனத்தின் பேரில் இத்திருப்பணி தொடங்கப்பட்டிருக்கிறது. ஏதோ படையெடுப்பாலோ அல்லது களேபரத்தாலோ இத்திருப்பணி தடைப்பட்டு தொடர்ந்து நடைபெறாமல் போயிருக்கலாம்.

- நமக்காவாரை நாமே தேடிக் கொள்வோம்" என்று திருவுள்ளம் பற்றிய செந்தாமரைக் கண்ணன் கோயமுத்தூரைச் சேர்ந்த தனவான்களான ஸ்ரீமாந்கள் ஸ்ரீஜெயபாலன் மற்றும் அவர் சகோதரர் Dr.ஸ்ரீ.வேலுமணி அவர்களுடைய திருவுள்ளத்தில் புகுந்து இந்த மகத்தான கைங்கர்யத்தை பூர்த்தி செய்ய நியமனம் செய்தான். அவர்களும் எம்பெருமானின் ஆஜ்ஞையை சிரமேற்கொண்டு இக் கைங்கர்யத்தில் ஈடுபட்டு வந்தனர். திருவெள்ளறை கோவில் ப்ரகாரங்கள் முழுவதும் கல்தள திருப்பணிகளை மக்கள் அனைவரும் வியக்கும் வண்ணம் சிறப்பாக முடித்தமை மிகவும் பாராட்டுதற்குரியது.

- விடுபட்ட திருப்பணிகளைச் செய்து முடிக்க தனவான்கள் கிடைப்பது மிகவும் அரிது. எத்தனையோ திருக்கோயில்களில் பாதியில் நின்ற திருப்பணிகள், பல எதிர்ப்புகளுக்கிடையே மக்களின் பெரும்பாலான ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டு இருக்கின்றன.

Additional Sheet

ஸ்ரீ:

Srimathe Ramanujaya Namaha : Sri Kurunga Munaye Namaha : Srimath Varavara Munaye Namaha :

# Thiru Jeer Mutt

Thirukurungudi - 627 115.

..2..

எனவே வடக்கு ராஜகோபுரத் திருப்பணி கோயம்புத்தூர் சகோதரர்களால் எவ்வித எதிர்ப்புகளுக்கும், சலசலப்புகளுக்கும் அஞ்சாமல் விரைவில் கட்டி முடித்து மஹா ஸம்ப்ரோக்ஷணம் கண்டருள ஸ்ரீவைஷ்ணவ நம்பியின் திருவடித் தாமரைகளிலே ப்ரார்த்தித்துச் செய்யும் மங்களாசாசனம்.

திருக்குறுங்குடி

06.08.2020

தாசன்

(இராமாநுஜன்)
ஸ்ரீஸ்ரீ பேரருளாள ராமாநுஜ
ஜீயர் ஸ்வாமிகள்



## SRI VANAMAMALAIMUTT

## NANGUNERI – 627 108

PHONE : 04635 – 250119

EMAIL: svmutt100@gmail.com

ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம: ஸ்ரீமத் வரவரமுநயே நம:
ஸ்ரீவானமாமலை [illegible] நம:

பெருமாள் கோவிலில் ராஜகோபுரம் என்பது
முக்கியமானது. "கோபுர தரிசனம் கோடி புண்ணியம்",
[illegible] ஸ்ரீரங்கம் [illegible]
[illegible] திருக்கோயிலைச் சேர்ந்த திருவெள்ளறை ஸ்ரீபுண்டரீ-
காக்ஷப் பெருமாள் கோவிலின் [illegible] ராஜ கோபுரம்
[illegible] 7 நிலை [illegible]
[illegible]
ராஜகோபுரமாக கட்ட வேண்டும் என்ற எண்ணத்தை
எம்பெருமான் [illegible]
[illegible] மற்றும் அவர் சகோதரர் [illegible]
[illegible]
மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

முற்காலத்தில் ராஜாக்கள் [illegible]
[illegible] இடையில் [illegible]
[illegible]
[illegible]
[illegible] இல்லை.

[illegible] இந்த ராஜ
கோபுர கைங்கர்யத்தைச் செய்து ஸ்ரீபுண்டரீகாக்ஷப் பெரு-
மானின் கிருபைக்குப் பாத்திரமாக வேண்டும்.
[illegible]
[illegible]
[illegible]
[illegible] அடியேன். ஸ்ரீ ராமாநுஜ [illegible]

வானமாமலை, 13-8-2020